

கல்கி
KALKI
21·5·1967
40 காசு

வேர்க்கடலே உனக்கு
பாரி மிட்டாய் எனக்கு


PRS/3844

ருசித்திருக்கிறீர்களா?
லாக்டோ பான் பான்ஸ்
மில்க் டாபிஸ்
மிக்ஸட் ப்ருட்ஸ்
சூபர்
பட்டர்ஸ்காச்

பிறருடன் பங்கிட்டு
ருசித்து மகிழுங்கள்
பாரி மிட்டாய்
இருக்கையில்
வாழ்க்கை மேலும்
இனிக்கிறது.


Parry's

-பாரி உயர்தர மிட்டாய் தயாரிப்பாளர்கள்
பாரிஸ் கன்பெக்ஷனரி லிமிடெட்,
மதராஸ்.




பொருள்களை வைக்க கீரா காபினெட்டுகள்!


கீரா ஸ்டீல் காபினெட்டுகள் அழகான மெருகுள்ளவை... துருவினாலும் அரிப்பினாலும் பாதிக்கப்படாமலிருக்கும்படி 'ட்ரீட்' செய்த எஃகினால் தயாரிக்கப்பட்டவை. இவை நீண்டகாலம் நிலைக்கின்றன. பொருள்களை வைக்க இவை வசதியானவை, பத்திரமானவை. எல்லா காபினெட்டுகளுக்கும் பத்திரமாகக பூட்டும் ஏற்பாடு உள்ளது. இவற்றின் ஷெல்ஃபுகளை வேண்டும்படி பொருத்திக்கொள்ளலாம்; பொருத்தமான 'ஃபிட்டிங்குகள்' கூட கிடைக்கும். வீட்டிலும் சரி, ஆஃபீஸிலும் சரி, உங்கள் பொருள்களை பத்திரமாக வைக்க கீரா காபினெட்டுகளே சிறந்தவை!



'பாபுலர்': 1641 எம்.எம். x 831 எம்.எம். x 481 எம்.எம். (65"x33"x19")



'யுடிலிடி': 1971 எம்.எம். x 910 எம்.எம். x 481 எம்.எம். (78"x36"x19")



'மிஜட்': 1270 எம்.எம். x 760 எம்.எம். x 481 எம்.எம். (50"x30"x19")

JWT KSW-4483

Khira

கீரா ஸ்டீல் ஒர்க்ஸ் பிரைவேட் லிமிடெட்
ஸ்வாமி விவேகானந்தா ரோட், ஸாந்தா க்ருஸ், பம்பாய்-54

கல்கி

பொருளடக்கம்

பிலவங்க, வைகாசி 7 - மே, 21

நினைவுத் திரையில்...

கிருபா சமுத்திரத்தின் தகப்பனார் ஒரு பெரிய தீர்க்கதரிசியாக இருந்திருக்க வேண்டும் என்று அவருடைய நண்பர்கள் ஏகமனதாகத் தீர்மானித்திருந்தனர். தகப்பனார் தீர்க்கதரிசியாக இல்லாவிட்டால் பிள்ளைக்கு அவ்வளவு பொருத்தமான பெயரை வைத்திருக்க முடியுமா? சாதாரணமாகப் பெயருக்கும் மனிதனுக்கும் பொருத்தமில்லாமல் இருப்பதைப் பார்ப்பதுதான் சகஜம். கிருபா சமுத்திரம் அதற்கு நேர்மாறாக விளங்கினார்.

சிறு வயதிலிருந்தே அவர் இளகிய இருதயம் படைத்தவராயிருந்தார். அவருடைய தம்பிக்கு விளக்கெண்ணெய் புகட்டினால் அதைப் பார்க்க மனம் சகியாமல் அவர் 'ஓ'வென்று கதறுவாராம். விளக்கெண்ணெய் சாப்பிட்ட குழந்தையைச் சமாதானப் படுத்துவதைவிட அவரைச் சமாதானப்படுத்துவது தான் மிகவும் சிரமமாக இருக்குமாம்.



[- கோமாளி 'சோதனை' என்ற சிறு கதையிலிருந்து.

கல்கி, ஏப்ரல் 11, 1948

நல் வாழ்த்துக்கள்!



பாரதத்தின் புதிய ராஷ்டிரபதி டாக்டர் ஜாகிர் ஹுசேன்



தமிழ்த்திருநாடு தன்னைப் பெற்ற
தாயென்று கும்மிடி பாப்பா — பாரதியார்

மலர் 26 □ இதழ் 42

புதிய ராஷ்டிரபதி


இந்தியக் குடியரசின் மூன்றுவது ராஷ்டிரபதியாகியுள்ள டாக்டர் ஜாகிர் ஹுஸைன் அவர்களையும், புதிய உப ராஷ்டிரபதியாகப் பதவி ஏற்கும் ஸ்ரீ வி. வி. கிரி அவர்களையும் வாழ்த்தி வரவேற்கிறோம்.

ராஷ்டிரபதி அவர்கள் தேர்ந்த காந்தியவாதி; பெயரெடுத்த கல்வித் துறை நிபுணர்; கௌரவமும் பெருந்தன்மையும் நிறைந்த பண்பாளர்.

உபராஷ்டிரபதி அவர்களும் இந்திய அரசியல் உலகில் நீண்ட காலமாகப் பரிசயமானவர். தொழிலாளர் நலனுக்காகக் குறிப்பிடத்தக்க தொண்டு புரிந்த பெரியவர்.

தேசத்தின் தலைமைப் பீடமேறுபவரின் பெருமையைப் பாராட்டும்போதே, இன்றைய நிலையின் தேவையையும் எண்ணிப் பார்க்கிறோம். மாநிலங்கள் பலவற்றில் காங்கிரஸல்லாத அரசாங்கங்கள் அமைந்துள்ள இன்று, பொருளாதார நெருக்கடியின் விளிம்பில் தேசம் நிற்கின்ற இன்று, மத்திய அமைச்சரவையாக அமைந்துள்ள காங்கிரஸ் பழையபடி தனது யதேச்சாதிகாரப் போக்கிலேயே செல்லுமாயின் விநாசம்தான் ஏற்படும். பார்லிமென்டில் தனக்குக் குறைந்த அளவே பெரும்பான்மையிருப்பினும், காங்கிரஸின் ஆணவம் குன்றவில்லையாதலால் பழைய கதியிலேயேதான் அது இனியும் செல்லும் என்று அஞ்சவேண்டிய நிலை இன்றுள்ளது. இந்நிலையில் அதற்கு அறிவு உணர்த்தி யாரேனும் அதனைக் கட்டுப்படுத்த இயலுமெனில் அது ராஷ்டிரபதி ஒருவர்தான். மந்திரி சபை முடிவுகளுக்கு மாறியும் மீறியும் ராஷ்டிரபதி செயல்பட அரசியல் சாஸனம் அனுமதிக்கிறதா என்ற வாதப் பிரதிவாதங்களில் இன்று நாம் இறங்க வேண்டாம். அமைச்சரவையின் மசோதாக்களைச் சட்டமாக்கிக் கையெழுத்திடும் பொறுப்புப் பெற்ற ராஷ்டிரபதி, அரசாங்கத்தின் கொள்கைகள் குறித்து ஆலோசனைகள் கூறவும் உரிமை பெற்றிருப்பது நிச்சயம். மந்திரி சபை இவற்றை ஏற்காவிடின் இது போன்ற சந்தர்ப்பத்தில் பதவியிலிருந்தே விலகி விடுமளவுக்கு ராஷ்டிரபதி துணிவு படைத்தவராக இருந்தால், அதுவே சர்க்காருக்கு ஒரு நல்ல கட்டுப்பாடாக அமையும் என்று ராஜாஜி எழுதியதை இப்போது நினைவு கூருகிறோம்.

உப ராஷ்டிரபதி ஸ்ரீ வி. வி. கிரி



மதச்சார்பின்மை பிழைத்தது!

எம்மதமும் சம்மதம் என்ற நம் கொள்கைக்கு ராஷ்டிரபதித் தேர்தலைப் பரீட்சையாக்கி யிருக்க வேண்டிய அவசியம் இல்லை. ஆனால் அவசியமோ, அவசிய மில்லையோ இந்தக் காரியத்தைக் காங்கிரஸ் மேற்கொண்டு விட்டது. அதன் பின் பலர் கவலையுற்றனர் — வகுப்பு வாதத்தின் மீதே காங்கிரஸ் வேட்பாளர் தோல்வியுற்றால் அது உலக நாடுகளில் நம் மதிப்பைக் குறைத்து விடுமோ என்று. டாக்டர் ஜாகிர் ஹுஸைனின் தேர்வில் வேறெவ்விதத்தில் திருப்தி கண்டாலும் காணவிட்டாலும், வகுப்புவாத அடிப்படையில் வாக்களிப்பு நடைபெறவில்லை என்று திருப்திப்பட ஆதாரம் இருக்கிறது.

பிரியாவிடையும் நல்வரவும்

உலகப் பேரறிஞர்களில் ஒருவரான டாக்டர் ராதாகிருஷ்ணன் அவர்கள், உலகின் போற்றுதலைப் பெறும் வகையில் பாரத ராஷ்டிரபதியாகப் பணியாற்றிவிட்டு ஓய்வு பெற்றுள்ளார். தத்துவ ஞானிதான் ஆட்சி பீடத்திலிருக்க வேண்டும் என்ற பாரத ராஜ தருமத்தையும், ப்ளேட்டோவின் முடிவையும் நிகழ்காலத்தில் நிலைநாட்டி, சகல கட்சிகளும் சகல வகுப்பினரும் பாராட்டும்படி சிறப்புப் பணியாற்றியவர் ஸ்ரீ ராதாகிருஷ்ணன்.



டாக்டர் ராதாகிருஷ்ணன் ஆட்சித் தலைமையில் இருந்தது தேசத்துக்கே ஒரு பெருமை எனக் கருதிய அனைவரும் அவர் பதவியிலிருந்து விலகுவது பற்றி வருந்தாதிருக்க முடியாது. ஆயினும் சென்னையைப் பொறுத்தமட்டில் பிரியாவிடை தரும்போதே வரவேற்பும் நல்கும் அதிருஷ்டம் கிடைத்துள்ளது. தில்லியின் நஷ்டம் சென்னையின் லாபமாகியுள்ளது. டாக்டர் ராதாகிருஷ்ணன் அவர்கள் சென்னையையே பிறந்த வீடாகக் கருதும் ஆந்திரத் தமிழர். இப்போது அவர் சென்னையில் வந்து தங்கி ஆன்மிகப் பணியும் இலக்கியப் பணியும் செய்யப் போவதை ஆவலுடன் எதிர்பார்க்கிறோம். கீழ்ப்பாக்கத்தில் ஒரு பாரதரத்தினமும், மயிலையில் ஒரு பாரத ரத்தினமுமாக இரண்டு பாரத ரத்தினங்கள் வசிக்கும் பெருமை சென்னைக்குக் கிட்டப் போகிறது.

ராஜாஜியின் கருத்துக்கள்

வோட்டுக்கு இத்தனை எண்ணிக்கை என்று கொடுத்திருப்பதால் ராஷ்டிரபதித் தேர்தலில் காங்கிரஸ் வேட்பாளருக்குப் பெரிய மெஜாரிட்டி கிடைத்திருப்பதாகத் தோன்றுகிறது. இதைப் பார்த்துப் பிரமிக்க வேண்டாம். உண்மையில் இருப்பதைவிடப் பலமடங்கு நீளமாக அதிகாலையிலும் மாலையிலும் நிழல் விழுவது போன்றதே இத்தேர்தலின் வோட்டுக் கணக்கும்.

வாக்கெடுப்பைப் பகுத்துப் பார்த்தால், மக்கட்சபையில் எதிர்க்கட்சிகளைவிட ஐம்பதே வோட்டு அதிகம் பெற்றிருந்த காங்கிரஸ், ராஜ்ய சபையில் 119 வோட்டு மெஜாரிட்டி பெற்றதால்தான் இவ்வளவு வித்தியாசம் ஏற்பட்டது புரியும். முன்பு ராஜ்ய சபைக்கு 'ராஜ்யங்களின்குழு' (Council of States) என்று பெயர் இருந்ததிலிருந்து அது ராஜ்யங்களின் நலனை எடுத்துச் சொல்லும் பிரதிநிதிகளின் சபை என்று கொள்ளலாம். ஆனால் உண்மையில், டாக்டர் லோஹியா சொன்னது போல் சலுகை ஆட்சிக்கு இடமாக, காங்கிரஸாரில் ராஜ்ய சட்டசபைகளில் இடம்பெறாமல் மிகுந்தவர்களை அனுப்பி வைக்கும் 'டெபாஸிட் பாங்க்' போலவே ராஜ்ய சபை இருந்து வருகிறது. ராஜ்ய சபையையும் மக்கட் சபையையும் சமமாகக் கருதுவதற்குக் காரணமில்லை.

ராஜ்யங்கள் அளித்த வோட்டைப் பார்த்தால் மொத்தமாகிய 4040-ல் பிரதமரின் வேட்பாளருக்கும் ஸ்ரீ சுப்பாராவுக்குமிடையுள்ள வித்தியாசம் நானூறுதான். காங்கிரஸ் மேலிடத்தின் உத்தரவு, நீண்டதூர டெலிபோன் பேச்சுக்கள், மந்திரிமார்களின் பிரசாரம் இவ்வளவிருந்தும் ஸ்ரீ சுப்பாராவ் 1814 வாக்குப் பெற்றார்.

தமது வேட்பாளரின் வெற்றியால் காங்கிரஸ் தலைவர்களுக்கு இறுமாப்பு ஏற்பட்டு வருகிறது. பிப்ரவரி தேர்தல்களில் அவர்கள் பெற்ற அதிர்ச்சி நீங்கி விட்டது. மத்திய சர்க்காரைக் கூட்டுச் சர்க்காராகவோ, வேறு விதத்திலோ அமைக்க வேண்டும் என்ற யோசனைகளை அடியோடு நிராகரித்து விட்டார்கள். எப்படியோ ஒருவழியில் மீண்டும் பலம் பெற்று, ராஜ்யங்களின் எதிர்ப்பை நசுக்கிவிடலாமென நம்புகின்றனர். ருஷ்யாவின் கம்யூனிஸ்ட் கட்சி போல் இந்தியாவைத் தாமே ஆளமுடியுமென நம்புகின்றனர். சத்தியமே வெல்லும் என்பதில் நம்பிக்கை வைக்காமல், லஞ்சத்தினால் எந்தத் தடையையும் தகர்க்கலாம் என்று நம்புகின்றனர்.

* * *

இன்னமும் நான் நம்பிக்கை இழக்கவில்லை. இவ்வாண்டில் அரசியல் கோஷ்டிகளும், ராஜ்ய அரசாங்கங்களும் அமைந்திருக்கும் விதத்தில் குறைபாடுகள் இருப்பினும், மொத்தத்தில் இது நமது நம்பிக்கையைத் தூண்டுவதாகவே உள்ளது. மத்தியிலும், ராஜ்யங்களிலும் நல்ல நிருவாகம் ஏற்பட முன்னைவிட நல்ல வாய்ப்புக்கள் உண்டாகியிருக்கின்றன. சர்க்காரை நடத்துவோரின் ஆட்சி அனுபவம் அதிகரித்து பரஸ்பர ஆலோசனைகளும் நடைபெற்றால் நல்ல நிருவாகம் நடத்துவது குறித்து ஒரு பொதுத் திட்டம் உருவாக நிச்சயமாக இடமுண்டு. இன்று ஆட்சியேற்றிருப்பவர்கள் நிருவாகத்தை அடியிலிருந்து புதிதாகத் தொடங்கவில்லை என்பதை நினைவு கொள்ள வேண்டும். ஏற்கனவே காங்கிரஸ் கட்சியின் டாம்பீக மாயத்தால் ஏற்பட்ட விளைவுகளின் மீதே புதிதாக வேலை தொடங்கியாக வேண்டும். தேசத்தின் செல்வங்களைத் தாறுமாறுகச் செலவழித்தாயிற்று. தவறான இம்முதலீடுகளையும் திட்டங்களையும் உடனுக்குடன் அடிமட்டமாகத் தகர்த்துவிட முடியாது. ஏற்கனவே மேற்கொண்ட திட்டங்களை இந்நிலையில் கைவிடுவதால் எவ்வளவு நஷ்டமுண்டாகும் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். தவறான அனைத்தையுமே அடியோடு **நிறுத்தி**விட முடியாது; ஆனால் **திருத்தி**விட முடியும்.

நாசகரமான பெர்மிட் லைசென்ஸ் ஆட்சி நீண்ட காலமாக நடந்து வந்துள்ளது. ஒரே அடியில் அதை வீழ்த்திவிட முடியாது. சர்க்கார் தலையீட்டைச் சிறுகச் சிறுகக் குறைத்து அதமபட்சமாக்குவோம். சுதந்திரத் தொழிலுக்கு அதிகபட்ச வாய்ப்புத் தருவோம். பொருள்களை வாங்கும் மக்களின் நலனைக் காக்க இதுவே வழி — பழைய ஏகபோக்கியங்களையே இன்னும் நீடிப்பதல்ல. இவ்வாறு ஒரு பொதுத் திட்டத்தில் சர்க்காரின் குறைந்தபட்சத் தலையீட்டையும், தொழில் துறையின் அதிகபட்ச சுதந்திரத்தையும் சமரஸப்படுத்திய பின்பும், சில தொழில் நிறுவனங்களில் சர்க்கார் ஆதீனம் இருக்கக்கூடும். அப்படிப்பட்ட நிறுவனங்களில் அந்தந்த நிர்வாகக் குழுவிடமே பொறுப்பைத் தந்து அவை சுயேச்சையாக இயங்க அனுமதிக்க வேண்டும். எஞ்சியுள்ள சர்க்கார் ஆதீனத்தின் கொடுமையும் இதனால் குறையும். மந்திரிமார்களும் அரசியல் வாதிகளும் செய்கிற ஊழல்களும் தவிர்க்கப்படும்.

பொதுத் திட்டத்தின் அதிமுக்கியமான, ஜீவாதாரமான அம்சம் ஏழைகளின் நலனுக்கு முதலிடம் தருவதே. இதனால் தொழிலை விஸ்தரிக்கவிடாமல் முதலீட்டாளர்களை நாசமுறச் செய்ய வேண்டுமென்பது பொருளல்ல. செல்வம் ஒரே சீராக விநியோகமாகவில்லையே என்ற ஆத்திரத்தில் முதலீட்டாளர்களை அழிக்கப் பார்ப்பது பொன் முட்டையிட்ட வாத்தை அறுத்த கதையாகவே முடியும். இன்றைய சர்க்காருக்கு மாறாக அமையக்கூடிய சர்க்காரின் அடிப்படைக் கொள்கை ஏழைகளின் நலனே. முக்கியமாக, விவசாயத் துறையில் உள்ள ஏழைகளின் நலனே. நகரப்புறத்தில் வசிக்கும் ஜனத்தொகையை ஓரளவு திருப்திப்படுத்துவதற்காக, சிரமசாத்தியமான விவசாயத்தில் இன்னும் ஒட்டிக்கொண்டிருக்கும் விவசாயியைக் கொள்முதல் விலையைக் குறைப்பதன் மூலம் தண்டிக்கலாகாது. நான் முழுத்திட்டத்தையும் விஸ்தாரமாக எழுதிவிடவில்லை. காங்கிரஸல்லாத எதிர்க் கட்சிகள் ஒன்றுகச் சேர முடியும், ஒரு பொதுத் திட்டத்தை வகுத்துக் கொள்ள முடியும் என்று நான் நம்புவதன் அடிப்படையையே விளக்கியிருக்கிறேன்.

என்ன சேதி?

- தொழிலுலகின் இழப்பு
- தமிழக அரசுக்கு இரண்டு சபாஷ்!
- வங்க அரசே, உஷார்!

தொழிலாளர்கள் நிர்வாகத்தினரின் மீது முற்றுகை செய்து, நிறுவனத்துக்குள்ளேயே அவர்களைச் சிறை வைக்கும் பழக்கம் பெருகி வரும் இன்றைக்கு, முன்பொரு காலத்தில் தொழிலாளர் சுதந்திரம் என்பது தொழிலாளர்களுக்கே தெரியாத ஒன்றாயிருந்தது என்பதை நம்புவது சிரமமாகத்தான் இருக்கும். அப்படிப்பட்ட காலத்தில் தொழிலாளர் சமுதாயத்தை ஒன்றுபடுத்தி அவர்களின் நியாயமான கோரிக்கைகளுக்காகவும், உரிமைகளுக்காகவும் போராடிய பிரமுகர்களில் ஒருவர் ஸ்ரீ டி. எஸ். ராமானுஜம் அவர்கள். இன்று உபராஷ்டிரபதியாகியுள்ள ஸ்ரீ வி.வி.கிரியுடன் சேர்ந்து அவர் பல தொழிற்சங்கங்களின் தோற்றுவாய்க்குக் காரணமாக இருந்திருக்கிறார். தொழிலாளர் பிரச்னைகளை மத்தியஸ்த டிரிப்யூனல்களுக்கு விட்டு அவர்களின் முடிவையே நிர்வாகிகள் தொழிலாளிகள் இருசாராரும் ஏற்க வேண்டும் என்ற அவரது பொதுக்கருத்து அவருடைய நடுநிலைமைக்கும் நியாய உணர்வுக்கும் சான்றாகும்.

தொழிலாளர்-நிர்வாகி உறவுப் பிரச்னைகள் தலைதூக்கியுள்ள இன்று ஸ்ரீ ராமானுஜத்தின் மறைவு பெரும் நஷ்டமாகும்.

மந்திரிகளுடன் சுற்றுப்பயணத்தின்போது கலெக்டர்களும் மற்ற அதிகாரிகளும் உடன் சென்று 'சேவை' செய்கிற பழக்கம் நீண்ட நாட்களாக நமது நிர்வாகத்தில் புரையோடி விட்ட ஓர் ஒழுங்கீனம். ஜனநாயக அமைப்புக்குப் பொருந்தாத விதத்தில் மந்திரிகளைப் பெரிதுபடுத்தவும், சலுகை ஆட்சிக்குக் கை கொடுக்கவுமே இந்த ஜமாபந்திகள் உதவி வந்தன. இப்பழக்கத்தை அவசியமான அளவுக்கு நிர்தாட்சண்யமாகக் குறைக்க வேண்டுமெனத் தமிழ் நாட்டு அரசாங்கம் கருதியிருப்பது பாராட்டுக்குரிய விஷயம்.

கல்லூரிகளில் — முக்கியமாக வைத்தியக் கல்லூரி, பொறி இயல் கல்லூரி ஆகியவற்றில் — மாணவர்களை அனுமதிப்பதற்குப் பொறுப்பேற்றுள்ள தேர்வுக் குழுக்களைப் பற்றி நாட்டில் போதிய நம்பிக்கையில்லாதிருந்தது. தகுதியின் மீது மட்டும்தான் தேர்வு நடத்தப்படுகிறதா என்ற கேள்வி பெரியதாக இருந்தது. இக்குழுக்களில் இடம் பெற்ற எம். எல். ஏ.க்கள் இதற்கு முக்கிய காரணம் என்பதை வருத்தத்துடன் ஒப்புக் கொள்ளத்தான் வேண்டும். இனி தகுதியின் அடிப்படையிலேயே தேர்வு நடக்க வேண்டும் என்றும், அரசியல்வாதிகள் இக்குழுக்களிலிருந்து நீக்கப்பட்டு, கல்லூரி முதல்வர் முதலிய கல்வித் துறையாளரிடமே பொறுப்பு தரப்படவேண்டுமென்றும் தமிழக அரசு உத்தேசித்துள்ளது. சரஸ்வதி தேவியின் சாம்ராஜ்யத்தில் ஒழுங்கீனங்களைக் குறைப்பதற்காக எடுக்கும் நடவடிக்கைக்கு நம் பாராட்டுதல் மட்டுமின்றிக் கலைவாணியின் ஆசியும் கிடைக்கும்.

வங்காளத்தில் தொழிலாளர்கள் செய்யும் வன்முறைகள் வருந்தத் தக்கவை. வங்காள ராஜ்ய அரசாங்கம் இவ்விஷயத்தில் தீவிரமாக ஈடுபட்டு வன்முறையை நிறுத்தாததும் வருந்தத்தக்கது. இதனால் வங்காள சர்க்காரானது காங்கிரஸ் விருப்பப்படி ராஷ்டிரபதி ஆட்சிக்கு முதல் இரையாகக்கூடும்.



காமகோடியின் கருணைமொழி:

அம்பாளுடைய கருணை நமக்குத் தெரியாது. நமக்கு நல்லது வந்தாலும் கெட்டது வந்தாலும் இரண்டுக்கும் மூலம் அவளுடைய அருள்தான். நல்லது, காரணமில்லாத அருள். கஷ்டம், ஒரு காரணத்துக்காக ஏற்படுகிற அருள் — மண்ணைத் தின்னும் குழந்தையின் கையை அதன் நன்மைக்காகவே தாயார் கட்டிப் போடுவது போல். நல்லது கெட்டது எது வந்தாலும் அவள் அருள் என்று கொள்ள வேண்டும். நமக்குத் தெரியாது, எதற்காக அதைக் கொடுக்கிறாள் என்று. நல்லது கொடுப்பது ஸ்வபாவமான கருணை எனில் துன்பத்தைக் கொடுப்பது — ஒரு காரணத்துக்காக, நம்மைச் சோதித்துத் திருத்துவதற்காகத் துன்பத்தைக் கொடுப்பது — அதைவிடக் கருணை. நாம் கொஞ்சம்தான் பார்க்கிறோம். அதற்கு முந்தியும் தெரியாது, பிந்தியும் தெரியாது. முக்காலமும் தெரிந்து பார்த்தால் நமக்கு ஆண்டவன் கெடுதலே செய்வதில்லை என்று தெரியும். எக்காலத்திலும் நமக்குப் பந்துவாக, சகாயமாக இருப்பது அம்மையப்பன்தான்.



அவனுக்கு போர்ஹான்ஸ் கொண்டு பற்களைத் தக்கபடி பாதுகாக்கும் முறையைக் கற்பிக்க வேண்டிய காலம்

உங்கள் குழந்தை தூரத்து இடங்களைப் பற்றி அறிய ஆவலாயிருக்கும் போது உங்களை நாடுகிறான். உங்களிடமிருந்து அவன் கற்கும் முக்கியமான விஷயங்கள் பல. அவற்றில் ஒன்று போர்ஹான்ஸ் பற்பசையினால் பற்களைத் தக்கபடி பராமரித்தல். போர்ஹான்ஸ் ஈறு உபாதைகளையும், பற்சிதைவையும், தடுக்க உதவுகிறது.

பல் வைத்தியர் ஒருவரால் உருவாக்கப்பட்ட போர்ஹான்ஸ் ஈறுகளைப் பாதுகாக்கும் விசேஷப் பொருள் கொண்டது. அது உங்களுக்கு மட்டுமின்றி உங்கள் குழந்தைக்கும் நல்லது. எனவே இன்றும், என்றும் பற்கோளாறுகளைத் தடுப்பது எப்படியென்று அவனுக்குக் கற்றுக் கொடுங்கள். அவனை இரவிலும், காலையிலும் போர்ஹான்ஸ் உபயோகிக்கச் செய்யுங்கள். இப்பொழுதே அவனுக்கு ஆயுட்கால முழுதும் பற்களைப் பாதுகாக்கும் முறையைக் கற்றுக் கொடுங்கள்.



போர்ஹான்ஸினால்
பற்களைப் பாதுகாக்கும் முறையைக் கற்பிக்க இதுவே சிறந்த சமயம்



இலவசம்! "பற்களையும், ஈறுகளையும் பராமரிக்கும் முறை" என்ற விவரமான வண்ணப் புத்தகம் 10 மொழிகளில்* கிடைக்கிறது. தபால் செலவுக்கு 10 பைசா தபால் தலைகளை அனுப்பவும்: மானெர்ஸ் டென்டல் அட்வைசரி ப்யூரோ, தபால் பை நம்பர் 10031, பம்பாய்-1.

பெயர் ....

முகவரி ....

*வேண்டிய மொழியைக் கோடிட்டுக் காட்டுக: தமிழ், ஆங்கிலம், இந்தி, மராத்தி, குஜராத்தி, உருது, வங்காளம், தெலுங்கு, மலையாளம் அல்லது கன்னடம்.

உங்கள் குழந்தை படிக்க வேண்டிய முக்கியமான புத்தகங்களுள் இதுவும் ஒன்று.

K 6

போர்ஹான்ஸ் பற்பசை—பல்வைத்தியர் ஒருவரால் உருவாக்கப் பெற்றது

CMGM-188 TM

நீடூழி வாழ வேண்டும்

ப. சங்கரநாராயணன்

இந்த வருஷம் வைகாசி மாதம் பத்தாம் தேதி (மே 24உ) ஒரு சிறந்த புண்ணிய தினம். நம்முடைய பரமாசாரியாளாய் விளங்கும் ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதிகள் ஸ்ரீ சந்திர சேகரேந்திர சரஸ்வதி பூஜ்ய பாதாளுடைய எழுபத்து நான்காவது ஜன்ம நக்ஷத்திரம். அந்நாளில் நாம் அனைவரும், காலையில் எழுந்தவுடன் அவரது திருவடிகளை நினைத்துத் தொழுது, வீடுதோறும் அவருடைய படம் அல்லது பாதுகைகளுக்கு பூஜை செய்து அவரது தாள் பணிந்தேத்துவோம். ஸ்ரீ சங்கர ஜயந்திக்கு அடுத்தாற்போல் நம் பரமாசாரியாளின் ஜயந்தி அமைந்திருப்பதில் ஒரு பொருத்தத்தைக் காணலாம். அவர்கள் ஸ்ரீ பகவத் பாதர்களின் புனரவதாரமல்லவா? உலகில் மறைந்த காரணத்தை, கண்கூடான காரியத்தைக் கொண்டு ஊகிப்பது வழக்கம். ஆதி சங்கரர் எப்படி இருந்தார் என்று நமக்குத் தெரியாது. ஆனால் நம் பரமாசாரியாளின் தோற்றம், அவர்களுடைய தவ மகிமை, ஞான ஒளி, அருள் பெருக்கம் முதலியவைகளைக் கொண்டு அவர்தான் இவர், இவர்தான் அவர் என்ற திண்ணமான நம்பிக்கை ஏற்படும். இவர்கள் தோன்றி விளங்கும் காலத்தில் நாமும் பிறந்து, இவர்களைத் தரிசித்து, இவர்களுடைய அருள் பெறுவது நம் பாக்கியம்.



பெரியவர்களுக்கு விஜயவாடாவில் சூட்டப்பட்ட மணிமகுடம்

ஸ்ரீ பகவத் பாதர்களிடம் நம் ஆசாரியாளுக்கு உள்ள பக்தி அளவற்றது. அவருடைய வழித்தோன்றலாய் வந்துள்ள நம்முடைய ஆசாரியாள் அத்வைத தத்துவத்தை உலகெங்கும் பிரசாரம் பண்ணி அதனால் மக்கள் அனைவரும் ஆத்ம சாந்தியடைந்து, க்ஷேமமாய் இருக்க வேண்டும் என்று அரும் பாடு படுவதை யாவரும் அறிவர். அன்றியும் நம் தேசத்தில் ஸ்ரீ பகவத் பாதாள் எங்கெல்லாம் திக்விஜயம் செய்தார்களோ அங்கெல்லாம் அவருடைய நான்கு பிரதான சிஷ்யர்களுடன் கூடிய தம் குருநாதரின் சிலா விக்கிரகத்தை அமைத்து வரும் பணி நம் ஆசாரியாளின் எல்லையற்ற குரு பக்தியைக் காட்டுகிறது. நாடெங்கும் சங்கரர் உருவம் விளங்கவும், சங்கர நாமா ஒலிக்கவும், சங்கரராட்சி பரவவும், இம்மூன்றும் தம் முதல்வருக்குத் தாம் செய்யும் பணியாய்த் திருவுள்ளம் கொண்டுள்ளார்.

குரு பக்தி என்றால் என்ன, குரு பக்தியுள்ளவர்கள் எப்படிச் செயல்பட வேண்டும் என்பதற்கு ஸ்ரீ பரமாசாரியர்கள் உதாரணமாய் விளங்குகிறார்.

குரு பக்தி என்பது விசேஷமாய் குருவைப் போற்றுவதுடன் நின்றுவிடக் கூடாது. இத்தகைய போற்றுதலை குரு நம்மிடம் எதிர்பார்க்கவுமில்லை. நாம் ஒவ்வொருவரும் நல்வழிப்படவும், இம்மையிலும், மறுமையிலும் சுகமெய்தவும், நாடு முன்னேறவும், உலகமெங்கும் அமைதி நிலவி, நன்மை பெருகவும் அவர்கள் பலவிதமாக உபதேசித்து வருகிறார்கள். நாம் அவற்றில் ஒன்றையேனும் செய்து வருகிறோமா என்று நம்மையே கேட்டுக்கொள்ள வேண்டும். ஒரு சிறு உதாரணத்தை எடுத்துக் கொள்ளுவோம். இப்பொழுது மாபெரும் பிரச்னையாய் நாட்டில் எங்கும் கிளர்ச்சியை உண்டாக்கியது பசுவதைத் தடை. நம் பரமாசாரியாள் இப்பிரச்னையை அணுகும் வழி தனிப்பட்ட சிறப்புடையது. எதிர்ப்பிலேயே இறங்கி முடிவு காண முயலுவதை விட ஆக்க ரீதியில் செயல்படுவது பயன்தர வல்லது என்பது அவருடைய திருவுள்ளம். பசு வதையைத் தடுப்பதைவிட கோ சம்ரக்ஷணம் மேம்பட்டது என்ற ரீதியில் இந்தப் பிரச்னையை அணுகினார். எல்லோரும் கோ சம்ரக்ஷணத்தில் ஈடுபட்டு, வீடு தோறும் கிடைத்த இடத்தில் அகத்திக் கீரை பயிர் செய்து, அதையும், கழுநீரையும் கறிகாய்த் தோலையும் பசுவுக்குத் தந்து, கறவை வற்றின பசுக்களை அடிமாட்டுக்குக் கொடுப்பதில்லை என்று திட்டமிட்டால் தடுப்பு இயக்கத்தை விட 'ரக்ஷண' இயக்கம் பலன் தரும் என்பது அவர்களுடைய கருத்து.

இதைப் போல்தான் அவர்கள் வகுத்துள்ள பிடியரிசித் திட்டம். இதில் நாம் எல்லோரும் செய்ய வேண்டிய பஞ்ச மகா யக்ஞங்கள் ஒருங்கே ஒருவாறு அமைந்துள்ளன எனலாம். இதில் கடவுள் வழிபாடும், ஏழைகளுக்கு உதவியும் அமைந்துள்ளன. பிடியரிசி இடுவோர் மனம் இளகி ஜீவ தயை விஸ்தாரமடைகிறது. அனைவரும் ஒரே குடும்பம் என்ற மனப்பான்மை உண்டாகிறது.

இவ்வண்ணம் வைதிக ரீதியிலும், லௌகிக ரீதியிலும் நம் பரமாசாரியாள் இட்டுள்ள கட்டளைகள் பல துறைகளில் பலதரப்



பட்டவை. அவைகளை நாம் முடிந்த வரையில் செய்வதுதான் அவர்களிடம் நமக்குப் பக்தியுள்ளதற்குச் சான்றாகும்.

ஸ்ரீ பரமாசாரியாள் 1957ல் சென்னைக்கு விஜயம் செய்துவிட்டுப் பிரியும் நாளில், பக்தர்கள் ''நாங்கள் தங்கள் உபதேசங்களைப் பின்பற்றுவதில் தவறியுள்ளோம். எங்களை மன்னித்தருள வேண்டும்'' என்று பச்சாத்தாபத்துடன் விண்ணப்பித்துக் கொண்டார்கள். அதற்கு நம் குருநாதர் பகர்ந்த விடை அவர்களுக்கே உரித்தான தனிப் பாணியில் அமைந்தது. ''நான் சொன்னபடி நீங்கள் நடக்கத் தவறினீர்கள் என்றால் அது உங்கள் மேல் தப்பில்லை; அதிலிருந்து எனக்கு இன்னும் தபஸ் போதவில்லை என்று நான் தெரிந்து கொண்டேன்'' என்றார்கள். இதைக் கேட்டதும் அங்கு கூடியிருந்தோருக்குக் கண்ணீர் மல்கியது. அவரிடம் உண்மையான பக்திக் குறைவாலல்லவா நாம் அவரிட்ட பணிகளில் ஒரு சிறிதேனும் செய்யாமல் இருக்கிறோம் என்று நாம் நம்மையே சோதித்துப் பார்க்க வேண்டும்.

ஜயந்திப் புண்ணிய தினத்தில் அவர்களை நேரில் சென்று தரிசிப்பவர்கள் பாக்கியவான்கள். மற்றவர்கள் அவர்களுடைய திருவுருவத்தை இதயக் கோயிலில் இருத்தி நம் இல்லங்களில் தொழுவோம். அப்பொழுது நம் மனக் கண் முன், அவர்களுடைய சாந்தமே உருவெடுத்த திருமேனியும், புன்முறுவலும், அருள் சுரக்கும் கண்களும் பிரசன்னமாய் விளங்கும். அவர்கள் அதிகாலையில் புண்ணிய நீராடி, காவி பணிந்து, திருநீறு பூசி, மார்பில் ருத்ராக்ஷ மாலையும் ஸ்படிக மாலையும் துலங்க தண்டந் தாங்கி, கமண்டலு ஏந்தி, காட்சியளிக்கும் பொழுது காண்போருக்கு மயிர்க்கூச்சலுண்டாகி, ஒருவித பக்தி கலந்த பயம் ஏற்படும். பரம நாத்திகனும் பரவசப்பட்டுத் தானறியாமல் தாள் பணிந்து உய்வான். அச்சமயத்தில் அவர்களுடைய திருக்கோலம் என்றும் மனத்தை விட்டு அகலாது.

அயோத்திமாநகர் மக்களெல்லாம் தினந்தோறும் தங்கள் குலதெய்வங்களைத் தொழுதேத்தும்பொழுது தங்களுக்கென்று ஒன்றும் பிரார்த்திக்க மாட்டார்களாம். எல்லோரும் ஒரே மனத்துடன் ராமன் நீடூழி வாழ வேண்டும் என்றே தெய்வத்திடம் கோருவார்களாம்.

स्त्रियो वृद्धास्तरुण्यश्च सायंप्रातः समाहिताः ।
सर्वान्देवान्नमस्यन्ति रामस्यार्थे यशस्विनः ॥

அதைப் போல ஒவ்வொரு நாளும், விசேஷமாய் இந்தப் புண்ணிய தினத்தில், ஸ்ரீ சந்திர மௌளீச்வரர் நம் பரமாசாரியாளுக்கு முடிவில்லா ஆயுளையும், நோயற்ற உடல் வலுவையும் அருள் புரிய வேண்டும் என்று நாம் அனைவரும் பிரார்த்திப்போமாக.

பீடமேறி மணிவிழாக் கண்ட குருமணிக்கு விஜயவாடா பக்தர்கள் மணிமகுடம் புனைவித்து மகிழ்ந்தார்கள். ஞான சாம்ராஜ்யத்தின் முடிசூடிய மன்னராக ஸ்ரீ பெரியவர்கள் பல்லக்கிலும், இளவலாக ஸ்ரீ புதுப் பெரியவர்கள் ஆனைமீதும் ஆரோகணித்து விஜயவாடாவில் விஜய பவனி வந்தனர்.









4-வது ஆண்டு ஆரம்பம்!

மயிலையில், பட்டுச்சேலைகளுக்கு என்றே பிரத்யேகமாக அமைக்கப்பெற்ற இந்த ஷோ-ரூமுக்கு 3 ஆண்டுகள் வெற்றிகரமாகப் பூர்த்தியாகி 17-5-67-ல் நான்காவது ஆண்டு துவங்கியுள்ள இத்தருணத்தில் எமக்குப் பெரிதும் ஒத்துழைப்பு அளித்த வியாபாரிகளுக்கும், பேராதரவு தந்த வாடிக்கையாளர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

இந்திரா கலர்

பட்டுச் சேலைக்கு அமோக வரவேற்பளித்து, எம்மை ஊக்குவித்த உங்களனைவருக்கும் எமது உளங் கனிந்த நன்றி!

- எமது சொந்தத் தறிகளில், தரமான பட்டில், உயர்ந்த ஜரிகையுடன், எமது மேற்பார்வையில் அசல் பட்டுப் புடவைகளை தயாரித்து உற்பத்தியாளர்களின் விலைக்கே வாடிக்கையாளர்களுக்கு வழங்குகிறோம்.
- எமது பணிவான, சிறந்த நல் வரவேற்பும் நியாயமான விலைகளில் தரமான அசல் பட்டுச் சேலைகளும் கிடைக்க உறுதியளிப்பதுடன் பல அவசியமான வசதிகளையும் அளிக்கிறோம்.
- தங்களது ஆதரவையும், சேவையளிக்கும் நல் வாய்ப்புக்களையும் எமக்குத் தொடர்ந்து அளிக்கக் கோருகிறோம்.
- வாடிக்கையாளர்களின் திருப்தியே எங்கள் வியாபார நோக்கு!

விரைவில் எதிர்பாருங்கள் - இந்த ஆண்டின் எமது நூதன கலர்!

••• ஈடு இணையற்ற பட்டுச் சேலைகளுக்கு •••

நல்லி சில்க்ஸ்
பட்டு சேலைகள்

லஸ் | மைலாப்பூர் | சென்னை-4

போன்: 74862

உரிமையாளர்: நல்லி C. ரங்கசாமி செட்டி

பூனைக்கும் உண்டு புராணம்

'தபஸ்வி'

"பாவத்தைப் பற்றி உங்கள் அபிப்பிராயம் என்ன ?" என்று மதகுரு ஒருவரைக் கேட்ட போது, "அது எனக்குப் பிடிக்காதது" என்று மட்டுமே கூறி அவர் மௌனமானாராம்.

அதே போல் 'பூனையைப் பற்றி உங்கள் அபிப்பிராயம் என்ன?" என்ற கேள்விக்குப்



பெரும்பாலோர் அந்தப் பாதிரியார் கூறிய பதிலையே கூறினாலும் அதில் வியப்பில்லை.

"மூஞ்சியைப் பார், கடுவன்பூனை மாதிரி."

"அவனா? அவன் ருத்திராட்சப் பூனை."

"காலையில் எழுந்தவுடன் பூனை தரிசனம் இன்று."

"எனக்கு அப்பவே தெரியும், கிளம்புகிற போதே பூனை குறுக்கிட்டது!"

இப்படிச் சில பூனை மொழிகள்.

ஆனால் பூனைகள் பெருமிதப்படக்கூடிய விஷயமும் ஒன்று உண்டு. அதாவது உலக சரித்திரத்தையே நிர்ணயிக்கக்கூடிய பல மாபெரும் அரசியல் தலைவர்களையும், பேரு மன்னர்களையும் அவை மிக மிகக் கவர்ந்துள்ளன.

பிரஞ்சு கணித மேதை ஒருவர் பூனையைப் பற்றிப் பின்வருமாறு கூறுகிறார்: "இயல்பாகப் பூனை மிகவும் சுறுசுறுப்புள்ளது; புத்திசாலி. காலம் அறிந்து காரியத்தைச் செய்வதில் அதற்கு நிகர் அதுதான். ஒரு பிரச்னைக்கு இரண்டு விதமான பரிகாரங்கள் இருக்கின்றன வென்றால், பூனை, இரண்டில் தனக்குப் பிடித்ததையும், தன்னுடைய பார்வைக்கு நல்லதென்று படுவதையும் அன்றி, அது நேர்த்தியாகவும் கௌரவம் உள்ளதாகவும் இருந்தால்தவிர அதை அநுசரிப்பதில்லை."

சர் வால்டர் ஸ்காட், "பூனை கடல்போல் கம்பீரமானது. அதன் சிந்தனைகள் நாம் ஒப்பிடுவதற்குக்கூட இயலாத அளவுக்கு விசித்திரமானவை" என்று கூறுகிறார்.

சர் காம்பல் மெகம்ஸி என்பவர், டஜன் கணக்கில் பூனைகளை வளர்த்து வந்தாராம்.

சாமுவேல் பட்லர் என்பவர், வழி தவறி அலையும் அனாதைப் பூனைகளை யெல்லாம் எடுத்துப் பராமரித்து வந்தாராம்.

ஜார்ஜ் பெர்னார்ட் ஷா, "எந்தப் பூனையைப் பார்த்தாலும் அதன் பட்டுடலை ஒரு முறையேனும் தடவிக் கொடுக்காமல் நான் இருந்ததில்லை" என்கிறார்.

எழுத்தாளர் ஹென்றி ஜேம்ஸ், பூனையைத் தோள் மேல் ஏற்றிக் கொண்டுதான் எழுதுவாராம் !

சார்லஸ் டிக்கன்ஸ் ஒரு செவிட்டுப் பூனையைப் பக்கத்தில் வைத்துக் கொண்டுதான் எழுதுவது வழக்கமாம்!

டாக்டர் ஜான்ஸன் கடைத் தெருவுக்குப் போகிற போது பூனையைத் தோளின் மேல் வைத்துக் கொண்டுதான் போவாராம்.

பிரஞ்சுக் கவியும் நாவலாசிரியருமான ஒருவர், "காற்று மனிதனுக்கு எவ்வளவு இன்றியமையாததோ, அவ்வளவு பூனைகளும் இன்றியமையாதவை!" என்கிறார். அவர் வீடு நிறையப் பூனைச் செல்வங்கள்தானாம்; மடியில் பூனையில்லாமல் அவரால் எழுதவே முடியாதாம்.

எழுத்தாளர் தாமஸ் ஹார்டிக்குத் தம் வளர்ப்புப் பூனையின் 'மியாவ்' தேனாக ஒலிக்குமாம். மஞ்சள் நிற ஆழ்ந்த விழிகள் கொண்ட அதன் பெயர் காபி! ஹார்டி இறந்த போது அதன் துக்கம் சொல்லி முடியாதாம்.

வின்ஸ்டன் சர்ச்சிலுக்குப் பூனையென்றால் அளவற்ற ஆசை. அவருடைய பூனையின் பெயர் நெல்ஸன் ! ' மை டியர்' என்று அதை அன்போடு அழைப்பாராம். யுத்த சமயத்தில், "வெந்நீர் சீஸா (ஹாட் வாட்டர் பாட்டில்) மாதிரி எனக்கு இது !" என்று அந்தப் பூனையை நண்பர்களுக்கு அறிமுகப் படுத்தும்போது அவர் கூறுவதுண்டாம்.

ஃ ஃ ஃ

பிரிட்டிஷ் தத்துவ ஞானி ஒருவரின் முக்கிய நண்பர்கள் பூனைகள்தாம். அவர் தம்மிடம் உள்ள ஒரு பூனையை முதலில் 'லாங் போர்ன்' என்றும், பிறகு, 'சர் ஜான் லாங் போர்ன்' என்றும், கடைசியில், 'சர் ஜான் லாங் போர்ன் டி. டி.' என்றும் விருதுகள் வழங்கிக் கௌரவித்தாராம்.

இத்தாலியில் சங்கீதமேதை ஒருவர் பாடல்களை இயற்றும் போது அவரது வளர்ப்புப் பூனைகள் இரண்டும் அவரது தோள் மீது இருக்க வேண்டுமாம். அந்த

ஜோடிப் பூனைகள் இரண்டும் ஆனந்தமாக அவர் மடியில் உறங்கிக் கொண்டிருந்தால், அவற்றை எழுப்ப விரும்பாமல் அவர் தம் துணியையே கிழித்துக் கொண்டு விடுவாராம்!

ஃ ஃ ஃ

உலகப் பூனைகளிலேயே மிகச் சிறந்ததெனக் கருதப்பட்டது 1909 பிப்ரவரியிலிருந்து 1929 ஜனவரி வரையில் (அதாவது இறக்கும்வரை) பிரிட்டிஷ் மியூஸியத்தைக் காவல் காத்து வந்த 'மைக்' என்ற பூனை! லண்டன் பத்திரிகைகளில் அடிக்கடி அதைப் பற்றிச் செய்திகள் வந்தன. ''பிரிட்டிஷ் மியூசியத்தின் வாசலில், சிவப்புக் காலரும், ஜரிகை விளிம்பு கட்டிய பட்டுக் குல்லாவும் அணிந்து இராப் பகலாய், குளிரையும் வெய்யிலையும் பாராமல் இருபது வருட காலம் காவல் புரிந்த மைக் தன் கடமையை மிகச் சிறந்த முறையில் நிறைவேற்றி விட்டது. இத்தகைய பெரும் புகழும் வேறெந்தப் பூனையும் இதுவரை பெற்றதில்லை!'' 'ஸ்டார்' என்ற பத்திரிகை இவ்விதம் எழுதியிருந்தது.

ஃ ஃ ஃ

1942ல் ஸ்டாலின்கிராட் யுத்தம் நடந்து கொண்டிருந்தபோது சில படைவீரர்கள் எதிரிகள் எங்கெங்கு பிரங்கித் தளங்களை வைத்திருக்கிறார்கள் என்பதை அறிவிக்க 'மூர்க்கா' என்ற பூனையைத்தான் அனுப்பி



னார்கள். தங்களுக்கும் எதிரிகளுக்கும் நடுவே இருந்த திறந்தவெளிப் பிரதேசத்தை எவராலும் பீரங்கித் தாக்குகளிலிருந்து உயிர் தப்பிக் கடக்க முடியாத நிலையில், ரகசியச் செய்தியைத் தாங்கிய கடிதங்களை அதன் கழுத்திலே கட்டி அனுப்பினார்களாம். மூர்க்கா மிகத் துணிச்சலுடன் அபாயம் ஏதுமின்றிப் போய்ச் சேர்ந்து, பல பேரின் உயிரைக் காப்பாற்றியது. அதன் தீரச் செயலைப் பத்திரிகைகள் தலைப்புச் செய்தியாக வெளியிட்டு 'ஸ்டாலின்கிராட் வீரன்' என்று அதைக் கௌரவித்தனவாம்!

ஃ ஃ ஃ

பிரிட்டிஷ் மந்திரி சபையில் முன்பு ஒரு சமயம் சம்பளம் வாங்கும் பூனைகளைப் பற்றி ரஸமான விவாதம் எழுந்தது. இதற்குக் காரணம் அப்போது போஸ்டாபீசுகளில் எலி, பெருச்சாளிகளின் தொல்லை அதிகமாகி விடவே, அங்கு பூனைகள் சர்க்கார் சிப்பந்திகளாக நியமிக்கப்பட்டிருந்தன. உடனே அதைப் பற்றிப் பார்லிமெண்டில் கேள்விகள் எழுப்பப்பட்டன.

''பூனைகளின் குடும்பப் பராமரிப்புக்காக ஊதியம் தரப்படுகிறதா?'' என்று ஒருவர் கேட்டார்.



இன்னொருவர், ''அவைகளின் பிரசவ காலங்களிலே தனிப்பட்ட சலுகைகள் அளிக்கப்படுகின்றனவா?'' என்று வினவினார்.

மாதர் முன்னேற்றத்தில் தீவிர நாட்டமுள்ள ஒரு பெண் அங்கத்தினர், ''ஆண் பெண் பேதமின்றிப் பாரபட்சமற்ற முறையில் பூனைகளுக்குச் சம்பளம் தரப்படுகிறதா?'' என்று அறிந்து கொள்ள விரும்பினார்.

கொள்கையளவுக்கு மட்டுமின்றி விவகார ரீதியிலும் ஆண்—பெண் பூனைகளுக்குச் சரி நிகர் சமானமாக எல்லாச் சலுகைகளும் அளிக்கப்பட்டு வருவதாகவும், அவைகளின் தேவைகள் உடனுக்குடன் கவனிக்கப்பட்டு வருகின்றன என்பதையும் உறுதியாகக் கூறிய பிறகுதான் அங்கத்தினர்களிடையில் அமைதி நிலவியதாம்.

ஃ ஃ ஃ

ஒரு பெண் தன் சிநேகிதியைப் பார்க்க வந்தாள். சிநேகிதி ஒரு விமான ஓட்டியின் மனைவி. அவள் வந்த சமயம், பைலட்டின் மனைவி அழுது கொண்டிருந்தாள். அதைக் கண்டு வந்தவள் திடுக்கிட்டு, அவளுடைய துயரத்தின் காரணம் பற்றி வினவினாள்.

''நான் என்னத்தைச் சொல்லுவேன்?'' என்று விம்மிக் கொண்டே, ''எங்க வீட்டிலே ஒரு பூனை இருந்தது. படு திருட்டு அது! அதை எங்கே கொண்டு போய் விட்டு விட்டு வந்தாலும் எப்படியோ தேடி ஓடி வந்துவிடும். ஆகையால் அந்தப் பூனைமேல் அவருக்கு அசாத்தியக் கோபம்! அதை விமானத்திலே கொண்டு போய் எங்காவது கடலில் போட்டு விட்டு வருவதாக நேற்று எடுத்துப் போனார். அவர் இன்னும் வரக் காணோம்; பூனை வந்து விட்டது!'' என்றாள் விமான ஓட்டியின் மனைவி.


நாகரீக எழில்
மிளிருகிறது இந்த
ஃபுல் வாயில்
அளிப்பது
எஸ்ஆர்எம்
ஒன்றே





விஞ்ஞானமும் விவசாயமு

ஹடாஸா கில்லான்

தமிழில் :
குட்டிகிருஷ்ணன்

- மே 15ந் தேதி
- இஸ்ரேயில் நாட்டின்
- சுதந்திர தினம்.
- இத்தருணத்தில்
- உணவு உற்பத்தியைப்
- பெருக்க முயலும்
- நாம், இஸ்ரேயில்
- நாட்டவர் அந்தத்
- துறையில் அடைந்
- துள்ள விஞ்ஞான
- ரீதியான மகத்தான
- முன்னேற்றத்தை
- ஆராய்தல்
- நலம் பயக்கும்.

ஐக்கிய நாடுகள் சபையைச் சேர்ந்த உணவு — விவசாய நிறுவனம் இஸ்ரேயில் சுதந்திரம் பெற்ற பிறகு விவசாயத் துறையில் அடைந்துள்ள வேகமான முன்னேற்றத்தைப் போல் உலகில் வேறெந்த நாடும் அடைய வில்லை என்று கூறுகிறது. 1948ல் இஸ்ரேயில் நாடு உருவானபோது அதற்குத் தேவையான உணவுப் பொருள்களைப் பெரும்பாலும் இறக்குமதி செய்ய வேண்டி யிருந்தது. ரேஷன் கடுமையான முறையில் அமுலாக்கப் பட்டது. ஆனால் பத்தொன்பது ஆண்டுகளுக்குப் பிறகு இன்று இஸ்ரேயில் தனது மக்களுக்குத் தேவையான உணவு வகைகள் பலவற்றைத் தருவது மட்டுமல்ல, மிகுதியை ஏற்றுமதி செய்து அந்நியச் செலாவணியும் சம்பாதிக்கிறது.

இஸ்ரேயில் தேசத்தில் தண்ணீர் பற்றாக்குறை உண்டு. அத்துடன் யுத்தத்தினாலும் கவனிப்பாரின்மையாலும் பூமியின் வளம் குறைந்து கொண்டே வந்திருக்கிறது. போதாக்குறைக்கு இஸ்ரேயிலின் பெரும் பகுதி வெறும் பாலைவனம்தான். இஸ்ரேயில் ஆரம்பத்திலிருந்தே ஏழைக் குடியானவர்களின் அபிலாஷைகளை மதிக்க முற்பட்டதால், அவர்கள் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த எண்ணியதால் நிலத்தில் இறங்கிப் பாடுபடுவோரின் ஊதியம் மற்ற மத்தியதரை நாடுகளில் உள்ளதைவிட அதிகம்தான். இத்தனைக்கும் இடையில் சுயதேவையைப் பூர்த்தி செய்து அந்நியச் செலாவணியும் சம்பாதிப்பதென்றால் அது ஒரு மகத்தான சாதனைதானே!

ஆனால் இஸ்ரேயில் நாட்டுக்கு ஒரு சௌகரியம் இருந்தது. அங்கு இன்று விவசாயிகளாக விளங்குபவர்கள் ஏற்கனவே பட்டண வாசிகளாக இருந்தவர்கள்தான். அவர்கள் உணவு உற்பத்தி பெருக வேண்டும் என்ற உயர் நோக்கோடு புனித தேசியப் பணியாக இதனை ஏற்றுக் கிராமப்புறத்துக்கு வந்தவர்கள். ஆகவே இவர்கள் சம்பிரதாயத்தில் ஊறிப் போய்விடாமல் இஸ்ரேயில் நாட்டு விஞ்ஞானிகள் அந்நாட்டின் மண் வளம், நீர்வளம் முதலியவற்றை ஆராய்ந்து பரிசோதனைச் சாலையில் கண்ட முடிவுகளை வயல்களில் செயல்படுத்திப் பார்க்கத் தாராளமாக முன்வந்தார்கள்.

நீர்ப்பாசனம் அங்கு ஒரு தேசியத் திட்டத்தின் கீழ் அமுலாக்கப்படுகிறது. பூமிக்கடியில் மிக ஆழத்தில் உள்ள நீரை வெளிக்கொணரப் பூமி இயல் நிபுணர்கள் உதவுகின்றனர். வடக்கே கிடைக்கும் நீரை வறண்ட தென் பகுதிக்கு அதிகமாகச் சேதம் ஏற்படாமல் கொணருகிறார்கள். திடீரென்று பெருக்கெடுக்கும் காட்டாற்று வெள்ளங்களையும் கூட வீணாக்காது பயன்படுத்துகிறார்கள். 1967 பிப்ரவரியில் இஸ்ரேயில் விஞ்ஞானிகள் மேகங்கள் மீது அயோடின் சத்தை ஊன்றியதால் செயற்கை மழை உண்டாக்குவதில் மிக முன்னேற்றகரமான நிலை ஏற்பட்டிருப்பதாகக் கூறினார்கள். இத்துறையில் ஆராய்ச்சிகள் தொடர்ந்து தீவிரமாக நடக்கின்றன.

இஸ்ரேயில் நாட்டு ஆரஞ்சுப்பழ வகைகள் உலகப் பிரசித்தி பெற்றவை. ஆனால் அந்த ருசியையும், சாற்றுச் சத்தையும் ஒரே சீராகப் பாதுகாக்க விவசாயி அரும்பாடு படவேண்டும். நீரும் உரமும் சரியான அளவில் பயிர்களுக்குக் கிடைக்கச் செய்ய வேண்டும். நிலத்தின் உப்புச் சத்தைச் சதா கண்காணித்துக் கட்டுப்படுத்தி வைக்க வேண்டும். பூச்சிகளிலிருந்து மரங்களைக் காப்பாற்றவும் வேண்டும். விவசாய விஞ்ஞானிகள் தலைமைக் காரியாலயம் விழிப்புடனிருந்து பூச்சிகளை அறவே ஒழித்து விட்டது என்பது மட்டுமல்ல; வேறெந்த நாட்டிலும் கிடைப்பதுபோல் இரண்டு மடங்கு மகசூல் ஆரஞ்சு, எலுமிச்சை, நாரத்தை போன்ற ஸிட்ரஸ் பழ வகைகளில் கிடைக்கச் செய்கிறது. இத்துடன் பழங்களைப் பறிப்பதிலும் பெட்டிகளில் அடுக்கி வைத்து அனுப்புவதிலும் சிரத்தை காட்டுவதால் சென்ற ஆண்டு ஸிட்ரஸ் பழ வகைகள் எழுபத்தைந்தரை மில்லியன் டாலர் பெறுமானமுள்ளவை ஏற்றுமதியாகி யிருக்கின்றன.

இஸ்ரேயில் மக்கள்—யூதர்கள் தங்களுக்குத் தாய்நாடு என ஒன்று உருவான பிறகு உலகின் பல்வேறு பாகங்களிலிருந்தும் அங்கு வந்தார்கள் என்பது மட்டுமல்ல, அதேபோல் பயிர் வகைகளும் அங்கு உலகின் பல பாகங்களிலிருந்தும் வந்தவையே. எனினும் அப்பயிர்கள் இஸ்ரேயில் நாட்டு நீர்வள, நில வளத்துக்கு, சூழ் நிலைக்கு ஏற்ப ஈடுகொடுக்குமாறு விஞ்ஞானிகள் செய்துள்ளனர். அவற்றுடன் உள்ளூர் பயிர் வகைகளை ஒட்டுப் போட்டு இரண்டிலும் உள்ள சிறந்த அம்சங்களைக் கொண்ட புதிய ரகங்களை உருவாக்கிச் செழிக்க வைத்துள்ளனர். இத்துறையில் பெரும் புரட்சியே நடந்துள்ளது எனலாம். இம்மாதிரி யெல்லாம் செய்ததால் இஸ்ரேயில் இன்று கோதுமை, பிற தானியங்கள், காய்கறி வகைகள் தவிர வேறு பல பயிர்களிலும் தன்னிறைவு பெற்று விளங்குகிறது. ஆண்டுதோறும் விதைகள் ஏற்றுமதியிலேயே அரை மில்லியன் டாலர்கள் அந்நியச் செலாவணி சம்பாதிக்கிறது!

சிறிய நாடாயினும் இஸ்ரேயிலில் பலவிதமான சீதோஷ்ண நிலைகள் உண்டு. ஆகவே விவசாயிகள் உலகின் பல்வேறு

முன் பக்கம்: நடமாடும் பிளாட்பாரத்தில் நின்று பெட்ஸ் மிஸ்ரா குடும்பத்தினர் ஆரஞ்சுப் பழங்களைப் பறிக்கின்றனர்.

ஹுலா பிரதேசத்தில் வெறும் கட்டாந்தரையாகக் கிடந்த இடம் மலர்த் தோட்டமாக மாறிவிட்டது.





பாகங்களில் விளையும் பயிர்கள் பலவற்றை இங்கு கொணர்ந்து பயிராக்க முயன்று வெற்றி கண்டிருக்கிறார்கள். வாழை முதல் பேரீச்சம் பழம் வரை பலரகப் பழ மரங்கள் செழிக்கின்றன. பருத்தி, வேர்க்கடலை, சர்க்கரை வள்ளிக் கிழங்கு போன்றவையும் விளைகின்றன. 1966ல் ஏற்றுமதியான பருத்தி நூலின் பெறுமானம் நாலு மிலியன் டாலர்கள்.

இது மட்டுமா? கலிலி குன்றுகளிலும் ஜூடியா மலைகளிலும் பூத்துக் குலுங்கிய பல ரகக் காட்டுச் செடிகளை விஞ்ஞான ரீதியாகப் பயிரிட ஆரம்பித்தார்கள். மலர்களை அறுவடை செய்து ஏற்றுமதி செய்தார்கள். இஸ்ரேயில் நாட்டின் மலர்கள் விமானத்தில் பறந்து ஐரோப்பாவிலும் அமெரிக்காவிலும் இல்லங்களை அலங்கரித்தன. காதலர்களை மகிழ்வித்தன. சமீப காலத்தில் இதனால் கிடைக்கும் அந்நியச் செலாவணி இருமடங்காகியிருக்கிறது.

ரோஜா மலர்கள் இஸ்ரேயிலில் செயற்கைச் சூழ்நிலையில் உஷ்ணப் படுத்தப்பட்ட பிளாஸ்டிக் வீடுகளுக்குள் பூக்கின்றன. வெள்ளரியும், தக்காளியும், மினுகும் பாலின் கரைகளுக்குக் கீழே சக்கைப் போடாகச் செழிக்கின்றன. இப்படிச் செயற்கை முறையில் விளைவிப்பதால் "ஸீஸன்" இல்லாத நேரத்திலும் இவர்களால் வெண்பனி மூடிய ஐரோப்பாவுக்குப் பலரகப் பழங்களையும் மலர்களையும் அனுப்பி வைத்து அதிகப்படியாக அந்நியச் செலாவணி சம்பாதிக்க முடிகிறது.

இஸ்ரேயில் நாட்டில் உள்ள பசு டமாஸின் எனப்படும் ரகத்தைச் சேர்ந்தது. இது உருவத்தில் சிறியது; உழவுக்கும் பயன்பட்டது; பாலும் கொடுத்தது. இறுதியில் இறைச்சியையும் தந்தது. நோஞ்சானான இப்பசுவிடம் இருந்த ஒரு சிறந்த குணம் இஸ்ரேயில் சூழ்நிலைக்கு அது நன்கு பழக்கப்பட்டிருந்ததுதான். ஆகவே விஞ்ஞானிகள் வேற்று நாட்டிலிருந்து சிறந்த காளைகளைத் தருவித்துப் புது ரக மாடுகளை உருவாக்கினர். இப்புது ரகம் உலகில் சிறந்த கறவைப் பசுக்களில் ஒன்றாக மதிக்கப்படுகிறது. ஆண்டொன்றுக்கு ஒரு பசு 5000 கிலோகிராம் பால் தருகிறது. சமீபத்தில் இந்த ரகக் கன்றுகள் அறுநூறு ஈரானுக்கு விற்கப்பட்டன.

இஸ்ரேயிலைச் சுற்றி மத்தியதரைக் கடல் செங்கடல் இரண்டும் இருந்தும் இக்கடல்களில் மீன் வளம் இல்லை. ஆகவே இஸ்ரேயில் நாட்டவர்கள் மீன் பண்ணைகளையே உள்நாட்டில் உருவாக்கியுள்ளனர். செயற்கைக் குளங்கள் பல ஏக்கர் கணக்கில் ஏற்பட்டு மீன் வளர்ப்பில் நாடு வியக்கத்தக்க முன்னேற்றம் கண்டுள்ளது. விவசாயத்துக்குப் பயன்படாத உப்பு நீர் உள்ள குளங்களில் கூட 'கார்ப்' ரக மீன்கள் வளரும் என்று கண்டு குறிப்பாக அதில் கவனம் செலுத்துகின்றனர். மீன்கள் உணவாகக் கொள்ளும் பாசி செழிக்கச் செயற்கை உரங்கள் இடுகின்றனர் இக்குளங்களில்.

விஞ்ஞானியும் விவசாயியும் கரம் கோத்துச் செல்லும் இஸ்ரேயில் நாட்டில் இப்போது ஒரு புதிய பிரச்னை தோன்றியுள்ளது. பற்றாக்குறை இருந்த நேரத்தில் விளைச்சலைப் பெருக்குவது பிரச்னையாக இருந்தது போக இப்போது அபரிமிதமான விளைச்சலுக்கு ஏற்ப ஏற்றுமதி சாத்தியக்கூறுகளைக் கண்டு பிடிப்பது ஒரு பிரச்னை. இப்பிரச்னையையும் இஸ்ரேயில் அறிஞர்கள் வெற்றிகரமாகச் சமாளிப்பார்கள் என எதிர்பார்க்கலாம்.

நட்புக் கரம்


"இஸ்ரேயிலுடன் சரியானபடி ராஜரீக உறவுகள் கொள்ள வேண்டியதன் அவசியத்தை வற்புறுத்தும் வகையில் இந்தியாவில் முக்கிய நபர்கள் அடிக்கடி குரலெழுப்பி வருகிறார்கள். அராபிய நாடுகளுடன் நட்பு வளர வேண்டும் என்பதற்காக இந்தியா இஸ்ரேயிலுக்கு எதிராக நடந்து கொள்ள வேண்டும் என்ற கொள்கை நியாயமற்றதாகும். இதனால் இந்தியாவுக்கும் அராபிய நாடுகளுக்கும் இடையில் உள்ள உறவுகளில் விசேஷ முன்னேற்றம் ஏதும் ஏற்பட்டு விட்டதாகச் சொல்ல முடியாது. இதற்கு நேர்மாறாக இஸ்ரேயிலுடன் நெருங்கிய ராஜரீக உறவுகள் பூண்டுள்ள வேறு பல தேசங்கள் மத்திய கிழக்கு நாடுகளால் வெகுவாக மதிக்கப்படுவதைக் காண்கிறோம்.

"இந்தியாவில் தேர்தலுக்குப் பின் உருவாகியுள்ள புதிய அரசாங்கமேனும் இஸ்ரேயிலுடன் இயல்பானதும் இயற்கையானதுமான ராஜரீக நட்புறவுகளை வளர்த்துக் கொள்ளும் என்று நம்புகிறேன்."


—இஸ்ரேயில் பாராளுமன்றத்தில் அத்தேசத்தின் அயல்நாட்டு மந்திரி கூறியது







1. சென்னை மவுண்ட்ரோடு ராஜாஜி ஹாலில் டாக்டர் பி. பி. நினைவு நிறுவனத்தைச் சென்னை கவர்னர் உஜ்ஜல்சிங் தொடங்கி வைத்தார். முன்னாள் அட்டர்னி ஜெனரல் ஸி. ஸெடல்வாட் அரசியல் நிர்ணயச் சட்டம்-மக்களின் உரிமைகள்-பற்றி அரியதொரு சொற்பொழிவு நிகழ்த்தினார். 2. ஆந்திர முதன்மந்திரி திரு பிரம்மானந்த ரெட்டியைச் சென்னை நகரசபை வரவேற்றுக் கௌரவித்தது. சென்னை மேயர் திரு சம்பந்தம் ஆந்திர முதன் மந்திரியை வரவேற்கிறார். 3. சென்னை ராஜ்யத்தின் சிறந்த ஏற்றுமதியாளர் என்பதற்கான கேடயத்தை இந்திய தோல் கார்ப்பொரேஷனின் மானேஜிங் டைரக்டர் திரு ஏ. நாகப்ப செட்டியார் முதன் மந்திரி திரு அண்ணாதுரையிடமிருந்து பெறுகிறார். 4. காஞ்சி காமகோடி ஆசார்ய சுவாமிகளின் வைர விழாவை முன்னிட்டுச் சென்னை பி. எஸ். உயர்நிலைப் பள்ளியில் ஆசார்ய சுவாமிகளின் திருவுருவப் படத்தைப் பாண்டிச்சேரி கவர்னர் திரு எஸ். எல். சிலம் திறந்து வைத்தார். 5. கைத்தறி, பட்டு ரகங்களில் சிறந்த ஏற்றுமதியாளர் என்ற பரிசைச் சென்னை மாநில தொழில் மந்திரி திரு இரா. நெடுஞ்செழியனிடமிருந்து ராதா சில்க் எம்போரியத்தின் மானேஜிங் பார்ட்னர் திரு ஆர். கோதண்டராமன் பெறுகிறார்.







லதா மங்கேஷ்கர்

அமைதி தவழும் முகம். அதற்கேற்ற தூய வெண்ணிற ஆடை. அணி – ஆபரணங்களும் மிக மிகக் குறைவு.

தமக்கையின் இந்தத் தோற்றத்தைத் தாழ்வாக மதிப்பிடும் தங்கை கேட்கிறாள் :

''ஏன், அக்கா! உன்னைப் போன்றவர்கள் எத்தனை அழகு அழகாகப் புடவை கட்டிக் கொள்கிறார்கள், டிரஸ் பண்ணிக் கொள்கிறார்கள்! நீ மட்டும் ஏன் இப்படி ரொம்பச் சாதாரணமாக இருக்கிறாய் ?''

''நல்ல புடவைகள் கட்டிக் கொண்டால் மட்டும்தான் அழகா? மக்காக டிரஸ் பண்ணிக் கொண்டால்தான் அழகா? என் அழகுக்கு என்ன குறைச்சல்? இந்தச் சாதாரண உடையிலே நான் எவ்வளவு அழகாயிருக்கிறேன்? உனக்கு என் அழகு தெரியவில்லை?'' – தமக்கையின் கேள்வி இது.

குடும்பத்துக்கு மூத்த பெண் அவள். நிறமோ மாநிறம். கறுப்பு நிறம் என்றும் கூற முடியாது. அதற்காகத் தந்தச் செப்பு என்றும் சொல்லிவிட முடியாது. வீட்டில், உலகத்தில் உள்ளவர்கள் கண்களுக்கு அவள் கறுப்பு நிறம்தான். ஆனால், அவளைப் பொறுத்தவரை அந்தக் கறுப்பு நிறமே அவளுக்குப் பெருமை தருவதாகத் தோன்றியது. கண்ணபிரானின் நிறம் என்ன, அவனது சகோதரி மலைமகளின் நிறம் என்ன? அவர்களைக் காட்டிலும், தான் நிறத்தில் தாழ்ந்துவிடவில்லை. அவர்கள் அழகு என்றால் தானும் அழகுதான் என்பாள் அவள். அழகு என்பது வெளித் தோற்றத்தைக் கொண்டு கணிக்கப்

இசைப் பின்னணியில் இருபத்தைந்து ஆண்டுகள்

படுவதல்ல; உள்ளப் பாங்கைக் கொண்டு மதிக்கப்படுவது என்பது அவள் அபிப்பிராயம். சிறு பிராயத்திலேயே யாராவது அவளைக் கறுப்பு என்று கேலி செய்தால், 'குயிலின் நிறம் அதன் குரலில் மறைந்துவிடவில்லையா ?' என்று மடக்கி அதன் குரலின் மகிமையையும் அழகையும் எடுத்துக் காட்டுவாள்! அந்த அழகு, அந்த இனிமை தனக்குக் கிட்ட வேண்டும் என்று வேண்டுவாள்.



மங்களா கௌர் என்னும் மராட்டியப் படத்தில் நடிகை லதா

பிள்ளைப் பிராயம் முதற்கொண்டே இப்படிக் கனவு கண்டு வந்த லதா மங்கேஷ்கரின் எண்ணம் ஈடேறியதற்குக் காரணம், அவளது வேண்டுகோள் மட்டும் அல்ல ; பாரம்பரியமும்கூட.

அவளது தந்தை மாஸ்டர் தீனநாத் மராட்டிய நாடக உலகத்திலே பெயரும் புகழும் பெற்றவர். நடிப்போடு இசையிலும் சிறந்த வல்லுநர். புண்ணியப் பிரபாவம், பாவ பந்தனம் போன்ற நாடகங்களில் அவர் பெண் வேடத்தில் தோன்றிப் பாடி நடித்துப் பெரும் புகழை எய்தினார். அவர் ஈட்டிய



இசைக்குலமாகத் திகழும் லதாவின் குடும்பம்

புகழ் சாதாரணப் புகழ் அல்ல. இன்றுகூட மராட்டிய நாடக மேடை அவரது ஸ்தானம் காலியாக இருப்பதாகவே கருதுகிறது.

தந்தையின் இசையறிவு பெண்ணுக்குச் சீதனமாகக் கிடைத்தது, ஒரே ஒரு வேறுபாட்டுடன். தந்தையின் குரலிலே பெருகி நின்ற காம்பீர்யம், பெண்ணின் இசையிலே மென்மையாகப் பிரவாகம் எடுத்து ஓடியது.

இசையுலகிலே ஏறக்குறைய முப்பத்தைந்து ஆண்டுகளாகச் சிறந்து நிற்கும் லதா மங்கேஷ்கர் திரையுலகத்தின் பின்னணிப் பாடகியாகி இருபத்தைந்து ஆண்டுகள் ஆகின்றன. இவருக்கு மூன்று சகோதரிகளும் ஒரு சகோதரரும் உண்டு. அவர்கள் முறையே ஆஷா போன்ஸ்லே, மீனு மங்கேஷ்கர், உஷா மங்கேஷ்கர், ஹிருதயநாத் ஆகியோர்.


விவரம் அறியாத குழந்தையாக இருந்த போதே தந்தை இறந்து விட்டார். எனவே, அறியாப் பருவத்திலேயே குடும்பப் பொறுப்பு லதாவைப் பற்றிக் கொண்டது. இறக்கும் பொழுது மாஸ்டர் தீனநாத்துக்கு வயது நாற்பத்திரண்டு. இன்று தந்தையின் மறைவும், லதாவின் பின்னணிப் பாடகி வாழ்க்கையும் — இரண்டுமே வெள்ளிவிழாக் கொண்டாடும் அளவுக்கு ஓடிவிட்டன.

பள்ளிப் படிப்பு அதிகமில்லை என்றாலும், லதாவின் வாழ்க்கையில் வளம் கூட்ட மராட்டிய மண் வளம் கைகொடுத்து உதவியிருக்கிறது. ஏகநாதர், துகாராம், நாமதேவர், ஞானேசுவரர் போன்ற பக்த கவிகள் வாழ்ந்த நாடு; சிவாஜி, லோகமான்ய திலகர் வீர சாவர்க்கர் போன்றவர்கள் பிறந்த நாடு; வாழ்க்கையிலே வேதாந்தத்தை வேரோடவிட்ட சமர்த்த குரு ராமதாஸ் வளைய வந்த நாடு. இந்த மண்ணின் மாண்பு அனைத்தும் இவரது இரத்தத்தில் கலந்திருந்தது. என்றாலும், அதற்கு ஓர் உணர்ச்சி ஊட்டி ஓடவிட்டவர் பால்ஜீ பெண்டார்கர் என்பவர். மராட்டிய நாடக மேடையிலே இவர் மாஸ்டர் தீனநாத்துக்கு அடுத்த இடத்தை அடைந்தவர். இசையிலும் நடிப்பிலும் சிறப்புற்று விளங்கியவர். இவரையே குமாரி லதா தமது குருவாக மதிக்கிறார்.

காரணம், 'வாழ்க்கையில் எதை மறந்தாலும், நினைத்தாலும் 'ஞானேசுவரி'யை மட்டும் படிக்கத் தவறாதே. கீதைக்குப் பேருரையாக விளங்கும் அது உனக்கு வழி காட்டும். பொருள் விளங்கினாலும் விளங்கா விட்டாலும் தினமும் பாராயணம் செய். பொருள் விளங்காத இடங்களைக் குறித்து வைத்துக் கொண்டு என்னிடம் கேட்டுத் தெரிந்து கொள்!' என்று உபதேசித்த பெருந்தகை அவரே.

அவரது உபதேசத்தை மறவாது கடைப்பிடிக்கும் லதா கூறுகிறார்: "ஞானேசுவரி என் மனத்துக்கு இதம் தருகிறது. சிறு பிராயத்தில் தந்தையை இழந்து எத்தனையோ இன்னல்களுக்கு ஆளாகிய நேரத்தில் கைகொடுத்து உதவி என் மன அமைதியைக் காத்தது. எனக்குக் குருவாகி நின்று வழிகாட்டிய பெண்டார்கரை என்றும் மறவேன்."

உயிரின் மதிப்பு



தகவல் :
"பாணன்"

கவிஞர் ராபர்ட் பர்ன்ஸ் ஒரு நாள் தெம்ஸ் நதிக் கரையில் உலாவிக் கொண்டிருக்கையில், ஆற்றில் விழுந்து தத்தளிக்கும் ஒரு மனிதரைக் கண்ணுற்ருர். உடனே ஆற்றை நோக்கி ஓடினர். அக்கம் பக்கத்திலிருந்த சிலரும் ஓடோடி வந்து உதவி செய்யவும், ஆற்றில் விழுந்தவரை உயிரோடு கரை சேர்க்க முடிந்தது. நீரில் மூழ்கித் தவித்த அம்மனிதர் யார் என்பது உடனேயே அனைவர்க்கும் விளங்கியது. பிரபல கோடீசுவரர் அவர். அதோடு பெரிய கருமி என்பதும் பிரசித்தம். உயிர் பிழைத்த கோடீசுவரர் மெல்ல எழுந்து தம் சட்டைப் பையில் கைவிட்டுத் துழாவி ஒரு பென்னி நாணயத்தை எடுத்து நீட்டினர், தம்மைக் காப்பாற்றியவரிடம்! அவருக்கு உதவி அளித்தவர்களெல்லாம் கோடீசுவரனின் இச் செய்கையைக் கண்டு வெகுண்டனர். கவிஞர் பர்ன்ஸ், நிதானமாக, 'கோபித்துக் கொள்ளாதீர்கள்! தம் உயிரின் மதிப்பு அந்தக் கனவானுக்குத் தெரியாதா என்ன?' என்ருர்.

□ □ □ □ □ □ □ □ □ □ □

வாழ்க்கைக்காகத் திரையுலகப் பாடல்கள் பாடினாலும், இவரது மனத்தை மிகவும் கவர்ந்தவை 'பாவ கீத்' என்னும் பக்திரசப் பாடல்கள். ரசங்களில் பிடித்தது கருணை ரசமே. உள்ளத்தை உருக்கும் இசைதான் தமக்கு மிகவும் பிடித்தது என்று கூறும் லதா, அந்தச் சக்தி பாவ கீதத்துக்குத்தான் இருக்கிறது என்று ஓர் அழுத்தம் கொடுத்துக் கூறுகிருர்.

இசைக்கு இலக்கணம் வகுப்பது போலக் கூறும் இவரது கருத்து இதோ :

"இசை என்பது இதயத்திலிருந்து பிறக்க வேண்டும். அப்பொழுதுதான் அது மற்றவர்களின் இதயத்தில் இடம் பிடிக்க முடியும். இதயத்தோடு இதயத்தை ஒன்றச் செய்வதே இசையின் பயன்."

சொல்லைச் செயலாக்க முயன்ற லதாவின் திரையுலகப் பிரவேசம், சொந்தக் குரலில் பாடி நடிப்பவர்களை இருந்த இடம் தெரியாமல் அடித்து விட்டது.

இதுவரை 15,000க்கும் மேல் இசைத் தட்டுக்கள் கொடுத்திருக்கும் லதா, ஒரு சில திரைப்படங்களில் நடிக்கவும் செய்திருக்கிருர். 'கஜா பாவூ', 'சிதி ஹான்ஸாஸ் மங்களா கௌர்' என்னும் 'மராட்டியப் படங்களே அவை. இசையோடு நடிப்பும், நடிப்போடு சித்திரமும் இவருக்குக் கைப் பழக்கம். எத்தனையோ அழகிய சித்திரங்கள் தீட்டியிருக்கும் இவர் புகைப்படக் கலையையும் நன்கு பயின்றிருக்கிருர்.

எத்தனை பொம்மைகள் இவரது 'காமிரா'வுக்கு 'போஸ்' கொடுத்திருக்கின்றன, தெரியுமா? இவர் தம் வாழ்க்கையில் கல்யாணம் செய்து கொள்ளாமல் கன்னியாக இருந்த பொழுதிலும் பொம்மைகளுக்குக் கல்யாணம் செய்து வைத்து அழகழகான படங்கள் எடுத்து வைத்திருக்கிருர்.

விகவாஸ் குண்டே என்பவர் மராட்டிய திரை உலகத்தில் புகழ் பெற்ற நடிகர். அவர் தூக்கமின்மையால் தவித்தார். சிகிச்சை செய்த டாக்டர்கள் இப்படியே இவர் தூக்கமின்மையால் அவதிப்பட்டால் மீளாத் தூக்கத்தில் ஆழ்ந்துவிட நேரும் என்று கூறிக் கைவிரித்து விட்டார்கள். இதைக் கேள்விப்பட்ட லதா அவர் வீட்டுக்கு விரைந்தார். வருத்தமே உருவாக உட்கார்ந்திருந்த அவரது சுற்றத்தார்களுக்கு ஆறுதல் சொல்லிவிட்டுக் குண்டேயின் தலைமாட்டில் உட்கார்ந்து தமது இனிமையான குரலில் பக்திப் பாடல் ஒன்றை நெஞ்சுருகப் பாடினர். என்ன ஆச்சரியம்! பக்தி நிறைந்த அவரது இசைவெள்ளத்தில் குண்டே மூழ்கிக் கண்ணும் அயர்ந்து விட்டார். டாக்டர்களின் மருந்தினால் செய்ய முடியாத காரியத்தை இவரது இசை செய்து காட்டியது. நம்ப முடியாதது என்று கூறினும், நடந்த நிகழ்ச்சி ஆயிற்றே! நம்பாமல் எப்படி இருக்க முடியும்?

பின்னணி இசையுலகம் ஓரிருவர் ஆதிக்கத்துக்கு உட்பட்டிருக்கக் கூடாது. பலரும் அதில் பங்கு கொள்ள வேண்டும், பயன் பெற வேண்டும் என்று கூறும் லதா அதற்கு முன்னேடியாகவும் வழிகாட்டுகிருர். பிறரும் இத்தொழிலில் ஈடுபட வேண்டும், முன்னுக்கு வரவேண்டும் என்ற எண்ணத்தில், இவர் ஒதுங்கிக் கொண்டு இடம் கொடுப்பதோடு, கலைச் சிறப்புக் கொண்டவர்களுக்குச் சிபாரிசு செய்யவும் தயங்குவதில்லை.

இந்தப் பரந்த மனப்பான்மை இவரது இசைக்கு இன்னும் பெருமை சேர்க்கிறது; புகழுக்கும் உயர்வுக்கும் துணை நிற்கிறது.

லதாமங்கேஷ்கர் வெறும் பின்னணிப் பாடகி மட்டும் அல்ல; சிறந்த சங்கீத டைரக்டரும்கூட. 'ஆனந்த கன்' என்னும் பெயரில் இவர் பல மராட்டிப் படங்களுக்கு இசை அமைத்திருக்கிருர். 'சாதி மாணஸே' என்னும் படம் மகாராஷ்டிர ராஜ்யத்தில் சிறந்த சங்கீதத்துக்காகச் சென்ற ஆண்டு — அதாவது 1966ம் ஆண்டு பரிசு பெற்றிருக்கிறது. அந்தப் புகழுக்கு முழுக்க முழுக்கப் பொறுப்பானவர் குமாரி லதா மங்கேஷ்கரே ஆவார்.


1941ம் ஆண்டில் திரைப் பாடல் உலகத்தில் புகுந்த இவருக்கு இசைப் பெருமை அளித்த படம் 'பர்ஸாத்' ஆகும். இச்சொல்லுக்கு 'மழை' என்று பொருள். பொருளுக்கேற்பப் புகழ்மாரியை வாரி வழங்கும் இவரது இசைக்கு வெள்ளி விழா என்ன, தங்க விழாவே நடத்துவோம். இவரது பெயரும் புகழும் இவ்வுலகில் தங்க — தங்கி நிற்க இசையன்னையின் அருள் கிட்டட்டும் என்றும் வாழ்த்துவோம். — ரா. வீ.

மூன்றாவது பரிசு நாவல்

மணக்கோலம்

பி.வி.ஆர்

அத்தியாயம் 7



சந்தானம் மௌனமாகப் பலத்த சிந்தனையில் ஆழ்ந்து விட்டதைக் கண்டதும், ''என்ன பதில் பேசாமல் இருக்கிறீர்கள்?'' என்று கேட்டாள் சீதா.

''ஒன்றுமில்லை சீதா... அம்மா மனசு வேறு எதைப் பத்தியாவது கவலைப்பட்டுண்டிருக்கும்...''

அதன் பிறகு சீதா வேறு ஏதும் கேட்காமல் திரும்பினாள்.

தினம் தினம் கேட்டுக் கேட்டுப் பரிமாறும் பாகீரதி, அன்று இயந்திரமாகப் பரிமாறிவிட்டுப் போனாள்.


கறி, சாதம், நெய், குழம்பு என்று ஒவ்வொன்றாக ஹோட்டலில் வந்து போவது போலக் கலத்தில் வந்து விழுந்தன. சந்தானத்துக்கு இதனாலெல்லாம் அவள் மீது ஆத்திரமோ வெறுப்போ உண்டாகவில்லை. மனித சுபாவத்தைத்தான் அவன் கண்கூடாகப் பார்க்கிறான். இதே ரகுபதியைப் பற்றி வாயாரப் புகழ்ந்து அவனைவிடச் சிறந்த வரன் இந்த ஜன்மத்தில் சீதாவுக்கு கிடைக்கவே கிடைக்காது என்று அவன் காலையில் சொல்லியிருந்தால், இலையில் பழமும் பாயசமும் அல்லவா விழுந்திருக்கும்?

பாகீரதியின் போக்கு மாறியது என்பதற்காக அவன் மாறிவிடவில்லை. வழக்கம் போலச் சிரித்துக் கொண்டே

ஏதேதோ பேசிக் கொண்டேதான் சாப்பிட்டான். கறியையும் குழம்பையும் உரிமையுடன் கேட்டுப் போட்டுக் கொண்டான். இத்தனை நாட்கள் இந்தத் தன்மையையே புகழ்ந்து, சந்தானம் தன் வீட்டு மனிதன், தான் பெறாத பிள்ளை என்றெல்லாம் கருதின பாகீரதிக்கு அன்று அவனுடன் உரிமை கொண்டாடவே வெறுப்பை அளித்தது. ஆனால் வாய்மூலம் அதைக் காட்டிக் கொள்ளவில்லை.

ரகுபதி வேண்டாம் என்றல்லவா இந்தச் சந்தானம் சொல்லி விட்டான்! ஏன்? அவனுடைய சொத்து காசும் பொறாமையைத் தூண்டி விடுகின்றனவா! ஏழைக்கு இன்னோர் ஏழை மீது இரக்கம் இராது என்பார்களே அது சரிதானா? இப்படியெல்லாம் அவளுடைய மனம் பின்னியது.

அன்று பகல் சாப்பாட்டுக்குப் பிறகு இரவு வரையில் சந்தானம் பாகீரதியைப் பார்க்கவேயில்லை.



* * *

திங்கட்கிழமை.

அலமேலு அம்மாளும் பாகீரதியும் நடத்திய சம்பாஷணையை முழுக்க முழுக்கக் கேட்டவள் கமலா. ஞாயிற்றுக்கிழமை முழுவதும் அவள் அதைப் பற்றிப் பேசவில்லைதான். ஆனால் கமலாவின் பொறுமை எல்லை கடந்து போய்க் கொண்டிருந்தது. விஷயத்தை முழுதும் சீதாவிடமும், சந்தானத்திடமும் தன் வாயாலேயே கொட்டித் தீர்க்க வேண்டும் என்று அவள் துடியாகத் துடித்தாள். ஞாயிற்றுக் கிழமை பகல் முழுவதும் அம்மா வீட்டிலேயே இருந்ததும், சீதா முதலியார் வீட்டுப் பெண்ணுடன் ஏதோ ஓர் உபந்நியாசம் கேட்கப் போனதும் அவளுடைய ஆவலுக்குத் தடையாகப் போயின. மேலும் சந்தானம் — எல்லா ஞாயிற்றுக் கிழமைகளிலும் வீட்டிலேயே உட்கார்ந்து ஏதாவது ஓர் ஆங்கில நாவலில் மூழ்கி விடும் சந்தானம் — சாப்பிட்டுவிட்டுப் போனவன் போனவன்தான்.

கமலாவுக்கு ஜானுவிடம் சொல்ல விருப்பமில்லை. ஜானு அலட்சியமாகக் கேட்டு விட்டு, அக்கறையில்லாமல் ஏதாவது ஏட்டிக்குப் போட்டியாகப் பேசுவாள். சீதாவின் வாழ்க்கை சம்பந்தப்பட்ட விஷயத்தை முதலில் சீதாவிடம்தான் சொல்ல வேண்டும் என்ற எண்ணம் வேறு அவளுடைய உள்ளத்தில் ஊன்றி நின்றது. கமலாவின் துரதிர்ஷ்டம் ஞாயிற்றுக்கிழமை சந்தர்ப்பம் வாய்க்கவில்லை.

திங்கட்கிழமை சாயந்திரம் ஐந்தரை மணிக்குச் சந்தானம் திரும்பி வந்தபோது கமலாவைத் தவிர வீட்-

டில் வேறு யாருமில்லை. ஆறு மணிக்குத் தான் ஜானுவே வருவாள். இன்னும் அரை மணி தாமதமாக வருவாள் சீதா.

அம்மா அலமேலுவைப் பார்க்கப் போயிருந்தாள். நான்கு மணிக்கே சென்றவளை இன்னும் காணோம்.

சந்தானம் வந்ததும் கமலா, ''என்ன இன்னிக்குச் சீக்கிரம் வந்து விட்டீர்கள்?'' என்று கேட்டாள்.

''ஏதோ வந்து விட்டேன்!'' என்று 'டை'யைக் கழற்றினான் அவன்.

அவன் உடுப்பு மாற்றட்டும் என்று சமையலறைக்குப் போன கமலா பத்து நிமிடங்களுக்குப் பிறகு காப்பியுடன் திரும்பினாள்.


''கமலா! வாசலிலே போய்க் கொஞ்சம் ஆகாசத்தைப் பார்த்து விட்டு வா!'' என்றான் சந்தானம்.

''ஏதுக்கு?''

''ஏதாவது கருமேகம் வந்திருக்கான்னு பார்...''

''ஏன்?''

''நீயாக நான் கேட்காமல் காப்பி கொண்டு வர வேண்



டுமானல் பலத்த மழை வராமல் இருக்குமா?'' என்ருன் சந்தானம்.

''உங்க ஹாஸ்யத்தை நீங்கதான் மெச்சிக்கணும்'' என்ற கமலா, ''அலமேலு மாமி நேத்திக்கு வந்தாள் தெரியுமில்லியா?'' என்று ஆரம்பித்தாள்.

''ஆமாம்... நான்தான் பார்த்தேனே?''

''அவ விரிச்ச வாய்ப் பந்தலிலே தேன் மாரி பொழிந்தது!''

''ஓ!''

''ரகுபதி மேலே ஸ்தோத்திர மணி மாலையே பாடி விட்டாள்...''

''அப்படியா?''

''அம்மா மயங்கி விழுந்தவள் விழுந்தவள்தான். கலியாணம் கண்டிப்பா நிச்சயமாகி விடும்.''

''நல்லதுதானே!''

''யாருக்கு? சீதாவுக்கா?''

''ஆமாம்...''

''நீங்க மனசாரச் சொல்லுகிறீர்களா?''

ஆறிக் கொண்டிருந்த காப்பியைக் குடித்த சந்தானம் கமலாவைப் பார்த்தான். தன் தமக்கைக்குக் கலியாணம் ஆகப் போகிறது என்று எந்த விதமான திருப்தியோ, மகிழ்ச்சியோ அவள் முகத்தில் தெரியவில்லை. ஒரு வேளை கமலாவும் இந்த வரனை விரும்பவில்லையோ?

''இதெல்லாம் சீதாவுக்குத் தெரியுமா?''

''நேத்து அலமேலு மாமி வந்து போனதுதான் அக்காவுக்குத் தெரியும். அம்மா இன்னும் வாயையே திறக்கவில்லை...''

''சீதா என்ன சொல்லுவான்னு உனக்குத் தோணறது கமலா...''

''அக்கா குணம் தெரியாதா? வேண்டாம்னு சொல்லுவாள். கொஞ்சம் இரைந்து பேசிப் பார்ப்பாள். அப்புறம் அம்மா ரெண்டு நாளைக்கு அழுவாள். சரியாகச் சாப்பிட மாட்டாள். பெத்த வயித்தைக் கத்தியாலே கிழிச்சுக்கணும்னு புலம்புவாள். அவ்வளவுதான் அக்கா சரின்னு சொல்லிடுவாள்.''

''இவ்வளவு எளிசா ஆயிடுமா?''

''சந்தானம்! என் அக்கா இருக்காளே அது ஒரு பரப்பிரும்மம் மாதிரி... ஒக்கார்ந்து ஒக்கார்ந்து ஏதாவது யோசனை பண்ணிண்டே இருப்பாள். ஆனல் அதிலே ஒரு முடிவும் வராது. மனசிலே என்ன நினைச்சுண்டிருந்தாலும் பேசறபோது முடிவே வேறு மாதிரியா யிருக்கும். தனக்கு இந்த ஜன்மத்திலே கலியாணமே வேண்டாம்னு நெனைச்சுண்டே யிருப்பாள். 'நீ இப்படிப் பிடிவாதம் செய்தால் நான் கிணத்திலோ, சமுத்திரத்திலோ விழுந்திடுவேன்'னு அம்மா பயமுறுத்துவாள் அவ்வளவுதான்....''

''ஓ! என்னல் நம்ப முடியவில்லை.''

''அக்கா தனக்கு இஷ்டமில்லாத காரியங்களைச் செய்யறதே இந்த மாதிரி ஒரு அழுகைக்கும் மிரட்டலுக்கும் அப்புறம்தானே!''

''அப்படியா?''

''அம்மா இன்னும் என்ன சொல்லுவாள் தெரியுமா? 'சீதா, நீ கலியாணம் பண்ணிக்க மாட்டேன்னு பிடிவாதம் பிடிச்சா, ஜானுவுக்கும் கமலாவுக்கும் எப்போதடி கலியாணம் ஆகும்?' என்று கேட்பாள். என்கிட்டேயோ ஜானு கிட்டேயோ இது மாதிரிக் கேட்டால் என்ன சொல்லுவோம் தெரியுமா?''

''ஆகாட்டாப் போறதுன்னு சொல்வீர்கள்!'' என்ருன் சந்தானம்.

''ஜானு அப்படித்தான் சொல்லுவாள். நான் 'எத்தனையோ வீடுகளிலே அக்காவுக்கு முன்னடி தங்கைக்கு ஆனதில்லையான்னு' கேட்பேன்.''

சந்தானம் சிரித்தான்.

பிறகு திடீரென்று கமலா குரலைக் கடுமையாக்கிக் கொண்டாள்.

''மிஸ்டர் சந்தானம்! யார் கிட்டேயும் சொல்லாதீர்கள். அம்மா கிட்டேயும் கேட்கக் கூடாது. இந்த அலமேலு மாமிக்கு உங்களைக் கண்டாலே பிடிக்கவில்லை!''

''உனக்கு எப்படித் தெரியும்?''

''நேத்திக்கு அவா ரெண்டு பேரும் கூடத்திலே பேசிண்டிருந்தபோது நான் இந்த அறையிலேதான் ஒளிஞ்சிண்டிருந்தேன்....''

''இனிமே நான் அறையைப் பூட்டிண்டு தான் போகணும்...!''

''என்னமோ செய்யுங்கள். அலமேலு மாமிக்கு நீங்க முந்தா நாள் ராத்திரி ரகுபதியை 'மீட்' பண்ணிப் பேசியதே தப்பாகப் படுகிறது!''

''அப்படியா....?''

''அவன் நேத்துக் காத்தாலே வந்து குதி குதின்னு குதிச்சானும் அவள் கிட்டே. ஏன் அப்படிக் குதிச்சான்னு எனக்கு மர்மமாயிருக்கு... ஒரு பிள்ளைக்குப் பெண் கொடுக்கிறவா விசாரிக்கிறதிலே என்ன தப்பு!''

''அதிலே தப்பு இல்லே, கமலா! நான் விசாரிச்சேனே அதுதான் தப்பு.. சரி, சரி விடு... இந்த விஷயமா நீ என்னிடம் பேசினது உங்க அம்மாவுக்குத் தெரிஞ்சா வாயில் வந்தபடி வசைமாரி பொழிவாள்.... ஏன் தெரியுமா? எனக்கு ரகுபதியைப் பிடிக்க

வில்லைன்னு உன் அம்மாவுக்குத் தெரியும்!''

''இப்போ எனக்கு எல்லாம் புரிகிறது!'' என்ற கமலா, ''ஏன் உங்களுக்கு ரகுபதியைப் பிடிக்கவில்லை?'' என்று கேட்டாள்.

''அதை உன்னிடம் சொல்லக் கூடாது. ஊரெல்லாம் பறை கொட்டுவாய்... அப்புறம் நான் அறையைக் காலி பண்ணிவிட்டுப் போய்விட வேண்டியது தான்.''

திடீரென்று கமலாவுக்குக் கோபம் 'பொத்து'க் கொண்டு வந்தது.

''என் வாய் என்ன அப்படி ஓட்டை வாயா?''

''அதுக்கில்லை கமலா. என் விருப்பத்தை மீறி இந்த வரனை உன் அம்மா முடிச்சான்னு வைச்சுக்கோ, நான் இப்போ சொல்வதெல்லாம் மனசிலே நின்னு கஷ்டப்படுத்தும்... இது இல்லைன்னு தீர்மானமாகிவிட்டால் அப்புறம் சொல்றேன்...''

''அப்போ அலமேலு மாமி சொன்னாளே அதெல்லாம் பொய்யா? வீடு இருக்காம், வாசல் இருக்காம், கார் இருக்காம்....''

''இதெல்லாம் இருக்கு... வாஸ்தவம்தான். ஆனா இதெல்லாம்தானா முக்கியம்?''

''அப்போ?''

''இனிமேல் இதைப் பற்றிக் கேட்காதே, கமலா!''

கமலாவுக்கு விஷயம் என்னவென்று விளங்காவிட்டாலும், ஏதோ ஒரு குறை ரகுபதியிடம் இருக்கிறது என்பதைப் புரிந்து கொண்டாள். ஒருவேளை அம்மாவே இந்தக் குறையை அறிந்த பின்தான், அதை மறந்து விட்டு, கலியாணத்தை நிச்சயிக்க முடிவு பண்ணியிருக்கிறாளோ?

ஆறே கால் மணிக்கு அவசரம் அவசரமாக வந்த ஜானு, சந்தானத்தையோ கமலாவையோ லட்சியம் செய்யாமல் முகத்தைக் கழுவிவிட்டு அலங்காரத்தில் ஈடுபட்டாள். பெட்டியிலிருந்து ஏழெட்டுப் புடவைகள் வெளியே விழுந்து சிதறின. எதைக் கட்டிக் கொள்ளுவது, எந்தப் புடவைக்கு எந்த ரவிக்கை நன்றாக அமையும் என்றெல்லாம் தனக்குள் கணக்குப் போட்டுவிட்டுக் கடைசியில், ஊதா நிற ஜார்ஜட் புடவையையும் அதே நிறச் சோளியையும் எடுத்தாள்.

கைக் கடிகாரத்தைக் கட்டிக் கொண்டே அவள் கூடத்துக்கு வந்தபோது, ''எங்கேடி கிளம்பறே, ஜானு?'' என்று கேட்டாள் கமலா.

''போகும்போதே அபசகுனம்...! நான் எங்கே போனால், என்ன?''

அவள் குரலின் எதிரொலி அடங்குவதற்குள் பாகீரதியே வந்து நின்றாள். ஜானுவைப் பார்த்தபோதே அவளுக்கு ஆத்திரம் பீறிட்டுக் கொண்டு வந்தது. அவளுடைய கைக்கடிகாரமும் நாகக்காக வலது கையிலிருந்த பர்ஸும் கோபத்துக்கு எண்ணெய் வார்த்தன.

''எங்கேடீ கிளம்பிட்டே?''

''அப்படிக் கேளு அம்மா! மணி ஆறரை ஆகப் போகிறது. லங்கிணி மாதிரி கிளம்பிட்டா!''

''டீ, கமலா... நீ பேசாமல் இரு. நான் கேட்டுக்கிறேன்...''

''கேளு அம்மா!''

தன் விரைவைத் துண்டித்து நிற்கும் அம்மாவை ஒரு கணம் ஏறிட்டுப் பார்த்த ஜானு, ''நானும் டீச்சர் விசாலமுமாய்ச் சபாவுக்குப் போகிறோம்...'' என்றாள்.

''இன்னிக்கு என்னடீ சபாவிலே?''

''அவளுக்குத் தெரிஞ்சவா வீட்டுப் பெண்ணின் நாட்டிய அரங்கேற்றம்.''

''வேறே வேலை இல்லியா? நீ போக வேண்டாம். ராத்திரி இல்லை, பகல் இல்லைன்னு ஊர் சுற்றி, ஊர் சுற்றிக் குடும்ப மரியாதையையே விலைக்கு வாங்குகிறவள் அந்த டீச்சர் விசாலம்! அவள் எங்கே வேணுமானாலும் போகட்டும்... இல்லை, டான்ஸை வேணுமானாலும் ஆடட்டும். நீ போக வேண்டாம்...''

''சரி, சரி... நீ இப்படித்தான் கத்திண்டே இருப்பே. நான் போறேன். வந்து பேசிக் கொள்ளலாம்...''

அடுத்த கணம் அம்மாவைத் தாண்டிக் கொண்டு ஜானு தாவி ஓடினாள்.

''பார்த்தாயாடி.... நான் பெத்த பொண்ணு. என்னையே மீறிண்டு போறது. என் தலை எழுத்து.''

''நீ ரொம்பத்தான் அவளுக்கு இடம் கொடுத்துட்டே!'' என்றாள் கமலா.

கமலா பேசி முடித்தாள். அடுத்த நிமிஷம் சீதா மெள்ள உள்ளே வந்து குடையை ரேடியோ மேஜையின் மீது வைத்துவிட்டு, ''அம்மா!'' என்றாள்.

''அலமேலு மாமியின் தங்கை பிள்ளையாமே மிஸ்டர் ரகுபதி. அவர் இன்னிக்கு என்னைப் பார்க்க ஆபீசுக்கு வந்தார். நீயும் அலமேலு மாமியும் ஏற்பாடு பண்ணித்தான் அவர் என்னைப் பார்க்க வந்தாராம்! நீ ஏன் என்கிட்டே முதலிலேயே சொல்லலை?'' என்று கேட்டாள் சீதா. பாகீரதி இதைக் கேட்டுத் திடுக்கிட்டாள்.

(தொடரும்)

திட்டும் கலையும் திருவள்ளுவரும்



ந. சஞ்சீவி

திருவள்ளுவர் தினத்தைக் கொண்டாடும் இன்று (மே 23ந்தேதி) இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே இன்றைக்குள்ள நிலைக்கேற்பக் குத்தல் மொழியால் குறள் எழுதிய வள்ளுவர் பெருந்தகையின் தீர்க்க தரிசனத்தை எண்ணி வியக்கிறோம்.

ஒரு சிலருக்கு உரைப்பது உறைப்பதில்லை! அதனால் பிறந்தது திட்டு! அது ஒரு கலையும் ஆயிற்று! அக் கலை வழிபாடு கடவுளுக்கும் நிகழ்ந்தது! ஆண்டவனும் அதை ஏற்றுக் கொண்டான். அது மட்டுமன்று. சில நேரங்களில் திட்டியவர்க்கே அவன் திருவருள் புரிந்தான்! அதனால்தானே 'முத்தமிழால் வைதாரையும் வாழ்விப்போன்' என்று முருகனை நோக்கி முழங்கினார் அருணகிரியார். இப்படிக் கடவுளும் காதல் கொள்ளும் கலைகளுள் ஒன்றாய் வளர்ந்த திட்டும் கலைக்கும் வாழையடி வாழையாய் வளர்ந்த வரலாறு ஒன்று உண்டு. அவ்வரலாற்றின் தொன்மையைக் காட்டுகிறது தொல்காப்பியம். மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு தோன்றிய அந்நூல் ஒரு தலைவனைப் போற்றி வாழ்த்தும் வகைகளுள் ஒன்றாக 'வாயுறை வாழ்த்து' என்று ஒரு வகைத்துறை — செய்யுள் பற்றிப் பேசுகிறது. அது என்ன வாழ்த்து என்கிறீர்களா? வேம்பும் நஞ்சும் போன்ற வெஞ்சொற்களைப் பயன்படுத்திப் படிப்போர்க்கு நல்வழி காட்டும் துறையமைந்த பாட்டு வகையே வாயுறை வாழ்த்து. இந்த இலக்கணத்துக்கு ஏற்ற இலக்கியமே திருவள்ளுவர் திருக்குறள். இது எளியேன் கருத்தன்று! இளவேட்டனார் என்ற பழம் புலவர் கருத்து!

இன்பமும் துன்பமும் என்னும் இவையிரண்டும்
மன்பதைக் கெல்லா மனமகிழ - அன்பொழியா(து)
உள்ளி உணர உரைத்தாரே ஒதுசீர்
வள்ளுவர் வாயுறை வாழ்த்து.

என்பது 'திருவள்ளுவ மாலை'யில் அவர் பெயரால் திகழும் பாட்டு.

திருவள்ளுவர் நம்பால் மிகுந்த நல்லெண்ணம் கொண்டவர். எப்படியாவது நம்மைக் காப்பாற்ற வேண்டும் என்ற அருளுடையவர். அதனால் தான் 'அன்பொழியாது' வேல் போலும் வெஞ்சொற்களை வீசினார்! உள்ளி உணர உரைத்தார்! 'வாயுறை வாழ்த்து' என்னும் புகழுரையை எந்த நூலுக்கும் கிடைக்காத பொன்னுரையைத் தம் நூலுக்குத் தட்டிக் கொண்டார் — இல்லை — திட்டிக் கொண்டார்!

வாய் என்றால் சொல்; உறை என்றால் மருந்து; வாயுறை என்றால் சொல் மருந்து. நல்லெண்ணத்தோடும் நல்கும் மருந்தாதலால் அது வசவு போல் தோன்றினும் வாழ்த்து. இதை ஒட்டியே போலும் இன்றும் கூடப் பேச்சு வழக்கில் ஏழை மக்கள் 'நல்லாப் பாட்டு வாங்கப் போறேன்' என்று நைந்து கொள்வதும் 'நல்லாக் கொடை கொடுத்தேன்' என்று புலவர் பெருமக்கள் நமட்டடைச் சுவைப்பதும்!

திட்டும் ஒரு கலை! நம் நாட்டில் மட்டும் அன்று; எல்லா நாட்டிலும். ஆங்கிலப் பேரறிஞர் டாக்டர் ஜான்ஸன் அருமையாகச் சொன்னார் — 'திட்டும் ஒரு தொண்டே' என்று. திட்டின் உயர்ந்த நிலையே குத்தல் (Satire). இந்தக் குத்தல் ஒரு கலையாய் நம் நாட்டிலும் மேற்கு நாடுகளில் மேன்மை பெற்று விளங்குகிறது. அதனால் அக்கலையைப் போற்றிப் புகழ்வார் அந்நாட்டுப் பேரறிஞர். 'ஓ! குத்தல் கலையே! நீ சட்டங்களின் சரியான துணைவன்!' என்று இசைத்தான் யங் என்ற ஆங்கிலக் கவிஞன். 'சட்டத்துக்கு அஞ்சாத உள்ளங்கள் குத்தலுக்குக் குலை நடுங்குகின்றனவே' என்று சாற்றினான் டைரன். 'குறைகளைக் குறைப்பதே குத்தலின் குறிக்கோள்; நேர்மையாகக் குத்தல் செய்வோன் குற்றம் புரிவோனின் பகைவனாக ஒரு நாளும் ஆகான். நோயாளிக்குக் கடும் பத்தியம் வைக்கும் மருத்துவன் போன்றவனே அவன்' என்றான் டிரைடன். இப்படி ஒரு குரலில் புகழ் பெற்ற ஆங்கில நாட்டுக் கவிஞர் போற்றும் திட்டும் கலையையும் குத்தல் கலையையும் அளவறிந்து போற்றிய அருமையும் பெருமையும் இன்பத் தமிழ்க் கவிஞர்க்கு என்றும் உண்டு. அவர்களுள் தலையாயவர் தமிழ் மறை — இல்லை — பொதுமறை தந்த திருவள்ளுவர்.

நாட்டில் ஒருவன் நன்மகனும் [வாழ் கின்றான் என்றால் அவன் பிறர்க்கு உதவியாய் வாழ்கிறான் என்று பொருள். உலகத்தார்க்கு உதவியாய் வாழாதவனால் யாருக்கு என்ன பயன்? இந்த உலகம் 'அவன் இருந்தால் என்ன! செத்தால் என்ன!' என்றுதான் பேசும். இந்தப் பேச்சை — மக்கள் பேச்சை— அப்படியே வள்ளுவரே பேசுகிறார் !

ஒத்த தறிவான் உயிர் வாழ்வான் மற்றையான் செத்தாருள் வைக்கப் படும்.

ஒரு வகையில் புலவர்கள் எல்லாம் பொது மக்களின் தலைவர்கள் என்பது பெரிய உண்மை. நாட்டுப்புற மக்களின் சொல்லையும் கருத்தையும் பாட்டுப்புறத்தில் நாட்டுகின்ற வர்களே கவிஞர்கள். அதனால்தான் அவர் களுடைய தமிழ் என்றும் இனியதாய்— அழகியதாய்க் — கன்னித் தமிழாய்க் காட்சி அளிக்கிறது. செங்கோலின் செம்மையையும் கடுங்கோலின் கொடுமையையும் வள்ளுவர் குறள் வளமாகக் காட்டுகிறது. அதில், ஒரு குறள் 'பூமிக்குப் பாரம்' என்று பூ விற்ப வளும் சொல்லும் சொல்லைச் சொல்கிறது. 'ஐயோ! எங்கள் அரசன் கடுமையானவன்!' என்று மக்களால் தூற்றப்படும்படி ஆட்சி செலுத்தும் மன்னவன் கோல் கொடுங் கோல்! அந்தக் கடுங்கோலுக்கு — அச்சம் நிறைந்த ஆட்சிக்கு — கல்வி அறிவு இல்லாத வர்களே 'அமைச்சர்'களாய் இருப்பார்கள்! ஆம். இது நாம் கண்ணார இல்லை — கண் ணெரியக் கண்டதுதானே. இப்படிக் காண் போர் கண்ணெரிய நடக்கும் ஆட்சியையும் அதை நடத்தும் ஆட்சியாளரையும் போல நிலத்துக்கு வேறு சுமையே இல்லை அல்லவா?

கல்லார்ப் பிணிக்கும் கடுங்கோல் அதுவல்லது இல்லை நிலக்குப் பொறை.

பூபாரம் சுமக்க வேண்டியவன் பூமிக்குப் பாரம்!

தமிழன் என்ற பேர் இருந்தால் போதுமா? தமிழன் என்ற பண்பு வேண்டாமா? அப்படி இல்லாதவரைப் பார்த்துத்தானே பாரதியார் 'நாமமது தமிழரெனக் கொண்டிங்கு வாழ்ந் திடுதல் நன்றோ?' என்று நன்றாகக் கேட்டார். இது போலக் கண்ணிருந்தும் குருடர் — காது இருந்தும் செவிடர் — எத்தனையோ? ஆங் கிலத்தில் 'அருளில் தோய்ந்த அறம்' சிறந் தது என்ற ஒரு கருத்து உண்டு. அக்கருத்தே 'கண்ணோட்டம்' என்ற தமிழ்ச் சொல்லின் கருப் பொருள். அப்பொருள் இல்லாத பார்வை பொருளற்றது. அதனால் இந்தக் கண்ணால் என்ன பயன் என்று கேட்கிறார்? அதைக் கேட்பது மட்டுமல்ல, அந்தத் திருக் குறளின் சிறப்பு. அந்த வினாவுக்கு உவமை யாக இன்னொரு வினாவும் விடுகிறார். 'பாட் டோடு பொருந்தாத இசையால் என்ன பயன்?' என்பதே அந்த வினா. வள்ளுவரின் 'கண்ணோட்டம்' பற்றிய இந்தக் கருத்தோட் டம் எதிர்பாராத வகையில் தமிழிசை இயக் கம் பெற்ற தனிப் பரிசு !

பண்ணென்னும் பாடற்கு இயைபின்றேல் கண்ணென்னும் கண்ணோட்டம் இல்லாத கண்.

குருட்டுக் கண்களைப் போலவே செவிட்டுக் காதுகளும் உண்டு. இயற்கையாகக் காதில் இருக்கும் தொளை போதாது என்று செயற்கை யாக வேறு தொளை போட்டுக் கொள்கிறோம்! இராமலிங்க அடிகளார் இகழ்ந்து இயம்பியது போல அப்படி ஓர் அழகை மக்கள் செய்து கொள்வதை ஆண்டவன் விரும்பி இருந்தால் காதையும் மூக்கையும் தொளை போட்டே தந்திருப்பான் அல்லவா? ஆனால் இந்தத் தொளைகளால் என்ன பயன்? சிறந்த பெரி யோர்களின் பேச்சுக்கள் நம் செவியைத் தொளைக்க வேண்டும். 'கற்றலினும் கேட் டலே நன்று' — எதைக் கற்பது என்று தேர்ந்து அவற்றைக் கசடறக் கற்றுத் தெளிவது என்பது அருமை. ஆனால் பாடுபட்டுக் கற்றோ ரிடம் அவர் தேர்ந்து கற்றுத் தெளிந்ததைச் சில மணி நேரங்களில் கேட்டுப் பயன் பெறல் எளிமை! அதனால்தான் இவ்வளவு எளிய வழியில் அரிய பயனைப் பெறவும் முயற்சி யற்ற 'வாழைப்பழச் சோம்பேறி'களிடம் வள்ளுவருக்கு வரும் சினம் சிறிதன்று.

கேட்பினும் கேளாத் தகையவே கேள்வியால் தோட்கப் படாத செவி.

'மக்கள் வாக்கு தெய்வ வாக்கு' என்பது ஏறத்தாழ எல்லா நாட்டிலும் வழங்கும் வாய் மொழி. இந்த உண்மை தேர்தல் காலத்தில் தெளிவாகத் தெரிந்தாலும் எல்லாக் காலத்தி லும் போற்றத்தக்க பொன் மொழி. இதை நன்றாக உணர்ந்தவர்கள் புலவர் பெரு மக்கள். அதனால்தான் அன்றாட வாழ்க்கை யில் அங்காடியில் அவர்கள் கேட்கும் சொல்லை யும் கருத்தையும் கூடச் சுவைப் பாகாக்கி இலக்கியப் பெருமை பெற விடுகிறார்கள் — இல்லை — பெற்று விடுகிறார்கள்! 'சொந்த புத்தியாவது இருக்கணும்; சொற் பேச் சாவது கேட்கணும்' என்ற சொற்களை அரிச் சுவடி படிக்கும் குழந்தை முதல் அமைச்சு நடத்தும் அரசியல் தலைவர் வரை எத்தனை பேர் — எத்தனை முறை — கேட்டிருக்கிறார்கள்! மதித்து வாழ்ந்தவரும் உண்டு; மிதித்து வீழ்ந்தவரும் உண்டு. இப்படி வீழ்வார் சாகும் வரை ஒரு நோய் என்று வெறுக் கிறார் வள்ளுவர். ஆம். அவர்கள் தங்களுக்கு மட்டுமா நோய்? மற்றவரையும் வாழ விடாமல் வாட்டும் தொத்துநோய் !

ஏவவும் செய்கலான் தான்தேறான் அவ்வுயிர் போஒம் அளவுமோர் நோய்.

'மரம் மாதிரி நிற்கிறான் பார்' என்றும் 'கத்த மரக்கட்டை' என்றும், 'மரமண்டை' என்றும் மக்கள் பேசுவது இல்லையா? மக்க ளுக்கு இருக்கும் அந்தப் பேச்சுரிமை மக்கள் கவிக்கும் உண்டல்லவா? சிலர் அறிவு இருக் கும் கூர்மையைப் பார்க்கும்போது தமிழறிவு இல்லாதார் 'அரிவு' என்று எழுதுவதிலும் தத்துவ அறிவு துலங்குகிறது! ஆம், அந்தச் சில பொல்லா அரக்கரின் அறிவு அரிவுதான்! அது எதையும் — எவரையும் — அரிந்து அரிந்து தள்ளும். அவ்வளவுதான். அழிக்கும்—ஆக் காது ! இத்தகைய ஓர் உளவியலுக்கு என்ன காரணம்? மக்கட் பண்பு அந்த மரமண்டை கட்கு இல்லாததுதான் ! அவர்களை விடு வாரா வள்ளுவர் ?

அரம்போலுங் கூர்மைய ரேனும் மரம்போல்வர் மக்கட்பண் பில்லா தவர்.



"பேஷ், சிவராமா! பால்ய சிநேகிதன்டா நான்! என்னை ஞாபகம் இருக்கிறதா?"

"உன்னை ஞாபகம் இல்லே, ஆனால் இந்தக் 'குத்தை' முன்னே எங்கேயோ அனுபவித்தமாதிரி ஞாபகம் வரது!"

ஒரே கல்லில் இரண்டு மாங்காய் அடிப்பது திறமையேதான். திருவள்ளுவருக்கு இந்தத் திறமை இல்லை என்றால் அப்புறம் அவர் என்ன திருவள்ளுவர்? இந்த நாட்டில் ஓராண்டுக்கு முன் இந்தி எதிர்ப்புப் போர் ஓங்கி எழுந்த போது ஒரு பெரும் பேராசிரியர் ஒரு பெருந் தலைவரிடம் விரைந்து சென்று, 'இளம்பிள்ளைகளை அடிப்பதையும் சுடுவதையும் நிறுத்தச் சொல்லுங்கள்' என்று வேண்டினார். அப்போது அந்த மாபெரும் தலைவர் பொருமினார்: 'என்ன மாணவர்கள்? இவர்களுக்குத்தான் கல்லெடுத்துப் போடத் தெரியுமா? எனக்குத் தெரியாதா? நானும் போடுவேன்' என்று. 'அந்த நாள் தமிழரசு இந்த நாள் இல்லை' என்று உள்ளம் நொந்து அப்பெருந் தமிழ்ப் பேராசிரியர் வீடு திரும்பினார். திருவள்ளுவர் அரசியல் அறிந்தவர். ஆனால் அவர் கல்லெடுத்துப் போடவில்லை; சொல்லெடுத்துப் போடுகிறார்! ஒரு கல்லில் இரு காய் விழ—கல்—இல்லை — சொல் வீசுகிறார். 'உணவுச் சுவையே தெரியும்; உணர்வுச் சுவையே தெரியாது' — இப்படி ஒரு கூட்டமும் கடவுள் படைப்பில் உண்டு! அந்தக் கூட்டம் விலங்குகளின் கூட்டமாகவே வள்ளுவருக்குப் படுகிறது. அந்த விலங்குகள் வாழ்ந்தால் என்ன? செத்தால் என்ன? என்கிறார். ஆம், ஒரே பாட்டில் இருவகைத் திட்டு!

செவியிற் சுவையுணரா வாயுணர்வின் மாக்கள்
அவியினும் வாழினும் என்?

'மிதவாதி'யாக இருக்கும் திருவள்ளுவர் சில நேரங்களில் 'தீவிரவாதி'யாகவும் ஆகிவிடுவது உண்டு. திட்டும் போதும் அப்படி அவர் ஆகிய இடம் எப்போது பார்த்தாலும் புறங்கூறித் திரிபவர்களை எண்ணியபோது தான்! முன்னே பார்க்கும் போது 'இ—ஈ' என்பார்கள்; முதுகுக்குப் பின்னால் இல்லாது பொல்லாது எல்லாம் பேசுவார்கள். இந்தப் பேர்வழிகளால் ஏற்படும் தீமைகளை நினைந்து திடுக்கிட்ட திருவள்ளுவர் இவர்கள், 'இருந்தால் என்ன? இறந்தால் என்ன?' என்று மிதவாதம் பேசவில்லை! 'இருப்பதைவிட இறப்பதே மேல்' என்று 'தீவிர வாதம்' பேசுகிறார்.

புறங்கூறிப் பொய்த்துயிர் வாழ்தலிற் சாதல்
அறங்கூறும் ஆக்கந் தரும்.

ஒருவனை நேராகவும் திட்டலாம்; மறைமுகமாகவும் திட்டலாம். மறைமுகமாகத் திட்டினால் கூராக இருக்காது என்று யாராவது நினைத்தால் இக்குறளைப் படித்துப் பார்க்கட்டும்!

எவ்வளவுக் கெவ்வளவு குறைவாக உண்ணுகிறோமோ அவ்வளவுக்கு அவ்வளவு நல்லது—உடம்பு — உள்ளம் — உயிர் மூன்றுக்கும். இந்த அடிப்படை உண்மை இன்று எவர்க்கும் எளிதில் விளங்கும். ஆனால் இதை இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே வள்ளுவர் விளக்கி இருக்கும் எளிமையையும் தெளிவையும் எண்ணும் போதெல்லாம் உள்ளம் உருகும். 'அடித்த கைதான் அணைக்கும்' 'வைத வாய்தான் வாழ்த்தும்' என்று போற்றத் தோன்றும்.

எந்தப் பழம் புலவர் இளவேட்டனார் பாட்டைத் துணையாகக் கொண்டு தொடங்கினோமோ, அந்தப் பாட்டே இப்போது நினைவுக்கு வருகிறது. ஒரே குறளில் 'இன்பமும் துன்பமும் என்னும் இவை இரண்டும் மன்பதைக்கெல்லாம் மனமகிழ அன்பொழியாது உள்ளி உணர வள்ளுவர் வாயுறை வாழ்த்து உரைக்கும்' பெருமையே பெருமை!

இழிவறிந் துண்பான்கண் இன்பம்போல் நிற்கும்
கழிபேர் இரையான்கண் நோய்.

திருவள்ளுவர் எந்த ஒரு பொருள் பற்றியேனும் அரசியலுக்கு அடுத்தபடியாக அதிகமாகப் பாடியுள்ளார் என்றால் அது நட்பைப் பற்றித்தான். நூற்றி எழுபது குறள்களில் நட்பைப் பற்றிப் பேசிய திருவள்ளுவர் அவ்வியலை 'மருந்து' என்ற அதிகாரத்தோடுதான் முடிக்கிறார். நயன் — பயன் இரண்டும் ஒன்றாகக் கருதித்தான். அந்த அதிகாரத்தில் நடு நாயகமாக அணி செய்வதே மேலே உள்ள குறள்!

குறைத்து உண்பானிடம் இன்பம் நிறைந்து நிற்குமாம்! மிகுத்து உண்பானிடம் துன்பம் நிறைந்து நிற்குமாம். 'என்னப்பா! இந்தத் திருவள்ளுவர் 'துன்னப் பொறுக்காதவராய் இருக்கிறார்!' என்பீர்கள். அவர் என்ன செய்வார்? இயற்கைச் சட்டத்தை எடுத்துரைக்கிறார் — இல்லை — இடித்துரைக்கிறார். போகட்டும், இந்தக் குறளில் வேப்பும் நஞ்சும் போலும் 'திட்டு' என்ன இருக்கிறது என்கிறீர்கள் அல்லவா? மக்கள் உண்டது உணவு. விலங்குகள் விழுங்குவது இரை! இப்படிச் சொல்வது மரபு. மரபறிந்த மறையாளர் திருவள்ளுவர்! அதனால் அதிகம் உண்பவன் விலங்கு என்று சொல்லவில்லை — அவன் உண்பது இரை என்கிறார்! இப்பொழுது விளங்குகிறதல்லவா சொல்லின் கூர்மை! ஆம்! இப்படிப்பட்ட சொற்கள் தான் வாலியைக் கொன்ற வில்லைப் போல மறைந்திருந்தே கொல்லும்!

திருவள்ளுவர் திருக்குறளிலேயே — ஏன் — திட்டும் கலையின் தீவிர நிலையாய் விளங்கும் குத்தல் இலக்கியத்தின்—கொடு முடியாய் விளங்கும் ஒரு குறள் உண்டு. அக்குறள் 'கயமை' என்ற அதிகாரத்தின் தலைக்குறள்!

அந்த அதிகாரமோ திருவள்ளுவரின் பொருட்பாலுக்கே முடிவு ! ஆம்; இறைமாட்சிக்கும் கயமைக்கும் இடையேதான் வள்ளுவர் கண்ட பொருட்பாலே வாழ்கிறது ! இன்று நாம் பார்ப்பதை அன்றே அவர் பார்த்தார்!

பயன் :

மக்களே போல்வர் கயவர் அவரன்ன
ஒப்பாரி யாங்கண்டது இல்.

தன்னைத் தான் திருவள்ளுவர் காட்டிக் கொள்ளும் மிகச் சிலவிடங்களில் இது ஒன்று. ஆற்றாமையோடு உண்மைகளைச் சொல்லத் துடிக்கும் போதே இந்த நிலை அவர்க்கு ஏற்படும்.

'நீயுமா புரூட்டஸ்' என்று கேட்ட சீசர் முதலாக எத்தனையோ பேரின் வாழ்க்கை கண்ட சூடுகளைக் கற்பனைக் கண்படைத்தார் இப்பாட்டில் காணலாம்.

வையகம் தெரிந்தவர் வள்ளுவர் !
அதனால் வையத் தெரிந்தவர் வள்ளுவர் !
அவர் வைவதும் நாம் வாழ !



ஊர் வம்பு

ஜெர்மானிய அறிஞர் "பெரிய மாறுதல்"

ராஜாஜி சொன்னார்: 'என்னுடைய கண்கள் அவ்வளவு நல்ல நிலையில் இல்லைதான்; இருந்தாலும் இந்தப் புத்தகத்தைப் படிக்க ஆரம்பித்த பிறகு முடிக்கும் வரை அதனைக் கீழே வைக்கவே எனக்கு மனம் வரவில்லை!'

ராஜாஜி அவர்களால் இந்த அளவுக்குப் பாராட்டப்படும் புத்தகம் எது என்று தெரிந்து கொள்ள ஆவல் ஏற்படுகிறதல்லவா? "ஜெர்மனியின் அடிப்படைச் சரித்திரம்" என்ற ஆங்கில நூல் அது. இதை எழுதியவர் ஹியூபர்ட்டஸ் லொவென்ஸ்டைன் என்பவர். ஜெர்மானிய சரித்திரத்தில் சிறந்த ஆராய்ச்சியாளர் என்ற முறையில் பல சர்வகலாசாலைப் பட்டங்களைப் பெற்றுப் பேராசிரியராக விளங்கும் இவரை ஜெர்மானிய அரச குடும்பங்களுள் ஒன்றில் பிறந்த காரணத்தால் இளவரசர் என்ற சிறப்புப் பட்டமும் தானாகவே வந்தடைந்திருக்கிறது.

மேற்கு ஜெர்மன் அரசின் தகவல் துறையில் உயர் அதிகாரியாகப் பணியாற்றும் இவர், அண்மையில் சென்னையில் ஒரு சொற்பொழிவாற்றிவிட்டுச் சென்றார். அதைக் கேட்டதிலிருந்து ஜெர்மனியில் முடியாட்சி நிலவிய காலத்திலும் ஜனநாயகப் பண்புகள் அமுலில் இருந்தனவென்றும் பல சிறு சிறு ராஜ்யங்களாக விளங்கின போதிலும் சமஷ்டி முறையில் அவை இயங்கினவென்றும் இந்த சமஷ்டி அமைப்பில் ஒரு பகுதியில் வெடிப்பு விழுந்ததுதான் ஹிட்லரின் சர்வாதிகார ஆட்சிக்கு அடிகோலியது என்றும் தெரிந்து கொள்ள முடிந்தது. சமஷ்டி அரசின் அடிப்படை தனித்தனி ராஜ்யங்களுக்கு உள்ள அதிகபட்ச சுதந்திரம் மட்டுமல்ல; ஒவ்வொரு குடும்பத்துக்கும் ஒவ்வொரு தனி நபருக்கும் உள்ள சுதந்திர உணர்வே என்று அவர் கூறியதை விரும்பி ரசிக்க முடிந்தது.



படம் : ஹியூபர்ட்டஸ் லொவென்ஸ்டைன்

ஃ ஃ ஃ

பாராட்டுக்குள்ளான இன்னொரு ஆங்கில நூல் கே. எஸ். ராமானுஜம் எழுதிய "பெரிய மாறுதல்". இந்த நூலை அண்மையில் வெளியிட்ட முதலமைச்சர் அண்ணாதுரை இன்றைய விழாவின் முக்கியத்துவம் தமிழகத்துக்கு வெளியேயும் அயல் நாடுகளிலேயும் பரவ வேண்டும் என்பதால் ஆங்கிலத்தில் பேசுகிறேன் என்று கூறித் தமது உரையை ஆரம்பித்தார்.


அப்படி என்ன அவ்வளவு முக்கியமான பெரிய மாறுதல்? தமிழகத்தில் காங்கிரஸ் கட்சி வீழ்ந்து தி.மு.க. பதவிக்கு வந்ததுதான்! 'இது எப்படி நிகழ்ந்தது? வேரூன்றியிருந்த காங்கிரஸ் மரத்தை எப்படி அசைத்து அப்புறப்படுத்த முடிந்தது?' என்று வினவும் வெளி நாட்டாருக்கும் வட நாட்டவருக்கும் பதிலளிக்கிறது இந்நூல்.

'தேர்தல் கற்பிக்கும் பாடம் என்ன என்பதை இந்நூலைப் படித்தால் தெளிவாகப் புரிந்து கொள்ளலாம்' என்றார் திரு சி. என். ஏ. தொடர்ந்து, 'அந்தப் படிப்பினையால் பயன்பெற வேண்டியவர்கள் காங்கிரஸ்காரர்கள் மட்டுமல்ல; இன்று ஆட்சியில் உள்ள நாம்கூட எதையெல்லாம் தவிர்க்க வேண்டும் என்பதை அறிந்து கொள்ளலாம். இதனைப் புத்தகத்தின் கடைசிப் பாராவில் தெளிவாக்கியுள்ள ராமானுஜத்தை என் உண்மை நண்பராகப் போற்றுகிறேன்' என்றார்.

நூலைப் பிரசுரித்துள்ளவர்கள்: ஹிகின்பாதம்ஸ், சென்னை—2, விலை ரூ. 7—50

சூரன் பீட்டர் 6


வால்ட் டிஸ்னி




செவ்விந்தியர்கள் பழி தீர்த்துக் கொள்ள மனிதர்களை உயிருடன் மரத்தில் கட்டித் தீ மூட்டிவிடுவார்கள் என்பதை ஜானி படித்து நடுங்கி இருக்கிறான். இப்போது அந்த நிலை தனக்கே ஏற்பட்டுள்ளதை எண்ணியதும் அவன் உடல் நடுங்கியது. வேங்கை விழியாள் யார்? அவன் என்ன ஆவான்? எங்கு போவான்? அவனுக்கு ஒன்றுமே புரியவில்லை. கட்டுண்ட நிலையில் அவர்களை அப்படியே விட்டு விட்டுச் செவ்விந்தியர்கள் எல்லாரும் போய் விட்டார்கள்.

துன்பப்படுபவர்களுக்கு உதவ ஓடி வருவான் பீட்டர் என்பது காப்டனுக்குத் தெரியும். அதனால் தான் ஹூக் வேங்கை விழியாளைக் கடத்திக் கொண்டு போனான். அவளைக் காப்பாற்றப் பீட்டர் வரும்போது அவனைப் பிடித்து விடலாம் என்பது ஹூக்கின் கனவு.


தன் சகோதரர்கள் சிறை செய்யப்பட்டிருக்கும் செய்தி தெரியாது வெண்டி பீட்டருடன் கடல் கன்னிகளைக் கண்டு மகிழ்ந்து கொண்டிருந்தாள்.














பலப்பல கோடைக் காலங்களில்
உழைக்க பொறி இயல் நிபுணத்துவம்!

ஓரியண்ட்

ஸீலிங் விசிறி

இரண்டு ஆண்டுகள் உத்தரவாதம்

ஓரியண்ட் ஜெனரல் இண்டஸ்ட்ரீஸ் லிட்.,

கல்கத்தா-54

அத்தியாயம் பத்தொன்பது

கொடிக்கு எட்டிய கொம்பு

ஒரு வருஷத்துக்குப் பிறகு அந்த இளைஞனை முத்தையாபிள்ளை சென்னையில் சந்தித்த போது, அவனுடைய கொள்கைகள் மிகுந்த மாறுதல் அடைந்திருந்தன. அவன் சொன்னான்: ''நான் இப்போது கம்யூனிஸ்ட் இல்லை, சார்!''

''ஏனப்பா, திடீரென்று இந்த மாற்றம்?'' திகைப்புடன் கேட்டார். பிறகு சொன்னார்: ''எனக்குத் தெரியும் தம்பி, நீ மாறிவிடுவாய் என்று. கமலா, உன்னை மாற்றிவிடுவாள் என்று தெரியும்.''

''என்ன சார், ஒரு பெண் என்னை மாற்றக் கூடிய அளவுக்கு நான் என்ன தன்மானம் அற்றவனா?'' என்றான் அந்த இளைஞன், எரிச்சலுடன். இதைக் கேட்டு முத்தையாபிள்ளை பிரமித்து விட்டார்.


''என்னை நான்தான் மாற்றிக் கொண்டேன். இந்தக் கட்சியைக் கட்டி அழுவதால், ரஷியாவுக்குத்தான் தாசனாக இருக்க வேண்டியிருக்கிறது. எனக்குத் தாய்நாடு தான் முக்கியம். கட்சியைவிட என் தாய்நாடு தான் எனக்கு முக்கியம். அதனால் அந்தக் கட்சியிலிருந்தும், கொள்கையிலிருந்தும் விலகி விட்டேன்'' என்றான். பிறகு சொன்னான்:

''அந்தக் கொள்கையே வெறுத்துவிட்டது சார். குடிசையில் வாழ்பவன் நிலையை உயர்த்த முயலுவதை விட்டு விட்டு, சமத்துவம் வேண்டும் என்பதற்காக, மாடியில் வாழ்பவனைக் குடிசைக்கு இழுத்து வருவது தான் அந்தக் கொள்கையின் நடைமுறையாகி விட்டது. இது வெற்றி பெறுமானால், உலகம் முழுவதிலும் குடிசைகள்தான் நிரம்பி விடும்.''

''கம்யூனிஸத்தின் சமதர்மக் கொள்கையிலும் தர்ம நியாயம் இருக்கிறதே!'' என்றார் முத்தையாபிள்ளை.

''இருக்கிறது. ஆனால் நடைமுறைக்கு ஏற்றதாயில்லையே. மனிதனின் இயற்கை தர்மத்துக்கு ஒத்ததாயில்லையே! மனிதன் பிறவியிலேயே வித்தியாசமாகத்தான் பிறக்கிறான். அறிவில், சாமர்த்தியத்தில், குணதிசயங்களில் எல்லாவற்றிலுமே ஒருவனுக்கு ஒருவன் வித்தியாசமாகத்தான் இருக்கிறான். அடிப்படையிலேயே இயற்கை மனிதனைச் சமமாகப் படைக்காத போது, மற்ற விஷயங்களில் மட்டும் மனிதன், சமதர்மத்தைப் புகுத்துவதில் அர்த்தமேயில்லையே. அவனவன் தன்னுடைய ஆற்றலுக்கும் அறிவுக்கும் குணத்துக்கும் தகுந்தபடி தன்னுடைய வாழ்க்கையைச் செழிக்க வைக்கத் தான் பாடுபடுவான். இந்த இயற்கையின் தூண்டுதலை மட்டுப்படுத்த முயலுவது வீண் மட்டுமல்ல, பைத்தியக்காரத்தனமும்கூட'' என்றான். இதைக் கேட்டு முத்தையாபிள்ளை பிரமிப்படைந்தார். இவ்வளவு இளம் வயதில் அவனுடைய சிந்தனையின் முதிர்ச்சியை நினைத்து அதிசயித்தார்.

வெள்ளிவிழா இரண்டாவது பரிசு நாவல்



கல்லுக்குள் ஈரம்

ர. சு. நல்லபெருமாள்

அவனுடைய மன மாற்றத்தைக் கண்டு முத்தையாபிள்ளை மகிழ்ச்சியடைந்தார். ஏதோ ஒரு பயங்கரமான காட்டுப் பாதையிலிருந்து விலகி, அவன் வந்து விட்டதாக நினைத்தார். அவர் மனத்திலிருந்து பெரிய பாரம் இறங்கியது மாதிரி இருந்தது. இனி பயங்கரச் செயல்களில் ஈடுபட மாட்டான் என்றுதான் நினைத்திருந்தார். ஆனால் கம்யூனிஸ்ட் கட்சியை விட்டு விலகிய பிறகும் பயங்கரவாதியாகவே இருக்கிறான் என்று கமலவாசகி கடிதத்தில் எழுதியதைக் கண்டு முத்தையாபிள்ளை திகைத்தார்.

ஒவ்வொரு நாள் பத்திரிகையிலும் விடுதலை இயக்கத்தைச் சேர்ந்தவர்களின் பயங்கர இயக்கத்தைப் பற்றியும், பிடிபட்டவர்களுக்குக் கிடைக்கும் தூக்குத் தண்டனையைப் பற்றியும் படிக்கும்போது, அவருக்கு அவனுடைய முகந்தான் நினைவில் பளிச்சிடும். அவருடைய பருத்த உடல் உள்ளுக்குள் நடுங்கும்.

ஒரு நாள் இரவு வெகு நேரத்துக்குப் பிறகு ஊத்துப்பட்டியில் அவருடைய பங்களாவுக்குக் கமலவாசகியும், அந்த இளைஞனும்

திடீரென்று வந்து சேர்ந்தார்கள். அந்த அகால நேரத்தில் காரில் இருவரும் வந்து இறங்கியதைக் கண்டதும் முத்தையாபிள்ளை பதறிப் போனார்.

சென்னையில் ஓர் ஆங்கிலேய அதிகாரியின் மீது ஒரு கூட்டம் குண்டு வீசியது. அதற்காக அவனையும் சந்தேகிக்குமோ என்று பயந்து, சென்னையிலிருந்தால் போலீஸின் தொந்தரவு இருக்கும் என்பதற்காக ஒருசில தினங்கள் தலைமறைவாயிருக்க அவனைத் தன் ஊருக்கு அழைத்து வந்திருந்தாள் கமலவாசகி. விஷயத்தை அறிந்தபோது முத்தையாபிள்ளை பதறினார்.

''நீங்கள் சொல்லுங்கள் அப்பா. நான் எவ்வளவு சொல்லியும் கேட்க மாட்டேன் என்கிறார். இப்போது இவர் குண்டு வீசவில்லை என்றாலும், இவர் மீதும் போலீசுக்குச் சந்தேகம் இருக்கிறது'' என்றாள் கமல வாசகி. முத்தையாபிள்ளைக்கு அவனிடம் பேசவே பயமாக இருந்தது. ஏதாவது பேசினால் அவன் துடுக்காக எதையாவது பேசுவான். முதலில் தயங்கினார். பிறகு, ''தம்பி, இந்த மாதிரியெல்லாம் மிரட்டினால் வெள்ளைக்காரன் ஓடி விடுவானா?'' என்றார்.

''இந்த மாதிரி ஒவ்வோர் இந்தியனும் செய்யத் தொடங்கி விட்டால் ஒரே நாளில் ஓடி விடுவான்'' என்று பளீரென்று பதில் சொன்னான்.

''பைத்தியக்காரப் பிள்ளையாக இருக்கிறாயே. எல்லாரும் இப்படிச் செய்யத் தயா



றில்லை. நீங்கள் ஒரு பத்து பேர் செய்து வருவதால் ஒன்றும் நடந்து விடாது.''

''இந்த மானங்கெட்ட மக்கள் நாங்கள் செய்வதைப் பார்த்தாவது விழித்துக் கொள்ள மாட்டார்களா? இல்லையென்றால் நாங்கள் தூக்கில் தொங்குவதைப் பார்த்தாவது புத்தி வராதா?'' இதைக் கேட்டு முத்தையாபிள்ளை திகைத்தார். அந்தப் பால் வடியும் முகத்தில்தான் எத்தனை வீரம், தியாகம்! அவன் முகத்தையே அதிசயத்துடன் பார்த்துக் கொண்டிருந்தார். அதைப் பார்க்கப் பார்க்க அவர் மனம் சங்கடப்பட்டது.

''தம்பி, பகத்சிங் தூக்கில் தொங்கினானே, இந்த மக்கள் விழித்தார்களா? இந்த மக்கள் கூட்டத்தை நம்பாதே!'' என்றார் முத்தையா பிள்ளை.

''எங்களுக்காகவாவது நீங்கள் இந்த மாதிரிச் செய்வதை நிறுத்தக் கூடாதா?'' என்றாள் கமலவாசகி. அவனைக் கெஞ்சுவது போலிருந்தது அவள் குரல்.

''நீங்கள் அடிக்கடி சொல்வீர்களே, செய்யும் வேலையில் ஆத்ம திருப்தி வேண்டும் என்று; எனக்கு இதில்தான் ஆத்ம திருப்தி. நீங்கள் சொல்வீர்களாமே, பொய்யாக நூறு வருஷங்கள் வாழ்வதைவிட உண்மையாக ஒரு நாள் வாழ்ந்தாலும் போதும் என்று. என் மன உணர்ச்சிகளை யெல்லாம் அடக்கிக் கொண்டு உங்களுக்காகப் பொய் வாழ்க்கை வாழச் சொல்கிறீர்களா?'' என்றான் அந்தப் புரட்சிக்கார இளைஞன். பதில் கூற முடியாமல் திகைத்தார் ஜமீந்தார்.



''உன் மனம் விரும்பிய பாதையில் நீ செல்வதை நான் தடுக்க மாட்டேன். ஆனால் நீ செல்லும் பாதை தவறாக இருந்தால் மாற்றிக் கொள்ளலாமே?'' என்றார்.

''உங்களைப் பொறுத்தவரை என்னுடைய பாதை தவறாக இருக்கலாம். நீங்கள் ஜஸ்டிஸ் கட்சியின் தூண், ஒரு ஜமீந்தாரும்கூட. உங்களால் வேறு விதமாகச் சிந்திக்கவே முடியாது. வெள்ளைக்காரனை நீங்கள் கும்பிடலாம். ஆனால் என்னால் கும்பிட்டு வாழ முடியாது; அந்தப் பழக்கமும் எனக்கில்லை'' என்றான்.

மறுநாள் காலையில் ஜமீந்தார் முத்தையா பிள்ளை தூங்கி எழுந்த போது அந்தப் புரட்சிக்காரன் அங்கில்லை! அவனுடைய படுக்கையில் ஒரு கடிதம் மட்டும் கிடந்தது. அதில் எழுதியிருந்தான் :

''உங்கள் பங்களாவுக்கு வந்து தொந்தரவு கொடுத்து விட்டேன். வெள்ளைக்காரனுக்கு எதிரான செயலில் ஈடுபட்டவன், உங்கள் பங்களாவில் ஒளிந்திருக்கிறான் என்று தெரிந்தால், உங்களுக்குத்தான் சங்கடம் வரும். நான் வர மறுத்தேன். கமலவாசகிதான் கட்டாயப்படுத்தி அழைத்துக் கொண்டு வந்து விட்டாள். அவளுக்கு உள்ளூற இன்னோர் ஆசையும் உண்டு. உங்களிடம் என்னைக் கொண்டு வந்து சேர்த்து விட்டால், என்னை எப்படியும் நீங்கள் மாற்றிவிடுவீர்கள் என்ற ஆசை அவளுக்கு. அவளிடம்கூடச் சொல்லிக் கொள்ளாமல் போகிறேன். மன்னியுங்கள்!''

கடிதத்தைப் படித்துவிட்டு ஒன்றும் தோன்றாமல் சோபாவில் சாய்ந்துவிட்டார் ஜமீந்தார். அவர் மனத்தில் பயம் சூழ்ந்துகொண்டது. ஆனால் நல்ல வேளையாக அவர் பயந்தபடி ஒன்றும் நடந்துவிடவில்லை. உண்மையில் போலீஸ்காரர்கள் அந்த இளைஞன் மீது சந்தேகம் கொள்ளவில்லை. அவனுடைய கூட்டாளி ஒருவனைத்தான் தேடினார்கள். கூட்டாளி அகப்படவே இல்லை.

இந்தச் சம்பவம் நடந்து மூன்று மாதங்களுக்குள் கமலவாசகி திடீரென்று படிப்பை நிறுத்திவிட்டு விட்

டுக்கு வந்து விட்டாள். அவளிடம் ஜாடைமாடையாக அந்தப் புரட்சிக்காரனைப் பற்றிக் கேட்டுப் பார்த்தார் ஜமீந்தார். அவளிடமிருந்து சுருக்கமாகத்தான் பதில் வந்தது. முன்பெல்லாம் அவனைப்பற்றிப் பேசும்போது அவள் அடையும் உற்சாகமும் கிளர்ச்சியும் இப்போது இல்லை. ஒரு நாள் அவளே சொல்லி விட்டாள்: ''அப்பா, அவரைப் பற்றி இனி என்னிடம் எதையும் கேட்காதீர்கள்!'' என்று.

முத்தையாபிள்ளை புரிந்து கொண்டார். இது அவர் எதிர்பார்த்ததுதான். இரண்டு துருவங்களும் எப்படி இணையும்? காந்தத்தில்தான் எதிர்த் துருவங்கள் சேரும்; வாழ்க்கையில் அது நடக்குமா? கமலவாசகி, கடைசியில் ஒரு முடிவுக்கு வந்து அவனை உதறிவிட்டாள் என்பதில் முத்தையாபிள்ளைக்குத் திருப்திதான் என்றாலும், மனத்தின் ஆழத்தில் அந்த இளைஞனின் நினைவு உறுத்திக்கொண்டு இருந்தது.

அவரும் கமலவாசகியும் அவனோடு சேர்ந்து சென்னைக் கடற்கரையில் உட்கார்ந்திருந்த போது, அவன் பேசியது அவருடைய நினைவில் வட்டமிட்டது.

''எருமை மாடு மாதிரி மந்தமாக வாழ்ந்து கொண்டே இருப்பதைவிட ஈசல் மாதிரி பரபரப்புடன் சாவதில்தான் ரசனை இருக்கிறது'' என்றான்.

வாழ்க்கையில் அவன் எதிர்பார்த்த பரபரப்பும், விறுவிறுப்பும் அவருக்குப் புரிந்தன. ஆனால் கமலவாசகியால் புரிந்து கொள்ள முடியுமா? தேனீ மாதிரி துறுதுறுவென்று இருந்தான். எதிலும் துடிப்பு, வேகம், வெறி. இவைகளுக்கு ஈடு கொடுத்து இவளால் சமாளிக்க முடியுமா ?

கமலவாசகி அவனை விட்டு விலகியது நல்லதுதான். ஆனால் அவனைக் கைப்பிடிக்கும் எந்தப் பெண்ணும் பாக்கியசாலிதான். அந்தப் பாக்கியம் இவளுக்கு இல்லை. என்ன பாக்கியம்? எந்தச் சமயத்தில் இந்தப் புரட்சிக்காரனுக்கு என்ன நடக்கும் என்று யாருக்குத் தெரியும்? எந்தச் சமயத்தில் அவன் தூக்குக் கயிற்றை முத்தமிட வேண்டியிருக்குமோ? அதைப் பற்றி அவன் கவலைப்படவில்லையே! பகத்சிங்கும் தூக்குக் கயிற்றைத் தீண்டிய சமயத்தில் கீதை படித்தானாமே! இந்த மாதிரியான மனப் பக்குவம் இந்தப் பிஞ்சு வயதில் எப்படித்தான் இவர்களுக்கு வந்து விடுகிறதோ?

அவன் கமலவாசகியிடம் குழைந்து குழைந்து பழகியதைக் கண்டு ஜமீந்தார் மனம் பூரித்ததுண்டு. ஆனால் அவன்தான் கோபுரத்தின் உச்சியிலிருக்கும் விளக்கு மாதிரி ஆகிவிட்டானே! அவனை இவள் எட்டிப் பிடிக்க முடியுமா? இவளுடைய வாழ்க்கைப் பாதையில் ஒளி காட்ட இவளுக்கு வேண்டியதெல்லாம் ஒரு சிறு அலங்காரக் கைவிளக்குதான்.

தனக்குச் சமமான ஒருவரைத்தான் காதலிக்க முடியும். பாராட்டுப் பெறுபவர்களை, நம்மைவிடப் பல மடங்கு உயர்ந்தவர்களைக் காதலிக்க முடியுமா? அவர்களைத் தூர நின்று வணங்கத்தான் முடியுமே தவிர, நெருங்கி அணைக்க முடியாது. நிச்சயமாக அந்த இளைஞன் கமலவாசகியை விட எவ்வளவோ உயர்ந்தவன்தான். இவளைப் போல் அவன் ஜமீந்தார் வீட்டுப் பிள்ளை இல்லை. மனோரஞ்சிதத்துக்கு அழகில்லைதான். ஆனால் அதன் மதுரமான மணம் உள்ளத்தைக் கொள்ளை கொண்டுவிடவில்லையா? முத்தையா பிள்ளையால் அவனைப் புரிந்து கொள்ள முடிந்தது. அவனுடைய வேட்கையை, லட்சியத்தை நன்கு புரிந்து கொண்டார். அதில் அவருக்கு நம்பிக்கை இல்லாவிட்டாலும் அவன், அவனுடைய பாதையில் நம்பிக்கையுடன் ராஜநடை போடுகிறான் என்பதை உணர்ந்த ஜமீந்தார் மனம் அவனுக்குத் தலை வணங்கியது. கமலவாசகியால் அவனை எட்டிப் பிடிக்கவே முடியாது என்பதை உணர்ந்தார். இதில் அவருக்குத் திருப்திதான். கமலவாசகியின் மன ஆறுதலுக்காக அவளைக் கன்னியாகுமரிக்கு அழைத்துச் சென்று சில நாட்கள் தங்கினார்.

ஃ ஃ ஃ

கன்னியாகுமரி கோயிலில் கூட்டம் அதிகமில்லை. ஜமீந்தார் முத்தையா பிள்ளையும், கமலவாசகியும் கோயிலுக்கு வந்தார்கள். வெங்குவும்கூட வந்தான். கோயிலுக்குள் நுழைந்த சமயத்தில் வாசலில் நின்ற ஒரு கோயில் அதிகாரி, ''சட்டையைக் கழற்றி விட்டுத்தான் கோயிலுக்குள் போக வேண்டும்'' என்றார். இதைக் கேட்டு வெங்கு திடுக்கிட்டான்.

''நானும் சட்டையைக் கழற்ற வேணுமா? சே, சட்டையைக் கழற்றினால் என் வஸ்தாது உடம்பு வெளியே தெரியுமே!'' என்று பரிதாபமாகச் சொன்னான். ''நான் வரவில்லை. நீங்கள் போய் வாருங்கள்'' என்று கூறிவிட்டு, முத்தையா பிள்ளையும், கமலவாசகியும் கோயிலுக்குள் போய்விட்டு வரும் வரை வெளித் திண்ணையிலேயே கொட்டாவிவிட்டுக் கொண்டு உட்கார்ந்திருந்தான் வெங்கு. அவனுக்குக் கோயிலின் சட்டதிட்டங்களெல்லாம் புரியவில்லை.

கோயிலிலிருந்து பங்களாவுக்குத் திரும்பிய போது, முத்தையாபிள்ளைக்குத் தபால் காத்திருந்தது. உறையைக் கிழித்துக் கடிதத்தைப் பிரித்தவுடன் முதலில் கீழே கையெழுத்தைப் பார்த்தார். 'சிவானந்தம்' என்றிருந்தது. ஆவலுடன் நின்றபடியே கடிதத்தைப் படிக்கத் தொடங்கி விட்டார்.

'பெரியமுன்ன ஜமீந்தார் சர் டி. முத்தையா பிள்ளை பார் – அட் – லா அவர்கள் சமூகத்துக்கு......'

கடிதம் இத்தனை வக்கணையோடு ஆரம்பமாயிற்று. அதை வாசித்துவிட்டு முத்தையா பிள்ளை தமக்குள்ளேயே சிரித்துக் கொண்டார். பிறகு கடிதத்தைத் தொடர்ந்து படித்தார் :

'நீங்கள் விரும்பியபடியே உங்களோடு ஒரு வாரம் தங்குவதற்காகப் புறப்பட்டு நாளை வந்து சேருகிறேன். எனக்கும் இந்தப் போலீஸ் உத்தியோகத்தின் பரபரப்பிலிருந்தும், கடுமையிலிருந்தும் ஒரு வாரத்துக்கு விடுதலை கிடைக்கும் என்ற ஆவலில்தான் வருகிறேன். ஓய்வெடுக்கத் தென்முனையை ஏன் தேர்ந்தெடுத்தீர்கள்? அது கன்னி தவ



யிருக்கும் இடமல்லவா? நானும் எவளாவது ஒருத்தியை நினைத்து அங்கு வந்து தவமிருக்க லாம் என்று நினைத்தீர்களா? அந்தத் தண்டனை எனக்கு வேண்டாம். கன்னியாகுமரி அம்ம னின் தவமும் இன்னும் பலிக்கவில்லை. அதிக மாக எழுதுவானேன்? நான்தான் உங்களை நேரில் சந்திக்கப் போகிறேனே. வணக்கம்.

சிவானந்தம்.'

முத்தையாபிள்ளை கடிதத்தைப் படித்து முடித்ததும், ''என்ன கடிதம்? அவ்வளவு ரசனையானதா? நீங்களே சிரித்துக் கொள் கிறீர்களே?'' என்று கேட்டாள் கமலவாசகி. கடிதத்தை அவளிடம் கொடுத்தார். படித்து விட்டுத் தலை நிமிர்ந்த கமலவாசகி கேட் டாள்: ''யார் இந்தச் சிவானந்தம்?''

''மதுரையில் போலீஸ் அதிகாரியாக இருக் கிறான். இவனுடைய அப்பாவும் நானும் ஒன்றாகப் படித்தோம்!'' என்றார் முத்தையா பிள்ளை. அதற்கு மேல் கமலவாசகி ஒன்றும் கேட்கவில்லை. சிவானந்தத்தைப் பற்றி விசா ரிக்கும் மன நிலையிலும் அவள் இல்லை. கன்னியாகுமரி வந்தும் அவள் மனம் அமைதி அடையவில்லை. கடந்து போன நிகழ்ச்சிகள் நினைவில் குமைந்து கொண்டே யிருந்தன. அதை மறந்து விடத்தான் கன்னியாகுமரிக்கு ஓடி வந்தாள். ஆனால் உலகத்தின் எந்த மூலைக்கு ஓடினாலும் நினைவு, நிழலாகத் தொடரும்போது என்ன செய்ய? தன்னிடமிருந்தே தன்னை ஒளிக்க முடியுமா?

மறு நாள் காரில் வந்து இறங்கினான் சிவானந்தம். அவனிடம் கமலவாசகியை அறிமுகப்படுத்தினார் ஜமீந்தார்.

''இவள்தான் கமலவாசகி. நீ சிறு பைய னாக இருந்த போது ஒரு முறை ஊத்துப் பட்டிக்கு உன் அப்பா உன்னை அழைத்து வந்தான். அப்போது இவளைப் பார்த்திருப் பாய்'' என்றார் ஜமீன்தார்.

''ஞாபகமில்லை!'' என்று கூறித் தலை யைச் சொறிந்தான் சிவானந்தம். பிறகு சொன்னான்:

''கன்னியாகுமரியில் தவம் இயற்ற ஒரு கன்னியையும் அழைத்து வந்துவிட்டீர்கள் போலிருக்கிறது.''

இதைக் கேட்டு முத்தையாபிள்ளை ஒரு பெரிய ஹாஸ்யத்தைக் கேட்டுவிட்ட மாதிரி அட்டகாசமாகச் சிரித்தார்.

''தவமிருக்க வரவில்லை'' என்று வெடுக் கென்று பதில் சொன்னாள் கமலவாசகி.

''வரம் ஏற்கனவே கிடைத்துவிட்டது போலிருக்கிறது!'' என்று கூறிவிட்டு அவளைக் கூர்ந்து பார்த்தான்.

சிவானந்தத்திடம் கமலவாசகி முதலில் அக்கறை காட்டவில்லை. அவனுடைய கல கலப்பான பேச்சும், மலர்ந்த முகமும்கூட அவளுக்கு ஆறுதல் அளிக்கவில்லை. அவன் எத்தனையோ முறை வலிய அவளிடம் பேச முனைந்த போதெல்லாம் ஒன்றிரண்டு வார்த்தைகளை மட்டும் கஞ்சத்தனமாக உதிர்த்துவிட்டு ஊமையாகி விடுவாள்.

அன்று மாலை கன்னியாகுமரி மணல் மேட்டில் எல்லாரும் உட்கார்ந்திருந் தார்கள். முத்தையாபிள்ளையும், சிவானந்த மும் பேசிக் கொண்டிருந்தார்கள். கமல வாசகி, சமுத்திரத்தையே பார்த்துக் கொண் டிருந்தாள். வெங்கு சற்றுத் தள்ளிக் கடற் சிப்பிகளைப் பொறுக்கிக் கொண்டிருந்தான்.

சிவானந்தம் வந்து இரண்டு நாட்களாகி யும் அவளைக் கமலவாசகி நெருங்கி நின்று உற்றுப் பார்த்ததில்லை; பார்க்க வேண்டும் என்ற ஆசைகூடத் தோன்றியதில்லை. அவ ளுடைய நினைவையெல்லாம் அவளுக்கே ஏற்பட்டிருந்த ஏமாற்றந்தான் கொள்ளை கொண்டிருந்தது.

அவள் மனம் குமும்பிக் கிடந்தது. கடந்த கால நினைவினால் அலுத்துப் போயிருந்தாள். பிடிப்பற்றுத் தொங்கும் சிலந்தி மாதிரி தான் அவள் இதயம் தொங்கித் தவித்தது. பற்றிக் கொள்ள ஓர் ஆதாரம் வேண்டும். கொடி ஆதாரமில்லாமல் வளர முடியுமா? எத்தனை நாளைக்குக் காற்றில் ஊசலாடிக் கொண்டிருக்கும்? படர்ந்திருந்த கொம்பு முறிந்து விட்டது. இனி படர ஆதாரம் வேண்டியதுதான். தவிக்கும் அவளுடைய இதயம், சாந்தியை நாடியது. அவளையும் அறியாமல் ஒரு முறை சிவானந்தத்தைப் பார்த்தாள். அவன் முத்தையா பிள்ளையைப் பார்த்துப் பேசிக் கொண்டிருந்தான். கள்ளத்தனமாக அவனைக் கூர்ந்து பார்த் தாள். எவ்வளவு நேரந்தான் அப்படிப் பார்த் தாளோ, திடீரென்று அவள் பார்வையை அவனுடைய பார்வை எதிர்க்கவே, அவள் கண்கள் தோல்வியை ஒப்புக் கொண்டு பின் வாங்கி, திசை மாறி விட்டது. அப்போது அவன் இதழில் மின்னிய குறுநகை அவள் உள்ளத்தில் பதிந்துவிட்டது.


ஒரு கணம் அவள் நினைவில் கடந்த காலம் நிழலாடியது. அவளுடைய இதய மெல்லாம் நிறைந்த அந்தப் புரட்சிவாதி, கண் முன்னால் நின்று சிரிப்பதுபோல் இருந்தது. அந்த நினைவே அப்போது அவ ளுக்குக் கசந்தது. இறுகக் கண்களை மூடிக் கொண்டாள். கண்களை மூடி என்ன செய்ய? அவன்தான் உள்ளத்திலிருந்து கொண்டு சிரிக்கிறானே! நினைவிலிருந்து அவனை இழுத்துத் தூர எறிந்துவிடத்தான் படாத பாடுபடுகிறாள். எதை மறக்க வேண்டுமோ அதுதான் அழிக்க முடியாதபடி நினைவில் ஒட்டிக் கொள்கிறது.


நினைவின் கசப்பில் முகத்தைச் சுளித்த கமலவாசகிக்குச் சிவானந்தத்தின் குறுநகை சற்று ஆறுதலா யிருந்தது. வெள்ளத்தில் மூழ்கிக் கொண்டிருப்பவன், துரும்பு கிடைத் தாலும் பற்றிக் கொள்ளத்தானே துடிப் பான். அந்தத் தவிப்பு கமலவாசகிக்கு. ஏமாற்றத்தின் சுழலில் மூழ்கிக் கொண் டிருந்தவளுக்குச் சிவானந்தத்தின் குறும்புப் பார்வை கைகொடுத்தது மாதிரி இருந்தது. கையில் கிடைத்தது கட்டையா அல்லது துரும்புதானா என்று ஆராயும் நிலையில் அவள் இல்லை. ஏதோ ஒன்று வலிய அவளை நெருங்கியது. பற்றிக் கொள்ள அவளும் கை நீட்டி விட்டாள்.*


சிவானந்தம் வந்த ஐந்தாம் நாள் எல்லாரும் ஒரு தோணியில் விவேகானந்தர் பாறைக்குப் போய்க் கொண்டிருந்தார்கள். (தொடரும்)

---

* அட்டைப்படம் : விஜு







TVS

அத்தியாயம் 6

நினைவுச் சுழல்!

"சேரர் தலைவரே! நீலவல்லி எங்கே இருக்கிறாள் என்பது எங்கள் மிஞிலிக்குத்தான் தெரியாது என்று இதுவரை நினைத்திருந்தேன். இப்போது உங்களுக்கும் தெரியாது என்றல்லவா தெரிகிறது!'' என்றான் சிறைக்காவலன்.

வேலவனுக்கு வியப்போடு சேர்ந்து சொல்லொணாத குழப்பமும் வேதனையும் ஏற்பட்டன. இதைக் கண்ணுற்ற சிறைப் பாதுகாவலன் வேலவன் கோதைக்கு அந்தச் செய்திகளைத் தெளிவுபடுத்தத் தொடங்கினான்.

''ஐயா, தலைவரே! நீலவல்லியைக் கடம்பர்களின் வெள்ளைத் தீவிலே காணவில்லை என்றதும் அந்தக் குழப்பத்தைத் தங்கள் மன்னரிடம் வந்து சொன்னார்கள் புன்னாட்டு வீரர்கள்! மலர் வேணிய மன்னருக்கு ஆற்ற முடியாத துயரம் ஏற்பட்டது. தமது தமக்கை வெள்ளைத் தீவிலிருந்து எங்கே தப்பிப் போயிருக்கக் கூடும் என்று புரியாமல் அவர் வேதனைப்பட்டுக் கொண்டிருந்தார். அந்தத் துன்பமயமான வேளையில் எங்கள் தானைத் தலைவர் மிஞிலி புன்னாட்டுக்குப் போய்ச் சேர்ந்தார்!''

''என்ன சொல்லுகிறீர்கள்? உங்கள் தானைத் தலைவர் புன்னாட்டுக்குச் சென்றாரா?''

''ஆமாம். நீலவல்லி வெள்ளைத் தீவிலிருந்து மறைவாகத் தப்பிப் புன்னாட்டுக்குப் போயிருப்பாள் என்று ஊகித்தார் எங்கள் தலைவர் மிஞிலி. புன்னாட்டுக்கும் துளுநாட்டுக்கும் ஒரு திருமண உறவை உண்டாக்கி விட்டால், எதிர்காலத்தில் புன்னாட்டு நீலக் கல் சுரங்கமும் நீலவல்லியுடன் சேர்ந்து துளுநாட்டின் ஆட்சிக்கு அடங்கி விடும் என்று ஒரு



வெண்ணிலவுப் பெண்ணரசி

சோமு

தப்புக் கணக்குப் போட்டார். அந்த வஞ்சக எண்ணத்தோடு புன்னாட்டுக்குத் தூது சென்றார். சென்று மலர்வேணிய மன்னரிடம் எங்கள் இளவரசர் இளநன்னருக்கு நீலவல்லியைத் திருமணம் செய்து தரும்படி கேட்டார்!''



''அப்படியா! என்ன முறைக்கேடான பேச்சு இது!''

''ஆமாம். ஆனால் மலர்வேணிய மன்னரிடம் பேசத் தொடங்கியதுமே நீலவல்லி புன்னாட்டிலே இல்லை என்பதும், அவளைத் தேடித் தேடி நாடி நாடி மறுகுகிறார் மலர்வேணியார் என்பதும், மிஞிலிக்கு ஒரு விநாடியில் புரிந்து விட்டது. உடனே நிலைமையை விட்டுக் கொடுக்காமல் ஒரு பெரிய சூழ்ச்சிப் பேச்சுப் பேசினார். கடம்ப மன்னனே தனது முடிவு காலம் நெருங்குகிறது என்று கண்டு, தனது வளர்ப்பு மகளை ஒளிவு மறைவாக ஒரு மரக்கலத்திலே ஏற்றி இந்தத் துளுநாட்டுக்கு அடைக்கலமாக அனுப்பிவிட்டான் என்றும், இப்போது நீலவல்லி இந்தத் துளுநாட்டு அரண்மனையில் எங்களுடைய அடைக்கலமாக வளர்கிறாள் என்றும் வஞ்சகப் பொய்சொல்லி அவளைப் பெண் கேட்டார் மிஞிலி!''

''வஞ்சகத்திலும் எத்தகைய வஞ்சகம் இது!'' என்று ஆத்திரத்தோடு கூறினான் வேலவன்.

''ஐயா! இந்த வஞ்சகம் மலர்வேணியருக்குத் தெரியாது. என்றாலும் நன்னர்களோடு திருமண உறவு செய்து கொள்வதை அவர் விரும்பவில்லை. நன்னர்களை அடியோடு வெறுத்துப் பேசினாராம். நீலக்கல் சுரங்கத்தையே இழந்தாலும், நீலவல்லியை இழக்கப் போவதில்லை என்று



கண்ணைப் பறிக்கும் வெண்மை! கச்சிதமான தூய்மை! எல்லாம் ஸர்ப் செயல்...அதன் எல்லை கடந்த வல்லமை! ஏராளமான நுரை, சலவையே வெகு எளிது. சிறுவர் ஆடை, சட்டை, சேலை....எதற்கும் நிகரில்லாத வெண்மை, சிகரமான தூய்மை. கைப்பட வீட்டிலே சலவை செய்திடவே கைகண்ட துணை ஸர்ப்.

ஸர்ப் சலவை: வெள்ளைவெளேர் சலவை

இந்துஸ்தான் லீவர் தயாரிப்பு.

உறுதியாகக் கூறி விட்டாராம். இதனால் மிகவும் வெருண்டு வந்து விட்டார் மிஞிலி. இந்தச் சீற்றம் முதிர்ந்து இப்போது நீலக்கல் நாட்டிலே எங்கள் படையினர்கள் ஆயிரக்கணக்காகச் சென்று குடியேறி, அந்த நாட்டை வெளிப்படையாகக் கைப்பற்றவில்லையென்றாலும் செயல் முறையிலே எங்கள் கட்டுப்பாட்டுக்கு உள்ளாக்கி விட்டார்கள். மலர்வேணிய மன்னர் தம்முடைய தமக்கை இங்கே துளு நாட்டிலே இருப்பதாக எண்ணி வருத்தமும் சீற்றமும் கொண்டு துடியாகத் துடித்தார். எங்கள் படை வலிமை அவருக்குத் தெரியும். எதிர்த்துப் போராடுவதற்கு வேண்டிய சூழ்நிலை உருவாக வேண்டும் என்றுதான் காத்திருக்கிறார் மலர்வேணியர். உங்கள் சேர மன்னரோடு கூட்டுச் சேர்வதற்குரிய பேச்சுக்கள் நடத்தி வருவதாகவும் கேள்வி. இந்த நிலைமையிலேதான் உங்கள் சேர நாட்டிலே ஆட்சி மாறியிருக்கிறது. உங்கள் நார்முடிச் சேரல் மன்னர், ஆய் எயினன் என்ற தலைவனைப் பெரும் படையோடு அனுப்பி எங்களைத் தாக்கியிருக்கிறார். இந்தப் போரின் விளைவு தமிழ் நாட்டின் எதிர்காலத்தையே தீர்மானிக்கும் அளவுக்கு முக்கியம் பெற்றுச் சீறுகிறது. இதுதான் இன்றைய நிலைமை. போரிலே நாங்கள் வெற்றி பெற்றால், நீலவல்லி எங்கே தப்பி ஓடினாள் என்பதைக் கண்டு பிடித்து, அவளை மீட்டிக் கொண்டு வந்து எங்கள் இளவரசருக்குத் திருமணம் செய்து வைப்பதாக ஒரே உறுதியோடு இருக்கிறார் மிஞிலி. எங்கள் படையின் வலிமையைப் பார்த்தால், இந்தப் பாழிப் போரிலே சேரர் படை தோற்றுவிடும் என்றுதான் நான் நினைக்கிறேன். இப்படிச் சொல்லுவதற்காக என்னை மன்னிக்க வேண்டும். உண்மை நிலையைக் கூறினேன். மற்றப்படி உங்கள் சேரர் படை வெல்ல வேண்டும் என்றும், மிஞிலி அழிந்து ஒழிய வேண்டும் என்றுமே நாங்கள் எல்லாரும் முழுமனத்தோடு விரும்புகிறோம்!''

இவ்வாறு சொன்னான் சிறைப் பாதுகாவலர் தலைவன்.

''நாங்கள் எல்லாரும் என்கிறீர்களே, எங்கள் சேரர் வெற்றியை விரும்பக் கூடிய துளு வீரர்கள் வேறு யார் இருக்கிறார்கள் இந்தத் துளுநாட்டிலே?''

''வேறு யார்? எங்கள் இளவரசர் இளநன்னரே மிஞிலியை வெறுப்பதோடு, இந்தத் துளுநாட்டிலே சூழ்ந்துள்ள வஞ்சகக் கருமேகங்கள் எப்போது கலைந்து வானம் தெளியும் என்று ஆவலோடு காத்திருக்கிறார். உண்மையைச் சொல்வதென்றால், எங்கள் இளவரசருக்கு அவருடைய தந்தையிடத்திலேயே ஒரு வெறுப்பு. தன்னுடைய தாயைக் கொடுமைப்படுத்திக் கொடுமைப்படுத்தி இந்த உலகிலிருந்தே அனுப்பிவிட்டார் என்றும், தமது தமக்கை இளநல்லினியை மிஞிலிக்கு மாலையிடும்படி வற்புறுத்தி வற்புறுத்தி அவளை இந்த அரண்மனையிலிருந்தே ஓடிவிடும்படி செய்தார் என்றும், தந்தையிடத்தில் ஆற்றொணாத சீற்றம் கொண்டிருக்கிறார் எங்கள் இளவரசர்!''

சிறை மதில்களின் எல்லை வரை வந்து விட்டார்கள் வேலவனும் சிறை நண்பனும்!

''ஐயா, பாதுகாவலரே! பாழிப் போரிலே உங்கள் படை வெற்றி பெற்று விடுமேயானால், மலர்வேணிய மன்னரும் உங்கள் இளவரசரும் என்ன ஆவார்கள் என்று எண்ணிப் பார்த்தால் நெஞ்சம் அனலாகச் சுடுகிறதே!'' என்றான் வேலவன்.

''எதுவும் உறுதியாகச் சொல்வதற்கில்லை. இந்தப் பாழிப் போரிலே மிஞிலி வெற்றி பெற்றான் என்றால், எப்படியும் நீலவல்லியைக் கண்டு பிடித்து விட்டுத்தான் மறுபடி அமருவான்! அத்தனை ஆத்திரம் அவனுக்கு!'' என்றான் சிறை நண்பன்!

சொல்லின்றி ஒரே சிந்தனையிலே நடந்தான் வேலவன் கோதை. நீலவல்லி எங்கே போயிருப்பாள் என்று இதுவரை குழம்பிக் கொண்டிருந்தவனுக்கு, இப்போது கிடைத்த செய்தி மேலும் குழப்பம் தருவதாக இருந்தது. தன்னுடைய திருமண உறவிலும் ஒரு புதிய சிக்கல் ஏற்பட்டது கேட்டு அவன் நெஞ்சம் துடித்தது.

''ஐயா நண்பரே! இத்தனை உண்மையோடும் அன்போடும் எல்லா நடவடிக்கைகளையும் என்னிடம் நீங்கள் கூறியதற்கு நான் எவ்வளவோ கடமைப்பட்டிருக்கிறேன். ஒரே ஒரு செய்தியை மட்டும் நீங்கள் எனக்குச் சொல்ல வேண்டும். அது ஒன்றைத் தெரிந்து கொண்டால் எனக்குச் சற்று ஆறுதல் ஏற்படும்!'' என்றான் வேலவன்.

''கேளுங்கள். நீங்கள் எதைக் கேட்டாலும் உங்களிடம் ஒளிவு மறைவு இல்லாமல் சொல்லுவேன். ஏனென்றால், எங்கள் ஆதன் ஆசிரியருக்கு உங்கள் சேரநாட்டின் நன்னலத்தில் அத்தனை ஆர்வம்!''

வேலவன் கேட்டான்:

''நீலவல்லியை உங்கள் இளவரசருக்குத் திருமணம் செய்து வைக்க



''என்ன விநோதமான சிருஷ்டி இயா இந்த ஒட்டகம்! பிரும்மா ஒருவனாலே மாத்திரம் இதைச் சிருஷ்டித்திருக்க முடியாது. தேவர்கள் பலர் அடங்கிய ஒரு கமிட்டி போட்டிருப்பார்கள். ஒவ்வொருத்தர் யோசனையையும் கேட்டு, அப்புறம் எல்லாரையும் திருப்திப்படுத்தும்வகையில் இம் மிருகத்தைப் படைத்திருக்க வேண்டும்!''

வேண்டும் என்று விரும்புகிறாரே, மிஞிலி—''

''விருப்பமா! ஒரு வேகம் அது! மலர்வேணிய மன்னரிடம் தமது யோசனையை மிஞிலி சொல்லி அதை அவர் ஏற்றுக் கொள்ளாததால், எப்படியும் தான் நினைத்ததைச் சாதித்து விட வேண்டும் என்ற ஒரு செருக்கு அது! மற்றப்படி எங்கள் இளவரசருடைய திருமண வாழ்வில் மிஞிலிக்கு என்ன அத்தனை ஆர்வமும் விருப்பமும்?''

''சரி. உண்மைதான். ஆனால் இந்த நிலையில் உங்கள் இளவரசருக்கு எப்படி இருக்கிறது மனம்? அவருக்கு நீலவல்லியை மணந்து கொள்ள வேண்டும் என்று—''

''எங்கள் இளவரசருக்கா? அவருக்கு இந்தத் திருமண உறவு பற்றி எத்தகைய கருத்தோ விருப்பமோ ஏதும் இல்லை. எப்போதுமே இருந்ததில்லை. அவரிடம் கேட்டுக் கொண்டா இந்தத் திருமண உறவைப் பேசினார்கள்! நீலக்கல் சுரங்கத்தின் மீது இருந்த நாட்டத்தை ஒரு திருமண உறவின் மூலம் நிறைவேற்றிக் கொள்ள வேண்டும் என்று மிஞிலி இப்படி ஒரு சூழ்ச்சி செய்தான்! எங்கள் இளவரசரோ தம்முடைய திருமணத்தைப் பற்றியோ தம்முடைய எதிர்காலத்தைப் பற்றியோ கவலையே இல்லாமல் தமது தமக்கையைப் பற்றியே எண்ணி எண்ணிக் கவலைப்பட்டுக் கொண்டிருக்கிறார்! அவரை இளவரசர் என்றுகூடச் சொல்ல மாட்டேன், இளம் பிள்ளை என்றே சொல்லுவேன்! எங்கள் ஆதன் ஆசிரியரைக் கேட்டால் இளம் பிள்ளை என்றுகூடச் சொல்ல மாட்டார், குழந்தை என்பார்! அத்தனை பசலை மனம்! அத்தனை தூய உள்ளம்! அத்தனை அன்பு!''

அந்தச் சிறைக் காவலனுக்குத்தான் தனது இளவரசனிடம் எவ்வளவு வாஞ்சை! இளநன்னனைப் பற்றி மேலே மேலே சொல்லிக் கொண்டே போனான் அவன். வேலவன் அந்தச் சொற்களையெல்லாம் செவியிலே தேக்கிக் கொண்டே சற்று நடந்து செல்வதற்குள், இரண்டு காவலர்கள் மிக விரைவாக ஓடி வந்தார்கள். தலைவருக்கு வணக்கம் செலுத்திக் கொண்டே சொற்களைக் கொட்டினான் அவர்களில் ஒருவன்.

''நம்முடைய படை திரும்பிக் கொண்டிருக்கிறதாம். பாழிப்போரிலே ஆய் எயினனை வேல் கொண்டு குத்தி வீழ்த்தி விட்டாராம் நமது தானைத் தலைவர். வெற்றி விழாவுக்கு ஆயத்தமாகும்படி அறிவிப்பு வந்திருக்கிறது!''

சிறைக்கூடத் தலைவன் வேலவனிடமிருந்த அவசரத்தோடு விடைபெற்றான். காவலர்கள் கொண்டு வந்த அந்த அதிர்ச்சியான செய்தியை மனத்திலே வாங்கிக் கொண்டே சிறைக்கூடத்துக்குள் நுழைந்தான் வேலவன் கோதை.

ஆகா! எத்தகைய துயரச் செய்தி அது! இன்று மாலையிலிருந்து அடுக்கடுக்காக அதிர்ச்சி மேல் அதிர்ச்சியாக வந்து கொண்டிருக்கிறதே!

வேலவன் கோதைக்குச் சிறைக்கூடத்திலே இருப்புக் கொள்ளவில்லை. சாய்மானத்திலே போய் அமர்ந்தான். நீலவல்லியின் நினைவு. சாய்மானத்திலிருந்து எழுந்து கட்டிலிலே போய்ச் சாய்ந்தான். ஆய்எயினன் மடிந்து சேரர்கள் தோல்வி அடைந்தார்களே என்ற துயரம்! படுக்கையிலிருந்து எழுந்து அந்தக் கூடத்திலே குறுக்கும் நெடுக்குமாக நடந்தான்.


இனி என்ன ஆகும்? பாழிப் போரிலே தங்கள் படை தோற்றுப் போய் விட்டதால் இனிச் சேரர்களின் வலிமையைப் பற்றி மற்ற மன்னர்கள் என்ன நினைப்பார்கள்? புன்னாட்டு மன்னன் இனிமேல் என்ன ஆவான்? நீலக்கல் சுரங்கத்தைத் தாக்காமல் இந்தத் துளுநாட்டு வஞ்சக மிஞிலி இதுவரை தெந்தினம் பாடிக் கொண்டு வந்தது எதனால்? சேரர்களுக்கு அஞ்சித்தானே? இனி அந்த அச்சம் இல்லை. நேராகப் படை எடுத்துச் சென்று புன்னாட்டைத் தாக்கி நீலக்கல் சுரங்கத்தைக் கைப்பற்றி விடுவான். அதே சமயம் இந்தத் தமிழகம் எங்கும் படை


உங்கள் குழந்தையின் அழுகையை
நிறுத்தி, சிரிக்கச் செய்ய,
மானேர்ஸ்
க்ரைப் மிக்ஸ்சர்
கொடுங்கள்.
அனுபவமிக்க அன்னையர் குழந்தையின்
முதல் வயதில் ஏற்படும் சாதாரண உடற்
கோளாறுகளைச் சரி செய்ய மானேர்ஸ் க்ரைப்
மிக்ஸ்சரையே நம்புகின்றனர். ஒரு டீ ஸ்பூனளவு
மானேர்ஸ் க்ரைப் மிக்ஸ்சர் ஒழுங்கான
இடைவேளைகளுக்கிடையே தரப்படுவதால்
குழந்தையின் மென்மையான ஜீரண சக்தி
சீரான நிலையில் இருக்க முடிகிறது
• வயிற்று உப்புசத்தையும் காற்றையும் அகற்றுகிறது.
• அஜீரணத்தை—குறிப்பாக பல் முளைக்கும் பருவத்தில்—தடுக்கிறது.
• குடல் வலியையும், வயிற்று வலியையும் குணப்படுத்துகிறது.
• ஜீரணேந்திரியங்களைச் சமனப்படுத்தி, நித்திரையை அளிக்கிறது.
Geoffrey Manners & Company Limited

தலைவலியா?

ஸாரிடான் 'ரோஷ்' சாப்பிடுங்கள்

வலி நீங்கி...



...உங்களுக்குப் புத்துணர்ச்சி அனுபவமாகும்!

அதுவே ஸாரிடானின் தனிப்பட்ட தன்மை! வலியையும் அத்துடன் மனதில் உண்டாகும் 'பளு'வையும் போக்குவது மட்டுமல்லாமல், இதத்தையும் புத்துணர்ச்சியையும் கூட அளிப்பதற்காக ஸாரிடான ஒரு தனிப்பட்ட முறையில் தயாரிக்கப்படுகிறது. ஸாரிடான் சாப்பிட்டதும் அனுபவமாகும் அற்புதமான மாறுதலைப் பாருங்கள்! உங்கள் மூளை மீண்டும் சுறுசுறுப்பாக வேலை செய்ய ஆரம்பிக்கிறது...வேலையில் உற்சாகம் ஏற்படுகிறது...சிநேகிதர்களுடன் களித்து மகிழ முடிகிறது! ஒரே ஒரு ஸாரிடான் வலியைப் போக்கி இதத்தையும், புத்துணர்ச்சியையும் அளிக்கும். ஸாரிடான் எப்பொழுதும் உங்கள் கைவசம் வைத்திருங்கள். குழந்தைகளுக்கு ¼ முதல் ½ வில்லை வரை போதும்.



தலைவலி, பல்வலி, உடல் வலி, அசௌகரியமான கட்டங்களில் வலி உடன் நிவாரணம் பெற ஒரே ஒரு ஸாரிடான் போதும்!

'ரோஷ்' தயாரிப்பு

ஸோல் டிஸ்ட்ரிப்யூட்டர்கள்: வால்டாஸ் லிமிடெட்

VT. 5626 (A)

அணிகளை அனுப்பி நீலவல்லி எங்கிருந்தாலும் அவளைப் பற்றிக் கொணரும்படி செய்வான். அவளைத் துளுநாட்டு இளவரசனுக்குத் திருமணம் செய்து கொடுத்து விடுவான். புன்னாடும் துளுநாடும் இணைந்துவிடும். பிறகு மற்றக் குறுநாடுகள் இணைவது எவ்வளவோ எளிதாகப் போய்விடும்!

வேலவன் மறுபடியும் கட்டிலிலே வந்து படுத்தான். புரண்டான். ஒன்றும் ஓடவில்லை. மனம் மயங்கியது.

எந்தச் சேரநாட்டின் மறுமலர்ச்சிக்காக இத்தனை துன்பங்களும் மேற்கொண்டானோ அந்தச் சேரநாட்டுப் படையானது பாழியிலே வீழ்ந்தது! எந்த நீலவல்லிக்காக இது வரை இதயத்தைப் பேணி வருகிறானோ அந்த நீலவல்லி இனிமேல் துளுநாட்டு இளவரசனுக்கு உரிமையாகப் போகிறாள்! தப்பிச் சென்ற இந்தத் துளுநாட்டு இளவரசி எங்கே இருந்தாலும் அவளையும் தேடிப் பிடித்துக் கொண்டு வந்து தானே மணந்துகொள்ளப் போகிறான் மிஞிலி!

என்ன உலகம்! என்ன வாழ்வு! அறம் வெல்லுவதும், வஞ்சகம் வீழ்வதும், கதைகளிலும் காப்பியங்களிலுந்தான்! வாழ்க்கை என்பது வேறு! மனித வாழ்க்கையில் எல்லாம் சட்டப்படியா நடக்கிறது! நல்லவன் இன்பமும், தீயவன் துன்பமுமா காண்கிறான்! சேரலாத மன்னர் எங்கோ ஒரு போரிலே மாண்டார்! அவர் வாழ்வு அப்படி முடிந்தது! ஆய் எயினன் பாழியிலே உயிர் துறந்தான்! சேரநாட்டுக்காக அவனுடைய வாழ்வு அப்படித் தீர்ந்தது! தன்னைப் பற்றியோ என்ன சொல்வது! யவனர்கள் சேரநாட்டுடன் செய்த வாணிபம் குன்றிவிடக் கூடாது என்பதற்காக அத்தனை முயற்சி எடுத்து, அத்தனை தொல்லைகளுக்கு உள்ளாகி, அந்தக் கண்ணற்ற தீவிலே போய்க் கடம்பனையே தொலைத்துத் தீர்த்து முடித்தாயிற்று! என்றாலும் இப்போது என்ன நேர்ந்தது? நன்னர்களின் கையே ஓங்கிவிட்டது! அந்த வெள்ளைத் தீவு மறுபடியும் நன்னர்களுடைய ஆட்சிக்கு உள்ளாகத்தான் போகிறது! இதுதான் உலகத்தின் நீதி போலும்!

வெள்ளைத் தீவிலே தங்கியிருந்த போது, வேலவன் கண்டெடுத்த பனைத்துப் பள்ளியின் சோதிட ஏடு நினைவுக்கு வந்தது! துளுநாட்டுச் சிறைக் கூடத்தின் துயரத் தனிமையிலே இப்போது அந்த ஏடுகள் இதழ் இதழாக வேலவன் கண் முன்பு விரிந்தன!

மாங்கனியை எடுத்துப் புசித்தான் என்று கோசர் மகளுக்கு மரண தண்



"உப்பு மண்டி வியாபாரம் செய்து நீங்கள் எட்டு பங்களா, நாலு கார் வாங்கி இருக்கலாம்! அதற்காக, காப்பியிலேகூட உப்பை அள்ளிக் கொட்டணுமோ ?"

டனை விதித்தான் நன்னன்! அந்தப் பெண் பழி நன்னர்களின் குலத்தையே அழிக்கப் போகிறது என்றும், பெண் கொலை புரிந்த நன்னர் குலம் ஒரு பெண்ணினாலேயே வீழப் போகிறது என்றும் அந்தச் சோதிட ஏடுகள் அறிவுறுத்தின அல்லவா!

வேலவன் உரக்கச் சிரித்தான். "சோதிடமாவது, ஆருடமாவது, வினையாவது, பயனாவது! எல்லாம் கற்பனை. எல்லாம் மோசடி. துறவிகள் தங்களைத் தாங்களே ஏமாற்றிக் கொண்ட தன்னேமாற்றம் இது! அவ்வளவுதான். இந்த ஏடுகளை வைத்துக் கொண்டு மற்றவர்கள் பிறரை ஏமாற்றுகிறார்கள்!"

இப்படி ஒரு கொடிய வெறுப்பு சோதிட ஏடுகளின் மீது! உடனே மறுவினாடி செல்வந்தி அடிகளின் உருவம் மனக்கண் முன் நின்றது! அதே சிரிப்பு. விந்தைச் சிரிப்பு!

"அடிகளே! நீங்களும் வந்து தோன்றி விட்டீர்களா? நீங்களும் என் முன் வந்து சிரிக்கிறீர்களா? சிரியுங்கள்! நன்றாகச் சிரியுங்கள்! உள்ளத்தின் வலிமை முழுதும் குரலிலே கொடுத்துச் சிரியுங்கள். என்னைப் பார்த்துச் சிரிக்கிறீர்களா? அல்லது துறவிகளின் ஏடுகளைப் பார்த்துச் சிரிக்கிறீர்களா? இல்லையென்றால் உங்களைப் பார்த்தே நீங்கள் சிரித்துக் கொள்கிறீர்களா? அடிகளே, செல்வந்தி அடிகளே, பெருந்துருத்தித் தீவின் காவற்கடவுளே! சிரியுங்கள்! நன்றாகச் சிரியுங்கள்! என்னைப் பார்த்துச் சிரியுங்கள். இந்தச் சிறைக்கூடத்தின் பூட்டிய கதவுகளைப் பார்த்துச் சிரியுங்கள்! இந்தத் துளுநாட்டு மாஞ்சோலையைப் பார்த்துச் சிரியுங்கள்! எங்கள் சேர குலத்தின் பெருமை யெல்லாம் பாழிப் போரிலே



"குடும்பப் பெண்களுக்கு 1000 குறிப்புகள்" என்ற நூலிலிருந்து எடுத்துத் தந்தவர் : காழி ஜெயா.

- கசப்புள்ள காய்களின் கசப்பைப் போக்க அவற்றை நறுக்கி அரிசி களைந்த நீரில் சற்று நேரம் போட்டு ஊற வைத்திருந்தால் போய்விடும்.
- வெங்காயத்தின்மீது லேசாக எண்ணெய் தடவிச் சிறிது நேரம் வெயிலில் வைத்திருந்து பிறகு முறத்தில் புடைத்தால் மேல் தோல் அகன்றுவிடும்.
- தேங்காயைப் பல்பல்லாகக் கீறித் தயிரில் போட்டு வைத்தால் இரண்டு நாட்கள்வரை தயிர் கெட்டுப் போகாது.
- கடையிலிருந்து வாங்கிய ரவையைச் சூடான வாணலியில் போட்டுச் சற்றே புரட்டிவிட்டுப் பின்னர் டப்பாவில் எடுத்து வைத்தால் எத்தனை நாளானாலும் புழு வராது.
- மண்ணெண்ணெய் விளக்குகளில், எண்ணெயுடன் சிறிது சூடம் அல்லது உப்பைப் போட்டு வைத்தால் விளக்குப் பிரகாசமாக எரியும். எண்ணெய்ச் செலவும் குறையும்.

பாழானது நோக்கிச் சிரியுங்கள்! நீலவல்லியைப் பற்றியே இப்போது சிந்திக்க வேண்டாம் என்று எனக்கு அறிவுரை பகர்ந்தீர்களே, அந்த நீலவல்லி இருக்கும் திக்கு நோக்கிச் சிரியுங்கள்! கடம்பனுடைய வெள்ளைத் தீவை நாளை மறுநாள் மறுபடியும் மிஞிலி தாக்கிப் பிடிக்கப் போகிறானே அந்தத் தீவையும் அதைச் சூழ்ந்து நிற்கும் அலைகடலையும் பார்த்துச் சிரியுங்கள்! உங்கள் பெருந்துருத்தித் தீவிலே அடைக்கலம் புகுந்தார்களே, அந்தத் துறவிகளையும் பார்த்துச் சிரியுங்கள்! முக்காலமும் உணர்ந்த முனிவரல்லவா, சிரியுங்கள் அடிகளே சிரியுங்கள்!"


வேலவன் கோதை சிரித்தான். துயரம், வேதனை, வெறுப்பு, ஆத்திரம், வெறி அத்தனையும் சேர்த்துத் தனது வாழ்வையே சிதறி அடிப்பது போலச் சிரித்தான் வேலவன்! சிறைக்கூடத்தின் கட்டில் எல்லாம் சிதறிச் சிதறிக் குலுங்கியது. அந்த வெறிச் சிரிப்பிலே சிறைக்கூடத்தின் சுவர்கள் எல்லாம் சிரித்தன. எதிரொலித்தன. சாளரங்கள், பலகணிகள், அவற்றினூடே வீசிய காற்று, மாஞ்சோலையிலே ஆடிய மரங்களின் சலசலப்பு, எல்லாம் சேர்ந்து வேலவன் கோதையின் சிரிப்பிலே சிரித்துச் சிரித்துச் சிதறிச் சிதறிக் குலுங்கின!

ஆனால், விந்தைச் சித்தரின் உருவம் அங்கிருந்து மறையவில்லை. வேலவன் கோதைக்கு முன்னால், அவனுடைய மனக் கண் முன்பு சுழன்ற அத்தனை காட்சிகளிலும் செவ்வந்தி அடிகள் தோன்றி நின்று மறுபடியும் மறுபடியும் சிரித்தார். சேரலாத மன்னனின் திருமுகம், சோழ மன்னனோடு செய்த இறுதிப் போர், ஆய் எயினன், பாழிப் பூசல், வெள்ளைத் தீவுக் கோட்டை, அலைகடல், மரக்கலங்கள், அவற்றினூடே கடம்பன், அவனுக்குப் பின்னால் நன்னர்களின் காட்சி, மிஞிலியின் வஞ்சகச் சிரிப்பு, பெருந்துருத்தி, ஆயிரம் ஆயிரம் துறவிகளின் முகங்கள், இப்படிச் சுழன்ற அந்தக் காட்சிச் சுழலின் நடுவிலே மறுபடியும் மறுபடியும் செவ்வந்தி அடிகளின் முகம் தோன்றித் தோன்றிப் பெரிய அளவிலே அந்தச் சிறைக்கூடம் முழுவதையுமே நிரப்பி நின்று உரக்கச் சிரித்தது!

வேலவனுக்குத் தலை 'கிர்' என்று சுற்றியது. அப்படியே கட்டிலில் சாய்ந்தான். இருள், இருள், ஒரே கரிய இருள்! இரவு கவிந்து அந்தச் சிறைக்கூடத்தையே போர்த்தியது!

'சரேல்' என்று ஒரு பெரிய விசையோசை கேட்டது. மிக உயரத்தில் இருந்த பலகணி வழியாக ஒரு கூரிய அம்பு பாய்ந்து வந்து சிறைக்கூடத்துக்குள்ளே விழுந்தது. பதறியெழுந்த வேலவன் தாவிச் சென்று கீழே பாய்ந்து வீழ்ந்த அந்த அம்பை எடுத்தான். அதன் அடித் தண்டிலே ஒரு நூற்கண்டு சுற்றியிருந்தது. ஒரு விநாடி நின்றான். மின்னல் போன்று ஒரு சிந்தனைக் கீற்று அவனுடைய நினைவு மண்டலத்திலே பாய்ந்தது. அப்படியே நூலின் ஒரு முனையைக் கையிலே பிடித்துப் பற்றியவாறு, நூற்கண்டைப் பலகணி வழியாக வெளியே வீசினான் வேலவன்கோதை! (தொடரும்)

கேசம் உதிருகிறதே என்ற கவலையா?



இன்றே ஸில்விக்ரின் உபயோகிக்கத் தொடங்கி உங்கள் கேசத்திற்குப் புத்துயிர் அளியுங்கள்

இந்த அபாயக் குறிகளை அசட்டை செய்யாதீர்கள்.
கேச உதிர்வு. உச்சந்தலையிலே தினவு. நார்போல் வரண்ட உரோமம். உங்கள் கேசத்திற்கு உகந்த ஊட்டமில்லை என்பதற்கான அறிகுறிகள் இவை. ஊட்டமின்மை தான் இளமையிலேயே வழுக்கை விழக் காரணமாகிறது. அந்த ஊட்டமின்மைக்கு உரிய நிவாரணம் ஸில்விக்ரின்—கேசத்திற்குரிய இயற்கையான போஷாக்கு.

ஸில்விக்ரின் எப்படி வேலை செய்கிறது.
18 அமினோ-அமிலங்களை உங்கள் கேசத்திற்கு உணவாக அளிக்கிறது இயற்கை. இந்த அமினோ—அமிலங்கள் எல்லாமே அடர்வாக ஒன்று சேர்ந்த வடிவில் கிடைக்கச் செய்வது ஸில்விக்ரின் ஒன்றே. அது வேகமுடன மயிர்க்கால்களை ஊடுருவி, ஊட்டமளித்து உரமேற்றி, பாங்கான கேச வளர்ச்சியை ஊக்குவிக்கும்.

உபயோக விதிமுறைகள்:
உங்கள் உச்சந்தலைமீது அன்றாடம் இரு நிமிட நேரம் ப்யூர் ஸில்விக்ரின் தேய்த்திடுங்கள். கேச நிலை அபிவிருத்தி அடையும் வரை உபயோகியுங்கள் ப்யூர் ஸில்விக்ரின். கேச நலம் மீண்டு விட்டதென்றால் அதன் பின் கேச நலனைக் காத்துக் கொள்ளத் துணை புரிவது ஸில்விக்ரின் ஹேர் டிரஸ்ஸிங்-ப்யூர் ஸில்விக்ரின் அடங்கிய, எண்ணெய் அடிப்படை கொண்ட லோஷன்.

ஆல் அபௌட் ஹேர் (All About Hair) என்ற புத்தகத்தின் இலவசப் பிரதியைப் பெற, எழுதுங்கள்: டிபார்ட்மெண்ட் K-1, தபால் பெட்டி 727, பம்பாய்-1.



ஸில்விக்ரின் தயாரிப்புகள்— ஆடவர், பெண்டிர் யாவரும் உபயோகிக்கத் தக்கவை.

ஸில்விக்ரின்

கேசத்திற்குரிய இயற்கையான போஷாக்கு.

LPE-Aiyars S. I TAM

சிவனருட் செல்வர்

திருமுருக கிருபானந்த வாரியார்



அருவுக்கும் உருவுக்கும் காரணமாக விளங்குவது சிவலிங்கம். மாலும் அயனும் பிணங்கியபோது இடையில் ஜோதி வடிவாய் நின்ற குறிப்பும் சிவலிங்கத்தையே குறிக்கிறது. இறைவன் சோதி வடிவானவர். சோதி மேல் நோக்கி நிற்கின்றது. அது ஆன்மாவில் உயிருக்குயிராய் விளங்குகின்றது. ஆன்மா அறிவுப் பொருள். ஆன்மாவுக்கும் சிவத்துக்கும் இடையில் அருள் ஒளிர்கின்றது. ஆன்ம சோதி, அருட்சோதி, சிவ சோதி என்ற இம்மூன்றும் ஒருங்கு கூடியதே சிவலிங்கம். சிவலிங்கத்தின் அடி வட்டம் ஆன்ம சோதி. சிவலிங்கத்தினைச் சூழ்ந்திருக்கின்ற ஆவுடையார் அருட்சோதி. மேல் நோக்கியிருக்கிற சிவலிங்கம் சிவசோதி. இந்த மூன்றும் சேர்ந்து நமக்குச் சிவலிங்கமாகக் காட்சியளிக்கின்றது.

"சோதியே சுடரே சூழொளி விளக்கே!" என்பார் மாணிக்கவாசகர். இதனைச் சேக்கிழார் பெருமான், இந்நாயனாரது புராணத்திலே, "எட்டிரண்டும் இதுவாம் இலிங்கம்" என்று அருணகிரிநாதர் கூறியபடி, எட்டாவது செய்யுளில் செப்பிய திறம் மிக மிக வியக்கத் தக்கது.

காரண அருவினுக்கும்
உருவினுக்கும் காரணமாம்
நீரணிகம் அணிந்தார்க்கு
நிகழ்குறியாம் சிவலிங்கம்
நாரணனு நெடியமால்
நான்முகனுங் காணாநுடு
சேரணுந் தழற்பிழம்பாந்
தோன்றியது தெளிந்தாராய்

சிவலிங்க வழிபாடு எல்லா வழிபாடுகளிலும் தலையாயது என்று தெளிந்த சாக்கிய நாயனார், நாள்தோறும் சிவலிங்கத்தைக் கண்ணுற்ற பின்னரே உணவு உண்ண வேண்டும் என்ற நியதியை மேற்கொண்டார். அருகில் ஒரு வெட்டவெளியில் சிவலிங்கம் இருந்தது. அதைக் கண்டு மிகுந்த களிப்புற்று, அக்களிப்பின் மிகுதியால் இன்னது செய்வது என்று அறியாதவராய் அங்கிருந்த ஒரு கல்லை எடுத்துச் சிவலிங்கத்தின்மீது எறிந்தார். அப்பரடிகளைக் கண்டவுடன் அப்பூதி அடிகள் மகிழ்ச்சி மிகுந்து திகைத்துச் செயல் மறந்ததையும் இங்கு சிந்திக்க வேண்டும். நெடு நாட்களாக மறவாது சிவனை நினைந்து நினைந்து நெஞ்சம் மகிழும் நியமம் பெற்றிருந்த சாக்கிய நாயனார் புரிந்த கல்லெறித் தொண்டினை இறைவன் மிகவும் இனிமையாக ஏற்றுக் கொண்டார். குழந்தைகள் அன்பின் மிகுதியால் தாய் தந்தையரின் தலை மயிர் பிடித்து ஈர்த்தல், காதில் விரல் விட்டுக் குடைதல் முதலிய அநுசிதங்களைச் செய்கிற பொழுது, குழந்தைகளின் அன்பு ஒன்றையே நினைத்து, அவர்களுடைய வன்செயலைக் கருதாது மகிழ்வது போல், சாக்கிய நாயனார் ஒப்பற்ற அன்பினால் எறிந்த கல்லடியைக் கண்ணுதற் கடவுள் ஏற்றுக் கருணை புரிந்தார்.

அகம்நிறைந்த பெருவுவகை
அடங்காத ஆதரவால்
மகவுமகிழ்ந் துவப்பார்கள்
வன்மைபுரி செயலினால்
இகழ்வனவே செய்தாலும்
இளம்புதல்வர்க் கின்பமே
நிகழுமது போலதற்கு
நீள்சடையார் தாம்மகிழ்வார்

என்று இந்தக் கருத்தைக் கூறி அமைதி செய்கிறார் சேக்கிழார்.

செயலுக்கு ஒன்றும் கருவியில்லை. செயல் புரிந்தார் உள்ளத்தில் நிகழும்

அன்பு நிலைக்கே தகுதியுண்டு. அன்பில்லார் தாம் புகழுரையைக் காட்டிலும், நமது நலம் கருதுவோர் இகழுரை நமக்கு இன்பம் பயக்கின்றது.

மன்மதன் இறைவர் மீது மலர் சொரிந்தான். அவன் கணை என்றுவிட்டது மலர்கள்தான். ஆனால் இறைவர் அவனை எரித்து விட்டார். மன்மதன் மலர் எறிந்த செயல் நன்றேயாயினும், அவன் உள்ளம் இறைவரை மயக்க வேண்டும் என்று துணிந்தது. அதனாலேயே அச்செயல் தீமையாயிற்று. சாக்கிய நாயனார் கல்லெறிந்தாலும், இறைவர் மீது எல்லையில்லாத அன்புடன் திருவருளையே தாரகமாகக் கொண்டு செயலறியாது கல்லெறிந்தார். ஆகவே, இவருடையசெயல் இறைவருக்கு உகந்ததாக ஆயிற்று.

மறு நாள் உணவு உண்ணுமுன் சாக்கிய நாயனார் சிவலிங்கத்தைத் தரிசிக்க வந்தார். நேற்று நிகழ்ந்த குறிப்பினை நினைந்து, ''நான் அப்போது அவ்வாறு செய்தது இறைவர் திருவருளே!'' என்று உணர்ந்து, அதுவே என்றும் செய்யத் துணிந்தார். எல்லாம் சிவன் செயல் என்று உறுதியாகத் தெளிந்தவர் ஆதலினால், கல்லெறிதலையும் சிவந்த ஆடையுடுத்தலையும் தவிராதவராய் நின்றார்.

அன்பு நெறி வழக்கினால் தொண்டர்கள் புரியும் கருமம் இறைவனுக்குப் பூசனையே அன்றோ? வன வேடனாராகிய கண்ணப்பர் செருப்படியை இறைவன் விரும்பியதுபோல், இவருடைய கல்லெறிதலையும் விரும்பி ஏற்றுக் கொண்டார். மற்றவர் கல் என்றாலும் சிவனாருக்கு அது மலராகவே ஆயிற்று.

கல்லாலே எறிந்ததுவும்
அன்பான படிகாணில்
வில்வேடர் செருப்படியும்
திருமுடியின் மேலிற்றால்
நல்லார்மற் றவர்செய்கை
அன்பாலே நயந்ததனை
அல்லாதார் கல்லென்பார்
அரனார்க்கஃ தலராமால்

ஒரு நாள் சிறிது மறதியாக உணவு உண்ண அமர்ந்தார் சாக்கிய நாயனார். ''ஆ! ஆ! கெட்டேன். எங்கள் பெருமானைச் சேவிக்காமல் அமர்ந்தேன்'' என்று கூறித் துணுக்குற்று எழுந்தார். பொங்கி எழுந்த காதலுடன் மிக விரைந்து புறப்பட்டு அரனார் திருமுன்பு சென்றார். கல்லெடுத்துக் குறி தவறாமல் எறியும் பொருட்டு உணவை ஒழித்து வேட்கையுடன் ஓடி வரும் திருத்தொண்டர்முன் கண்ணுதற் கடவுள் விண்ணிடை உமாதேவியாருடன் தோன்றியருளினார். மூவரும் தேவரும் காணாத முழுமுதற் கடவுளைக் கண்குளிரக் கண்ட சாக்கிய நாயனார், தணியாத காதலுடன் பல முறை பணிந்தார். இறைவர் கடைக் கண்ணால் நோக்கியருளிச் சாக்கிய நாயனாருக்குச் சிவலோகங் கொடுத்தருளினார்

58. வள்ளலார்

உலோப குணத்தினும் இழிந்தது வேறு ஒன்றுமில்லை. வள்ளன்மையே அடியார்களுடைய சிறந்த பண்பாகும். இளையான்குடி மாறநாயனார், மெய்ப்பொருள் நாயனார், சேரமான்பெருமாள் நாயனார் முதலிய நாயன்மார்களது வரலாறுகளில் இதனை நன்கு அறியலாம். சிறப்புலி நாயனார் பெரிய வள்ளன்மையுடன், ''உள்ள பொருளெல்லாம் சிவன் தந்தது'' என்று எண்ணிக் கேளா முன்னரே அடியவர்கட்கு வழங்கியவர். அதனால் சேக்கிழார் பெருமான் இவரை ''வள்ளலார்'' என்றே குறிப்பிடுகிறார்.

மன்னிய புகழுடை பொன்னி நாட்டில் எல்லாச் சிறப்புக்களும் பொருந்திய தலம் திருவாக்கூர். இத்தலம் மாயூரத்திலிருந்து தரங்கம்பாடிக்குப் போகும் வழியில் உள்ளது. அத்திருப்பதியில் மிகுந்த புகழுடன் வாழ்ந்தார் சிறப்புலி நாயனார். மறையவர் குலத்தில் வந்த அவர், நீலகண்ட நிமலனாருடைய திருத்தொண்டுகள் பல புரிந்து வந்தார். சிவபக்தியின் முதற்படி ஈவிரக்கமேயாம் என்பதை நன்குணர்ந்த அவர், பாரிபோல் வரையாது வாரி வழங்கும் வள்ளலாகத் திகழ்ந்தார்.

ஆளும்அங் கணருக் கன்பர்
அணைந்தபோ தடியில் தாழ்ந்து
மூளும்ஆ தரவுபொங்க
முன்புநின் றினிய கூறி
நாளும்நல் லமுதம் ஊட்டி
நயந்தன எல்லாம் நல்கி
நீளும்இன் பத்துள் தங்கி
நிதிமழை மாரி போன்றார்.

ஓதுவாரை உய்விக்கும் ஆதி மந்திரமாகிய ஐந்தெழுத்தை ஓதிச் சிவவேள்வி புரிவார் சிறப்புலி நாயனார். அவர் தவநெறி நின்று தலையாய சிவபுண்ணியங்கள் பல புரிந்து, இமயவல்லி பங்கராம் இறைவன் இணையடிமலரை இதயத்தில் நிறுத்தி இடையறாது அன்பு செய்து அம்பலவாணர் அடிமலர் நிழலில் கலந்து பேரின்பப் பெருவாழ்வு பெற்றார்.

உடனடி நிவாரணம்!

அஜீரணத்திலிருந்து நீங்களும் உங்கள் குடும்பத்தினரும் விடுதலை பெற








இனிமையான சுவையுள்ள பிலிப்ஸ் மில்க் ஆப் மக்னிஷியா சில விநாடிகளில் "உடனடி" நிவாரணமளிக்கிறது. ஏனெனில் அவை பிலிப்ஸ் மில்க் ஆப் மக்னிஷியாவினுடைய பூரண சாரத்தையும் கொண்டது. ஒவ்வொரு மாத்திரையும் தன்னுடைய எடைக்கு 189 மடங்கு எடையுள்ள வயிற்றுப் புளிப்பை அகற்றுகிறது.

இப்பொழுது மெல்லிய தகடுகளில் 10 மாத்திரைகளாகவும் 4 மாத்திரைகளாகவும் கிடைக்கிறது. குடும்பத் தேவைகளுக்கு சிக்கனமான முறையில் 75 மற்றும் 150 மாத்திரைகள் கொண்ட பாட்டில்களில் தயாராகக் கிடைக்கும்.

இன்றே வாங்குங்கள். எப்பொழுதும் பிலிப்ஸ் மாத்திரைகள் கைவசம் வைத்திருங்கள். வயிற்றில் கோளாறு ஏற்படும் போது சில மாத்திரைகளை சுவைத்து "உடனடி" நிவாரணம் பெறுங்கள்.

பிலிப்ஸ்

மில்க் ஆப் மெக்னீஷியா டாபிலெட்



மானுபாக்சரர் : ரிஜிஸ்டர்ட் யூஸர்
டேய்ஸ் மெடிகல் ஸ்டோர்ஸ் (மானுபாக்சரிங்)
பிரைவேட் லிமிடெட்,
62, புண்டல் ரோட், கல்கத்தா-19

59. சிறுத்தொண்டர் என்னும் பெருந்தொண்டர்


சோழவள நாடு காவிரி நதியால் வளம் பெறுகின்ற நாடு. அத்திருநாட்டில் மன்மதனை விழியால் எரித்த விமலனார் எழுந்தருளியுள்ள அரிய தலம் திருச்செங்காட்டங்குடி. இமையவர்கட்கும், முனிவர்கட்கும் இடர் பல இழைத்த கஜமுகாசுரனை விநாயகப் பெருமான் மாய்த்தருளிய போது, கஜமுகாசுரன் உடம்பிலிருந்து வெளிப்பட்ட உதிரம் அக்காடு முழுவதும் பரவியதனால், அக்காடு சிவந்த நிறத்தை அடைந்தது. அதனால் அதற்குச் செங்காடு என்ற பேர் உண்டாயிற்று. கணபதி அங்கு ஆத்திமரத்தின் கீழ் ஒரு சிவலிங்கத்தை எழுந்தருளப் புரிந்து பூசித்தனர். அங்கு பலர் குடியேறினார்கள். அத் திருக்கோயில் கணபதீச்சரம் எனப்படும். ஆத்தி மரம் பழைமையானது; இன்றும் இருக்கின்றது. அதன்கீழ் உத்தராபதீச்சுரர் திருவுருவம் மிகவும் அருமையாக அமைந்துள்ளது. இத்தலம் நன்னிலத்துக்கு அருகில் உள்ளது. அங்கு போகும் வழியில் அப்பர் பெருமான் முத்தி பெற்ற திருப்பூம்புகலூர் இருக்கின்றது. அரவம் தீண்டி மடிந்த செட்டி மகனைச் சம்பந்தர் திருப்பதிகம் பாடி எழுப்பிய திருமருகல் திருச்செங்காட்டங்குடிக்கு மிக அண்மையில் உள்ளது.

இப்பதியில் மாமாத்திரர் (வைத்தியர்) மரபிலே பரஞ்சோதியார் என்பார் சிறப்புற்று இருந்தார். இவர் மிகப் பெரிய வீரர். படைக்கலங்களில் வல்லவர். மருத்துவ நூல்களையும், எல்லையில்லாத வடமொழி நூல்களையும் கற்று வல்லவராக விளங்கினார். யானையேற்றம், குதிரையேற்றம் முதலியவைகளையும், பிற கலைகளையும் அறிந்து தமக்கு ஒப்பார் எவருமின்றி வீரராக நின்றார். கலைகள் அனைத்தையும் கற்று, அவைகளின் பயன் கண்ணுதற் பெருமான் கழலிணையைக் கருதுவதேயாகும் என்று தெளிந்து, காலனை யுதைத்த கண்ணுதற் திருவடியை இடையறாது சிந்தித்து, பள்ளத்தில் பாயும் தண்ணீர் போல் அன்புசெய்து வந்தார்.

உள்ளநிறை கலைத்துறைகள் ஒழிவின்றிப்
பயின்றவற்றால்
தெள்ளிவடித் தறிந்தபொருள் சிவன்கழலிற்
செறிவென்றே
கொள்ளு முணர்வினின்முன்னே கூற்றுதைத்த
கழற்கன்பு
பள்ளமடை யாய்என்றும் பயின்றுவரும்
பண்புடையார்.

பரஞ்சோதியார் சோழ நாட்டை ஆண்ட பல்லவ மன்னன் நரசிம்மவர்மனிடம் நெருங்கிய தொடர்புடைய சேனாவீரராகத் திகழ்ந்தார். பலமுறை யானை மீது சென்று பகைவர்களுடைய போரில் வென்று, பல நாடுகளை மன்னன் வசம் ஆக்கினார். அதனால் அவருக்கு அரசாங்கத்தில் அளவிறந்த பெருமதிப்பு ஏற்பட்டிருந்தது.

வடபுலத்து வாதாபி என்ற நகரத்து மன்னன் புலிகேசி சோழ நாட்டை ஆளும் பல்லவ மன்னனை முன்னே வென்று வீறு பெற்றிருந்தான். பல்லவ மன்னனால் வெல்லுதற்கரிய வாதாபி மன்னனுடன் பரஞ்சோதியார் நால்வகைச் சேனைகளுடன் போர் செய்து வென்றார். அங்குள்ள விலையுயர்ந்த நவமணிகளையும் பொற்குவியலையும், யானைகளையும், குதிரைகளையும் இன்னும் பல உயர்ந்த பொருள்களையும் கவர்ந்து



கொண்டு தமது மன்னனிடம் வந்து சேர்ந்து அவைகளைத் தந்து வணங்கினார். மன்னன் அதனைக் கண்டு அதிசயித்தான். பரஞ்சோதியாரின் வீரச் செயலைக் கண்டு விம்மிதம் கொண்டான்.

''என்னாலும் வெல்ல முடியாத வடதேயத்து வாதாபி மன்னனை எவ்வாறு வென்றீர்?'' என்று வியப்புடன் வினவினான்.

அருகில் இருந்த அமைச்சர்கள் அரசனைப் பணிந்து, ''அரசரேறே! இவர் சிவபெருமானுடைய திருவருள் பெற்றவர். அருள் வலிமையுடையவர். திருத்தொண்டின் திறம் படைத்தவர். அதனால் இவருக்கு நிகரானவர்கள் இவ்வுலகில் எங்கும் இல்லை'' என்று இயம்பினார்கள்.

பரஞ்சோதியார் சிவபெருமானுடைய திருத்தொண்டர் என்பதை அறிந்த மன்னவன், ''ஆ! நான் கெட்டேன். இவர் ஈசனடியார் என்பதை உணராது ஒழிந்தேன். கொடிய போர்க்களங்களுக்கு இவரை அனுப்பி ஏவல் கொண்டேன். இது பெரும் பிழையாகும்'' என்று அஞ்சினான்.

''பெருமானே! சிறியேனுடைய பிழையைப் பொறுத்தருள வேண்டும்'' என்று வணங்கினான்.

மன்னன் வணங்கியதைக் கண்ட பரஞ்சோதியார் தாமும் வணங்கி, ''வாள்வேந்தே! வருந்தற்க. என்னுடைய உரிமைத் தொழிலுக்கு ஏற்ற கடமையையே நான் செய்தேன். அதனால் என்ன குற்றம்? இதுபற்றி நீர் இரங்குதல் வேண்டாம். நீர் செய்தது பிழையுமாகாது!'' என்றார்.

மன்னன் மீண்டும் அவரைப் பணிந்து ''சிவனடியாராகிய தேவரீர் என்னிடம் பணி செய்தல் கூடாது. தாங்கள் பெரிய சிவ பக்தர். ஆகவே தாங்கள் தங்கள் ஊர் சென்று தங்கள் விருப்பம் போலவே திருத்தொண்டு தனைச் செய்து கொண்டிருங்கள்'' என்று கூறி நிறைந்த நிதிக் குவியல்களும், நில புலங்களும் தந்து, அன்புடன் தொழுது விடை கொடுத்து அனுப்பினான்.

வேந்தனிடம் விடைபெற்ற பரஞ்சோதியார் தமது திருநகரமாகிய திருச்செங்காட்டங் குடியை அடைந்து, கணபதீச்சரம் என்ற திருக்கோயிலில் எழுந்தருளியுள்ள இறைவரை இறைஞ்சினார். தாம் செய்யும் திருத்தொண்டிற்கு அநுகூலமாகக் குற்றமில்லாத குடியில் பிறந்த திருவெண்காட்டு நங்கை என்பாரைத் திருமணம் செய்து கொண்டார். இருவரும் கருத்தொருமித்து மனையறம் புரிந்து வையகம் போற்ற வாழ்ந்தார்கள். (தொடரும்)

உலகை உழுபவன்!

வீ. எஸ். ஸ்டாலின்

ஏகநாலா என்ற கிராமத்தைச் சேர்ந்த பரத்வாஜன் என்ற செல்வந்தனான ஒரு விவசாயி தன்னுடன் வயலில் உழுது கொண்டிருந்த கூலி ஆட்களை, மாடுகளை அவிழ்த்து விட்டுவிட்டு ஓய்வெடுத்துக் கொள்ளுமாறு கூறினான். நண்பகல் நேரம் அது. அனைவரும் மரத்தடி நிழலில் அமர்ந்து மதிய உணவைப் புசிக்கத் தொடங்கினர். அச்சமயத்தில் அந்தப் பக்கமாக ஓர் ஏழைச் சந்நியாசி வந்தார். கையில் ஓடேந்தி மௌனமாய் நின்றார்.

பரத்வாஜன் உணவுக்காக நிற்கும் இந்தச் சந்நியாசியைப் பார்த்தான். அவனுக்கு ஏளனமாக இருந்தது. ''ஓய், சந்நியாசியே! எதற்கு இப்படிப் பிச்சை எடுத்துப் பிழைக்கிறீர்? எங்காவது போய் வயலில் உழுது உழைத்துப் பிழைக்கக் கூடாதா? என்னைப் பார்! எனக்குச் சோம்பேறித் தனமே பிடிக்காது. வயலை உழுது விதைகளை ஊன்றிய பிறகுதானே நான் உணவருந்த வந்திருக்கிறேன்'' என்றான்.

சந்நியாசி மெல்ல நகைத்தார். ''நானும்தான் உழுகிறேன்'' என்று இலேசாக அசைந்த அவரது உதடுகள் மொழிந்தன.

''அப்படியா? அப்படியானால் உன் கலப்பை எங்கே? உழவு மாடுகள் எங்கே?'' என்று கேட்டான் பரத்வாஜன்.

சந்நியாசி கூறுவார்: ''பூமி முழுவதுமே என்னுடைய வயல்தான்; முயற்சி என் உழவு மாடுகள்; நல்லெண்ணங்கள் என் விதைகள்; உண்மையைக் கொண்டு நான் களை பிடுங்குகிறேன். நல்ல காரியங்கள் என்ற விளைச்சலை அறுவடை செய்கிறேன். அறுவடையான இந்த உணவைக் கொண்டு நான் மனித சமுதாயத்தின் ஆத்மாக்களுக்கு 'உணவு' பரிமாறுகிறேன். அப்பனே! உன்னைப் போலவே நானும் ஒரு விவசாயிதான்!''

இந்தச் சொற்களைக் கேட்ட பரத்வாஜன் இவர் கௌதம புத்தரே எனத் தெளிந்தான். தனக்குக் கிட்டிய பெரும் பாக்கியத்தை எண்ணி எண்ணி உள்ளம் நெகிழ்ந்தும் மகிழ்ந்தும் இன்ப வேதனைக்கு உள்ளானான்.



(மே 23ந் தேதி வைகாசி பௌர்ணமி புத்த ஜயந்தி)

ஹெடென்ஸா



மூல நோய்க்கு

எங்கும் கிடைக்கும்

DZ-982A TAM

கால் அரிப்பு சரும அரிப்பு

அரிப்பு, எரிச்சல் முதலிய உபாதைகளை உங்களால் தாங்க முடியாமல் பைத்தியம் பிடித்து விடும் போலிருக்கிறதா? உங்கள் சருமத்தில் வெடிப்புகள் தோன்றி தோல் உரிந்து ரத்தம் கசிகிறதா? பாதங்களிலும் கால் விரல்களுக்கு இடையிலும் புண்கள் தோன்றி உபத்திரவம் செய்கின்றனவா? இவைகள் வெடித்துக் கசிந்து மேலும் புண்களை உண்டாக்குகின்றனவா? இவைகளுக்கெல்லாம் மூலகாரணம் சிங்கப்பூர் சொறி, வண்ணாரப்படை, என்று பல பெயர்களில் வழங்கப்படும் ஒருவகைக் கிருமி. மூலகாரணமான இந்தக் கிருமிகளை ஒழிக்கும்வரை இவ்வுபாதைகளிலிருந்து நிவாரணமடைய முடியாது. விஞ்ஞான முறையில் தயாரிக்கப்பட்ட நிக்ஸோடெர்ம் (Nixoderm) முதல் தடவை போட்டவுடனேயே அரிப்பை நிறுத்தி கிருமிகளைக் கொன்று சருமத்தின் புண்ணை ஆற்றி மிருதுவாக்கி சுத்தப்படுத்த ஆரம்பிக்கிறது. நிக்ஸோடெர்ம் (Nixoderm) அரிப்பை நிறுத்துவதில் வெற்றி கண்டுள்ளது. மேலும் பாதத்தின் மேலிருக்கும் புண்கள் மோசமாகப் பரவும் படை, முகப்பருக்கள் கட்டிகள் முகத்திலோ அல்லது தேகத்திலோ பரவிய படர் தாமரை முதலிய உபாதைகளைக் குணமாக்குகிறது. இன்றே உங்கள் கெமிஸ்டிடம் நிக்ஸோடெர்ம் (Nixoderm) வாங்குங்கள். பூரண திருப்தியை அது நிச்சயமாக அளிக்கும்.

காஸ்டரால்

சுகந்த காஸ்டர் தைலம்



கேசத்தின் ஆரோக்கியத்திற்கு!

விவேகமுள்ள ஆண்களும் பெண்களும் கால்கெமிகோவின் காஸ்டராலையே விரும்புவதற்குக் காரணம், அடர்த்தியான கேசவளர்ச்சியை அதிகமாக்குவதற்குரிய அதன் அரும் குணங்களை அவர்கள் அறிவார்கள்.

தயாரிப்பாளர்கள்:
தி கல்கத்தா கெமிகல் கோ. லிட்.,
கல்கத்தா—29.




CF-18-65 Tamil

தென் இந்திய ஆபீஸ்:

5/149, பிராட்வே சென்னை-1

B·I



S. S. ரஜூலா

சென்னையிலிருந்து

1967 ஜூன் 8   1967 ஜூலை 2

சென்னையிலிருந்து பினாங்கு மற்றும் சிங்கப்பூருக்கு பிரயாணம் செய்ய விரும்பும் பிரயாணிகள் தயவுசெய்து கீழ்க்கண்ட விலாசதாரருக்கு விண்ணப்பிக்கவும்.

மெஸர்ஸ் பின்னி & கோ., லிமிடெட்
7, அரமனைக்காரத் தெரு, சென்னை-1

அல்லது கீழ்க்கண்ட கம்பெனியின் அங்கீகாரம்பெற்ற
பாஸேஜ் புரோக்கர்களுக்கு விண்ணப்பிக்கவும்

C. M. குட்டி
புரொப்ரைட்டர்: குட்டி டிராவல் சர்வீஸ்
38, அங்கப்ப நாயக்கன் தெரு
சென்னை-1

மெஸர்ஸ் கேரளா டிராவல்ஸ்
மாஸ்காட் ஹோட்டல்
திருவனந்தபுரம்

நாகப்பட்டினத்திலிருந்து

1967 ஜூன் 9   1967 ஜூலை 3

நாகப்பட்டினத்திலிருந்து பினாங்கு மற்றும் சிங்கப்பூருக்குப் பிரயாணம் செய்ய விரும்பும் பிரயாணிகள் தங்களது பிரயாண டிக்கட்டுகளை கீழ்க்கண்ட விலாசத்தில் நேரிடையாகப் பெற்றுக்கொள்ளலாம்

மெஸர்ஸ் மதுரா கம்பெனி பிரைவேட் லிமிடெட்
முதல் லைன் பீச் ரோடு, நாகப்பட்டினம்

பினாங்கு, போர்ட் ஸ்வெட்டன்ஹாம், சிங்கப்பூர் முதலிய இடங்களுக்கு நேரடியாக ஏற்றிச் செல்லவும், சிங்கப்பூரில் கப்பல் மாற்றி ஆஸ்திரேலியா நியூஜிலாந்து துறைமுகங்களுக்கு அனுப்பவும் சரக்குகள் சென்னையிலிருந்தும் நாகப்பட்டினத்திலிருந்தும் ஏற்றுக் கொள்ளப்படும்.

பிரயாணிகள் மற்றும் சாமான்கள் ஏற்றும் விவரங்களுக்குத் தயவுசெய்து எழுதவும்:

பின்னி & கம்பெனி லிமிடெட்
7, அரமனைக்காரத் தெரு, சென்னை-1

மதுரா கம்பெனி பிரைவேட் லிட்.
முதல் லைன் பீச் ரோடு, நாகப்பட்டினம்

ஏஜண்டுகள்: பிரிட்டிஷ் இந்தியா ஸ்டீம் நாவிகேஷன் கம்பெனி லிமிடெட்



மின்சாரத் தூக்கம்

தூக்கம் வராமல் அவஸ்தைப்படுபவர்களுக்கு உதவுவதற்காக, ஜெர்மனியைச் சேர்ந்த ''பாஷ்-எலக்டிரானிக்ஸ்'' கம்பெனியார் ஒரு புதிய சாதனத்தைத் தயாரித்திருக்கிறார்கள். 'பாண்டேஜ்' ஒன்றைக் கண்களின்மீது கட்டிக் கொண்டு படுத்துக்கொள்ள வேண்டும். பாண்டேஜ்மீது பாட்டரியினால் இயங்கும் சாதனத்திலிருந்து லேசாக மின் துடிப்புகள் செலுத்தப்படுகின்றன. கண்கள் மூலமாக மத்திய நரம்பு மண்டலத்துக்கு மின்துடிப்பு செல்கிறது. கண்கள் சோர்ந்து விடுவது போன்ற உணர்ச்சி ஏற்படுகிறது. உடனே ஆழ்ந்த ஆனந்தமான தூக்கம்தான்! தூக்கம் வந்ததும், இயந்திர சாதனம் தானாகவே நின்றுவிடுகிறது. - யூ.பி.எஸ்.

பாகவதன் யார்?



திருவரங்கத்திலிருந்த ஒரு கல்விமானுக்கு உண்மையான பாகவதன் யார் என்ற ஐயம் எழுந்தது. தன் குருவிடம் வினவினான். குருநாதர் காஞ்சியிலிருந்த ஒரு ஞானியைக் குறிப்பிட்டு அவரிடம் சென்று விசாரிக்கும்படி கூறினார். அவன் அவ்விதமே காஞ்சிக்கு விரைந்து, அந்த ஞானியைக் கண்டு பிடித்து, 'சுவாமி! உண்மையான பாகவதன் யார்? அவன் எப்படி இருப்பான்? அவனுக்குரிய லட்சணங்கள் என்ன?' என்று கேட்டான். ஞானியோ, 'ஆகட்டும், சொல்லுகிறேன்' எனக் கூறினாரே யொழிய விளக்கமாக ஏதும் கூறி அவன் ஐயத்தைப் போக்கவில்லை. மறுநாள், அதற்கும் மறுநாள்—இவ்வண்ணம் பல நாட்களாகியும் அவன் ஐயம் நீங்கவில்லை. ஆறு மாதங்களுக்குப் பின்னர் ஒரு நாள் அவன் மீண்டும் தன் ஐயத்தை எடுத்துரைத்து ஞானியிடம் விளக்கம் கோரினான். அவர் கூறினார்: 'கோழி போலிருப்பான்; கொக்கைப் போலிருப்பான்; உப்பைப்போலிருப்பான்; உன்னைப் போலிருப்பான்!' என்றார். ஞானியார் கூறிய பதில் ஏதோ புதிர் போடுவது போல் இருந்தது. உண்மையான பாகவதன் இப்படியெல்லாமா இருப்பான்? என்று நமக்கே வியப்பாக இருக்கிறதல்லவா? இதோ ஞானியார் தந்த விளக்கம்: 'கோழி குப்பையைக் கிளறிக் கொண்டே இருக்கும்; தனக்குத் தேவையான தானியம் கிடைக்கும் வரை. கொக்கு சின்ன மீனைப் பிடிக்காமல், பெரிய மீனுக்காகப் பொறுமையோடு காத்திருக்கிறது. பொன்னும் மணியும் கொடுப்பதாக இந்திரன், வருணன், குபேரன் முதலிய சில்லறைத் தேவதைகள் ஆசை காட்டினாலும் லட்சியம் செய்யாமல் பகவான் அருள்தான் வேண்டும் என்ற பெரிய லட்சியத்துக்காகக் காத்திருப்பான். அறுசுவையில் உப்பு முக்கியமல்லவா? பக்தன் எங்கு இருப்பினும் உப்பைப் போல் சிறப்பிடம் பெறுவான். ஆறு மாதங்களாகியும் உண்மையை அறிந்தே தீருவது என நீ பிடிவாதமாக இருக்கிறாயே—அப்படித்தான் உண்மையான பக்தனும் இருப்பான்.'

(ஓர் உபன்யாசத்தில் கேட்டது) — 'பாணன்'

அதற்கும் போட்டி



இரண்டாவது உலக மகாயுத்தத்தின்போது, இத்தாலியில் எல்லா உணவுப் பொருள்களுக்கும் திண்டாட்டமாகி விட்டது. ஒவ்வொரு பொருளையும் 'க்யூ'வில்தான் நின்று வாங்க வேண்டியதாக இருந்தது. இதனால் முசோலினியின் ஆட்சியில், பலருக்கு வெறுப்பு உண்டாயிற்று.

ஒரு நாள் ஒரு தொழிலாளி தன் மனைவியை நோக்கி, ''நான் சீக்கிரம் வேலைக்குப் போகவேண்டும், ரொட்டி கொண்டுவா!'' என்றான்.

''வெண்ணெய் இல்லே. வேலைக்காரி கடைக்குப் போய் ஒரு மணி நேரத்துக்கு மேலாகிறது. இன்னும் க்யூவிலேயே நிற்கிறாள் போலிருக்கிறது'' என்றாள் அவள்.

அவள் சொன்னதைக் கேட்டதும் அந்தத் தொழிலாளிக்கு அளவு கடந்த சினம் உண்டாயிற்று.

''அவனைத் தொலைத்துவிட்டு மறு காரியம் பார்க்கிறேன்'' என்று கையில் ஒரு துப்பாக்கியை எடுத்துக் கொண்டு கிளம்பினான்.

''எங்கே? யாரைத் தொலைக்கப் போகிறீர்கள்?'' என்று கேட்டாள் அவள்.

''முசோலினியைத்தான். வேறு யாரை?'' என்று சொன்னான் அவன்.

சற்று நேரம் கழித்து அவன் திரும்பிவந்தான்.

''என்ன அவனைச் சுட்டுவிட்டீர்களா?'' என்று கேட்டாள் அவள்.

''இல்லே. அவனைச் சுடுவதற்கும் அங்கே ஒரு நீண்ட 'க்யூ' காத்துக் கொண்டிருக்கிறது!'' என்றான் அந்தத் தொழிலாளி.

-என். ஆர். மோகன்

சொல்லும் செயலும்!



ஒரு பெரிய அறிஞர்; சுமாரான செல்வம் படைத்தவர். அழகு, அறிவு, கல்விநலம் இல்லாத ஒரு பெண்ணை மணந்தார். ஐந்து குழந்தைகளுக்குத் தந்தையானார். போதிய பணமிருந்தும் குழந்தைகளை வளர்க்கப் பொருள் செலவழிக்க விரும்பவில்லை அந்த ஆசாமி. என்ன செய்தார் தெரியுமா? ஒவ்வொரு குழந்தையையும் அநாதை விடுதி வாசற்படியில், யாருக்கும் தெரியாமல் வைத்து விட்டு வந்து விட்டார்! இவர் யார் தெரியுமா?

தத்துவ ஞானியும் பிரெஞ்சு மேதையுமாகிய ரூஸோ என்னும் இந்த விந்தை மனிதர்தான் பிற்காலத்தில் "குழந்தை வளர்ப்பு" என்னும் நூலையும் இயற்றி வெளியிட்டார்.

தகவல்: சிவசக்தி

தீர்ப்புக் கூற முடியுமா?

கிரீஸ் தேசத்தில் ஆசிரியர் ஒருவர் 'வாதாடுவது எப்படி?' என்பதைப் போதிப்பதற்கு ஒரு கல்விக் கூடமே நடத்தி வந்தார். ஏராளமான மாணவர்கள் அதில் படித்து வந்தார்கள். அதனால் அந்த ஆசிரியருக்கு நல்ல பெயரும், வருமானமும் இருந்தன.

அங்கு என்ன போதிக்கப்பட்டது தெரியுமா? இல்லாததை இருப்பது போல் நிரூபிப்பது எப்படி, நடந்ததை நடக்காதது போல் ஜோடிப்பது எப்படி, நடக்காததை நடந்தது போல் புனைவது எவ்வாறு? என்பன போதிக்கப்பட்டன.

அதில் படித்து வந்த மாணவன் ஒருவன், அப்பள்ளிக்குக் கட்ட வேண்டிய தொகையைக் கட்டாமலேயே 'டிமிக்கி' கொடுத்துவிட்டான். சும்மா விடுவாரா ஆசிரியர்? மாணவன் மீது வழக்குத் தொடர்ந்தார். மாணவனும், ஆசிரியரும் நீதிமன்றத்தில் எதிர் எதிரே நின்று வாதாடினர்.

மாணவன் கூறினான்: "நான் கட்டணம் கட்டப் போவதில்லை. ஏனெனில் எனக்குச் சாதகமாகத் தீர்ப்பு இருக்குமேயானால் நான் தொகையைச் செலுத்த வேண்டாம். என் எதிரிக்குச் சாதகமாகத் தீர்ப்பு இருந்தால் நான் வாதாடுவது தப்பு என்று ஆகும். அதாவது ஆசிரியர் எனக்குச் சரியாக வாதாடும் கலையைக் கற்பிக்கவில்லை என அர்த்தமாகிறது. ஆகவே நான் தொகையைச் செலுத்த வேண்டியதில்லை."

ஆசிரியர் வாதாடினார்: "நீதி எப்பக்கமாயினும் சரி, எனக்கு என் தொகை கிடைக்க வேண்டும். என் பக்கம் தீர்ப்பு என்றால், நான் பணம் பெற்றுக் கொள்வேன். என் எதிரி பக்கம் தீர்ப்பானாலும், அவன் வென்று விட்டான் என்று அர்த்தமாகும். அவன் வென்றதற்குக் காரணம் நான் அவனுக்குக் கற்



பித்த கலை. ஆகவே, அவன் கட்டணம் கட்டாயம் கட்டியாக வேண்டும்."

நீதிபதி குழம்பினார். தீர்ப்புக் கூறவில்லை. உங்களால் முடிந்தால் சொல்லுங்கள்.

அனுப்பியவர்: ஜி. எஸ். என்
ஆதாரம்: 'கிரீக் ஆரடரி'

காந்திஜி தென்னாப்பிரிக்காவில் ஜோகானிஸ்பர்க்கில் 1908ம் வருஷம் ஜனவரி 30ந் தேதி இரவு இவ்விதம் கூறினார்:

"உலகத்தில் பிறந்தவர்கள் எல்லோருக்கும் மரணம் உண்டு. வியாதியினாலோ முதுமையினாலோ இறப்பதைக் காட்டிலும் சகோதரன் ஒருவனுடைய கையினால் கொல்லப்பட்டு இறப்பது மேலானது. அதற்காக வருத்தப்பட வேண்டியதில்லை. அப்படி என்னைக் கொல்ல வரும் சகோதரனிடத்திலும் கோபமோ துவேஷமோ கொள்ளாமல் நான் இறந்தேனானால், அதுவே நான் பெறக் கூடிய பெரும் பேறாகும். அதுதான் என் ஆத்மாவுக்கு நற்கதி அளிக்கும். என்னைக் கொல்லும்பொருட்டுத் தாக்கிய சகோதரனும் பிற்காலத்தில் கட்டாயம் நான் குற்றமற்றவன் என்பதை உணர்ந்துகொள்வான்."



காந்தி மகானின் வாக்கு நினைக்கவும் பயங்கரமாயிருக்கும் முறையில் நாற்பது வருஷங்களுக்குப் பிறகு பலித்து விட்டது! அவருடைய மனோரதம் நிறைவேறி விட்டது! சரியாக நாற்பது வருஷங்களுக்குப் பிறகு, 1948ம் வருஷம் ஜனவரி 30ந் தேதி மாலை காந்தி மகான் அவருடைய 'சகோதரன்' ஒருவனுடைய கையினால் இறக்கும் பெரும் பாக்கியத்தை அடைந்தார்.

பேராசிரியர் கல்கி எழுதிய 'மாந்தருக்குள் ஒரு தெய்வ'த்திலிருந்து பெயர்த்து எழுதியது: க. பஞ்சாபகேசன்.

ஒருத்தியின் பெயர் ராதா; மற்றொருத்தியின் பெயர் தாரா. அவர்களைப் பற்றிய கதை இது.

ஒரு சின்ன எழுத்தின் இடப் பெயர்ச்சி அவர்களின் பெயர்களை மட்டுமல்ல வாழ்வைக்கூட மாற்றிவிட்டதோ!

ஏதோ ஓர் அபூர்வ ஒற்றுமை இருப்பது போல் தொனிக்கும் பெயரில் எத்தனை வேற்றுமை இருக்கிறது! ராதாவும் தாராவும் உருவத்தில் உள்ளத்தில் வட துருவமும் தென் துருவமுமாக இருந்தார்கள். ராதாவைப் பார்த்தால் உங்கள் கண்கள் விரியும். தாராவைப் பார்த்தால் சுருங்கும். இவளுடைய சிரிப்பு அவளிடம் இல்லை. அவளுடைய அந்தச் சின்னக் கண்களில் எந்த நேரமும் கசியும் துயரம் இவளிடம் இல்லை.

மன்னியுங்கள். அவர்கள் யார் என்பதைச் சொல்லாமல் வர்ணனையில் இறங்கிவிட்டேன். சென்னை சென்ட்ரல் ஸ்டேஷனிலிருந்து பம்பாய்க்கும் கல்கத்தாவுக்கும், டெல்லிக்கும் தடதடவென்று அலறிப் புடைத்துக் கொண்டு



சிறப்புச் சிறுகதை

பாலை நினைவு

ஏ.எஸ்.ராகவன்

ஓடும் துரித வண்டிகளில் ஏதாவதொன்றில் இந்த இரட்டையரை நீங்கள் காணலாம். அவர்கள் பிச்சைக்காரர்கள்!

"பாபு, தர்மம் போடுங்கோ, பாபு.... காலணா, ரேணு, பாபு.... குச் குச் தர்மம் தீஜியே பாபு...."

இந்தக் குரல் பத்து வருடங்களுக்கு முன் என் காதில் விழுந்தபோது முதலில் என் கண்ணில் பட்டவள் ராதாதான். அப்போது அவளுக்கு எட்டு வயது இருக்கலாம். ஆனால் அப்போதே அசாத்திய அழகு.

"காலணா, ரேணு, பாபு.... குச் குச் தர்மம், பாபு..."

உடைந்த தமிழும் இந்தியும் உறவாடின அவளிடம். 'ரேணு' என்பது அரையணாவின் திரிபு என்று புரிந்து கொண்டேன். சட்டைப் பைக்குள் கையை விட்டு ஒரு விக்டோரியா தலை பொறித்த வெள்ளி நாலணா நாணயத்தை அவளுடைய அலுமினியக் குவளையில் போட்டேன். காது கண்ணை நோக்கி நீளுமோ என்னவோ. அவள் முகத்தில் அந்தபாவம் தெரிந்தது.

"ஸலாம், பாபு! நீங்க நல்லா இருக்கோணும், பாபு..."

"உன் பெயர் என்ன?"

"ராதா ... ராதா ராணி!"

குவளையை ஆட்டிக் கொண்டு அவள் போய் விட்டாள்.


தொடர்ந்து இரண்டாமவள் வந்துவிட்டாள் — தாரா! முதலவளைப் பார்த்த கண்களைக் கழுவிக் கொண்டு பார்க்க வேண்டும் அவளை. அத்தனை அவலட்சணம். வலது கை பாதியளவுதான் இருந்தது. முழங்கையோடு சரி. அந்த இடத்தில் ஆறு

விரல்கள் முளைத்து நெளிந்தன. முகத்தில் இரண்டு முடிச்சுகள் வேறே.

''ஸத்வ குண போத்தன்.... சரண மிருக்க....'' என்று பாட்டுப் பாடிக்கொண்டு வந்தான் அவன். கீச்சுக் குரல். இசையோடு சம்பந்தமில்லாத புலம்பல். வார்த்தைகளின் அப்பட்டமான துஷ்பிரயோகம் வேறே.

''தர்மம், பாபு கையில்லாத முடம் பாபு... கருணை செய்யுங்கோ, பாபு...'' என்றான்.

என் கை சட்டைப் பைக்குள் போக மறுத்து விட்டது. ஆனால் நான் உட்கார்ந்திருந்த அந்த வரிசையில் எல்லோர் கைகளும் நீண்டன. லொட், லொட் என்று தவலைக்குள் விழுந்த நாணயங்கள் அவனுக்கு நல்ல வசூல் என்பதை என் அதர்ம சிந்தனைக்குச் சவாலாகக் காட்டிவிட்டன. எனக்கு அவமானமாகக்கூட இருந்தது. அவனை ஏறிட்டு நான் பார்க்கவில்லை.



துரித வண்டியானதால் ஒரு ரயில் நிலையத்தை விட்டால் அடுத்த ஊர் போய்ச் சேர முக்கால் மணி நேரமாகும். ராதாவும் தாராவும் பத்து நிமிடங்களில் 'போணி' முடித்து விட்டு நடை பாதையில் கணக்குப் பார்த்து முடித்துவிட்டுக் கும்மாளமாகப் பேச ஆரம்பித்து விடுவார்கள்.

''ஏய், இங்கே வா...'' என்று ராதாவை அழைத்தேன்.

அவன் வந்தான்.

''அது யார் அந்தப் பொண்ணு?'' என்று கேட்டேன்.

''அவள்தான் பாபு, தாரா...''

''தாரா ராணியா?''

''ஊஹூம்... வெறும் தாரா.''

அதானே கேட்டேன்? அவள் எப்படி இவனைப்போல் ராணியாக முடியும்? இரண்டு பேரும் சகோதரிகள் அல்லவாம். ஒரே இனத்தைச் சேர்ந்தவர்கள்.

''வசூல் எவ்வளவு கிடைத்தது?''

''ஓர் ரூபா, பாபு.''

''அவளுக்கு?''

''ரெண்டு ரூபா சில்லர், பாபு.''

''உன்னைவிட அதிகமா?''

''ஆமா... எப்பவுமே அவளுக்கு ஜாஸ்திதான் பாபு...'' ராதாவின் குரலில் ஏக்கம் தொனித்தது.

''இந்தா ஒரு ரூபா... இப்போ கணக்கு சரியாயிட்டுதா?'' என்றேன் ஒரு ரூபாயை எடுத்து நீட்டி.


அவன் தயங்கினான். ஏற்கனவே நாலணா போட்ட பைத்தியக்காரன் நான். மேலும் ஒரு ரூபாயா? நிஜமாகவா?

''பரவாயில்லே... பிடி...''

அவன் வாங்கிக் கொண்டு ஓடினான். அந்த இரட்டை முடிச்சு என்னை விழுங்கிவிடுவதுபோல் பார்த்தது. பின்னர் இரண்டு பேருமாக உரக்கச் சிரித்தார்கள். என்ன பேசினார்களோ, எனக்குச் சரிவரப் புரியவில்லை.

ஆனால் அத்தனை பிரயாணிகளில் என்னை அவர்கள் நன்றாக அடையாளம் கண்டு கொள்ள இந்த முதல் சந்திப்பு வழி செய்து விட்டது. 'ஏக் ரூபா பாபு' என்று எனக்கு நாமகரணம் செய்து விட்டார்கள் அவர்கள்.

ஒரு முறை ராதாவின் தாய் தகப்பனை நான் சந்தித்தேன். இந்த மாதிரி ஒரு பிரயாணத்தின் போது தான். தகப்பனின் தலையெல்லாம் செம்பட்டை பாய்ந்திருந்தது. கிழவியின் கன்னமெல்லாம் வெப்பு. வயதுக் காலத்தில்



''ஏன் சார் மனைவியின் போட்டோவை ஆபீஸ் மேஜை மேல் வைச்சிண்டிருக்கேள்?''

''வீட்டுக்குத் திரும்புகிற ஆவல் இல்லாமல் ஆபீஸிலேயே இருந்து வேலையைக் கவனிக்க போட்டோ உதவியா யிருக்கு!''

அவளும் ராணியாக இருந்திருப்பாள் என்பதன் சின்னமாக அந்தச் சிவப்பு இப்போது ஒளிர்ந்தது. இடுப்பிலிருந்து தரையில் புரளும் பெரிய பாவாடை. சண்டை போடுகிற மாதிரி எந்த அகராதிக்கும் அடங்காத ஒலி மயமான, ஒரு பேச்சு மொழி. இழவனின் குரலும் கணீரென்று இனம்புரியும். அடிக்கடி நடைபாதையில் ஒரு கூப்பாடோ, முறையோ என்கிற வாதப் பிரகடனம் பாயும். யாருக்கும் எதுவும் புரியாது. அடக்கினாலும் அடங்காத வர்க்கமாக அவர்கள் இருந்தார்கள்.

''உன் அம்மாவா அது?''

''ஹாங், பாபு... மேரி மா.''

''எதுக்காகச் சண்டை போடுகிறாள்?''

''சண்டை இல்லே பாபு, சமாதானம்!'' ராதா சிரித்தாள்.

அனுமினியக் குவளையைக் கவிழ்த்துக் கணக்குப் பார்த்தார்கள். 'ஸத்வ குண போதனு'க்கு வழக்கம் போல் அதிகம் சேர்ந்ததோ என்னவோ, இழவி கையை வீசிக்கொண்டு எழுந்து வந்து ராதாவின் தலையில் ஓங்கி ஒரு குட்டுக் குட்டினாளே, பார்க்க வேண்டும். எனக்குத் தலை வலித்தது. வாஸ்தவமாக எனக்கு ராதா மாதிரி ஒரு பெண் இருந்தால் அவளைத் தலையில் குட்டமாட்டேன். கவாமி சத்தியமாக மாட்டேன். தலையா அது? நெளி நெளியாக எத்தனை அழகான கூந்தல்! நடு வகிடிட்டு அதுபின்புறம் சரிகிற அழகேஅழகு!

''எதுக்காக அடித்தாள் உன் அம்மா?''

அவள் சிரித்தவாறே, ''அம்மா அடிக்காம சீராட்டுவாங்களா, பாபு?'' என்றாள்.

''காரணம் இல்லாம அடிக்கலாமா?''

''நான் நல்லாப் பிச்சை கேக்கலேன்னு அம்மாக்குக் கோபம்....!''

''ஏக் ரூபா வேணுமா?''

''குடுங்கோ, பாபு.... நீங்க வளக்கமா தர்ற ரூப்யாதானே, பாபு? அம்மா சிரிப்பா சந்தோஷமா, பாபு.''

நான் கொடுத்தேன். ''ராதா, பிச்சை எடுப்பதே தொழிலாக இருக்கலாமா? நீ இப்போது வளர்ந்து விட்டாய்!'' என்றேன்.

அவள் சிரித்தாள். ''வளர்ந்தால் என்ன, பாபு? பிச்சை எடுக்கிற தொழில் சுலபம் இல்லையா?'' என்று கேட்டாள்.

''சுலபமான தெல்லாம் நல்லதாகவும் இருக்க வேண்டுமே!''

அவள் சற்று நிதானித்து என்னையே உற்றுப் பார்த்தாள். நான் கொடுத்த ரூபாயை இன்னமும் அவள் குவளைக்குள் போடவில்லை. ஏனோ? அவளுக்கு அந்த ரூபாய் கனத்ததாகத் தோன்றிற்றோ?

''என்ன யோசனை?''

''ஒன்றுமில்லே.....!''

அவள் போய் விட்டாள்.

இழவி காசை வாங்கிக் கொண்டு என்னை ஒரு முறை பார்த்தாள். அவள் பார்த்தது போதாதென்று, இழவன் வேறு எட்டிப் பார்த்தான். எனக்கு உள்ளூறச் சங்கடமாகத்தான் இருந்தது.

நடைபாதையில் மீண்டும் ஒரே இரைச்சல்! ராணி அழுது கொண்டே வந்தாள்.

''ஏன்? என்ன நடந்தது?'' என்று விசாரித்தேன்.

''நான் துக்கிரியாம். அம்மா திட்டறா!'' என்றாள்.

''காசுதான் சேர்ந்து விட்டதே!''

''அது போதுமா? எப்பவுமே நீங்கள் வந்து ஒவ்வொரு ரூபாய் தரப் போறீங்களா, பாபு? நானும் தாரா மாதிரி இருந்தால் எவ்வளவு நல்லா இருக்கும்!''

''அட, கடவுளே, இது என்ன நினைப்பு? உன் அழகைப் பார்த்துச் சந்தோஷப் படாமல்.....!''

''அழகு எதுக்கு பாபு? அது அழிஞ்சு போகும். என் அம்மாகூட அழகாகத்தான் இருந்தா. இப்போ பாருங்கோ, தொந்தியும் தொப்பையுமா இருக்கா! அழகு சோறு போடுமா?''

இந்த வாதம், இந்தப் பொருளாதார விவரணை எனக்குப் புரியத்தான் இல்லை. நான் சாதாரண உலகத்துச் சாமானிய மனிதன். அவளுடைய பிச்சைக்கார உலகத்தின் நியதி வேறு போல் இருக்கிறது. அங்கு அழகு ஒரு துர்ப்பாக்கியம். அது பலர் கண்ணுக்கு விருந்தாகுமே தவிர, பலரின் கருணையை வரவழைக்காது.

நான் ஏதும் சொல்லவில்லை.

பெரிய பாவாடை தரையில் உரச, உரச ராதா போய் விட்டாள். ஆம்! இப்போது அவளும் குலச் சின்னமாக அந்தப் பாவாடையைத் தரிக்கத் தொடங்கிவிட்டாள். அழகின்



ஏன் இத்தனை அலுப்பு ?

உடல் நலமும், சக்தியும் பெற உங்கள் குழந்தைக்கு

க்ளூகோவிடா கொடுங்கள்.

பால், பருகும் நீர், பழரசம் எதிலாவது ஒரு ஸ்பூன் அளவு க்ளூகோவிடா கலந்து கொடுங்கள். கால்ஷியமும், வைடமின் டி யும் செறிந்த தூய க்ளூகோஸ் பவுடர்தான் க்ளூகோவிடா. விரைவில் சக்தியைத் தருகிறது. பிணியாறுபவர்களுக்கும் சாலச் சிறந்தது.

கார்ன் பிராடக்ட்ஸ் கோ.(இந்தியா) பிரைவேட் லிட்.



SHBI-CP-50 TAM

தெளிவுகளை அந்த உறை வெகுவாய் மறைத்து விட்டதென்னவோ வாஸ்தவம். ஆனால் அது கூட ஒரு வகையில் சரியான ஏற்பாடுதானோ?

அடுத்த முறை ராதாவை நான் சந்தித்த போது அவள் முகம் ஏக்கத்தால் வாடியிருந்தது.

''தாராவுக்குக் கல்யாணம் நடக்கப் போகிறது, பாபு!'' என்றாள்.

''அப்படியா? சந்தோஷம். அந்த நொண்டிப் பொண்ணை எவன் கல்யாணம் செய்து கொள்ளச் சம்மதித்தான்?'' என்று கேட்டேன்.

''க்யா, பாபு? அவளுக்கு என்ன குறைச்சல்?'' என்றாள் ராதா.

''போகட்டும். உனக்கு எப்போது கல்யாணம்?''

''எனக்குக் கல்யாணம் நடக்காது பாபு!''

''ஏன்?''

''நான் அழகாக இருக்கேனே புரியவில்லையா, பாபு?''

''புரியல்லேம்மா.... பெண்கள் அழகாய் இருந்தா புருசன் ஆசைப்பட்டுக் கல்யாணம் சீக்கிரம் ஆகும். அதுதான் எனக்குத் தெரியும்.''

''உக்கும்.....!'' என்று முகத்தை வலித்தாள் ராதா. ''நான் அழகா யிருக்கிறது அம்மாக்குப் பிடிக்கல்லே. அப்பாக்குப் பிடிக்கல்லே....!''

''அதுதான் தெரிந்ததாயிற்றே! உனக்கே பிடிக்க வில்லையா, அதைச் சொல்லு....!''

''ஆமாம், பாபு! எனக்கே பிடிக்கவில்லே.''

நான் அதிர்ந்து விட்டேன். பொருளாதாரக் கல்யாணம் ஒருபுறமிருக்க, ஒரு பெண்ணின் மனத்தில் தன் அழகு பற்றிய பெருமை கூட இராதென்பது ஆச்சரியமாக இருந்தது.

''என் அழகுக்காகத்தானே பாபு, என்னைக் கல்யாணம் செய்து கொள்ள ஆசைப்படுவாங்க?.... அழகு போயிட்டா, அப்புறம்?''

இந்தக் கேள்விக்கு என்ன பதில் சொல்வது?

''ஆண்களை நம்பக்கூடாது, பாபு! அழகுக்காக ஒருத்தன் என்னைக் கல்யாணம் செய்து கொண்டால், நாளைக்கு என்னைவிட அழகி ஒருத்தியைப் பார்த்தா, அவ பின்னாலே ஓடி விடுவான். இல்லையா?''

அடேயப்பா! என்ன அற்புதமான வாதம்! ஒரு வேளை அவள் நினைப்பதுதான் சரியோ? நம்மிடையேகூட கல்யாணங்களெல்லாம் பொருளாதார மயமாகத்தாமே ஆகிவிட்டன. கவர்ச்சியின் அடிப்படையில்தான் எல்லாமே நடக்கிறதோ!

''இதோ பார், ராதா! எதுவுமே நிலையில்லே. அழகு உட்படத்தான். அதற்காக, வாழ்வில் ஒரு பிடிப்பு, ஒரு ரசனை வேண்டாம் என்பாயா? எல்லாப் பெண்களுமே கிழவிகளாகப் போகிறவர்கள்தான். அதற்காக யாரும் கல்யாணம் வேண்டாம் என்று சொல்வதில்லே....!'' என்றேன்.

அவள் சிரித்தாள்.

'ஏக் ருபா பாபு'வுக்கு வாதத் திறமை குறைவு என்று அவள் முடிவு கட்டியிருக்கலாம். அந்தச் சிரிப்பு அதைத்தான் எனக்கு உணர்த்திற்று.



ஒருவர்: கடவுளே! ஊரில் ஒரு பொட்டுத் தண்ணி கூட இல்லாமல் நீங்கள் அருள் புரிய வேண்டும்....!

விவசாயி: யோவ்! யாரய்யாது நீ? ஏனய்யா அப்படி வேண்டிக்கிறே?

முதல்வர்: அப்பவாவது சினிமாவில் ஆபாச நீச்சலுடைக் காட்சி ஒழியாதா என்ற நோக்கத்தில்தான்!

எது எப்படியாயினும் அந்த அழகு பாலைவனத்து நிலவாக வீணாவது எனக்குச் சம்மதமில்லை. அழகைத் தந்து பொருளாதாரத் தாழ்மையில் தள்ளுகிற இறைவனின் வேடிக்கை விளையாட்டுக்கு அளவில்லை. செல்வச் செழுமையில் காளானை முளைக்க விடுகிறான் கடவுள். 'முடிக்கப் போடேன், பார்க்கலாம்' என்று மனிதனுக்குச் சவால் விடுவது போல.

அட, மனிதன்தானாகட்டும். எத்தனை நாகரிகத்தைக் கண்டவன், எத்தனை கலாசாரமென்றும், பண்பாடென்றும் வாய் கிழியப் பேசுகிறானே அவனும்தான்—பணத்தைக் கொண்டல்லவா பெண்ணையும் எடை போடுகிறான்!

இதிலே ராதாவைக் குறை சொல்ல நான் யார்?

அடுத்த முறை அவளை நான் சந்தித்த போதும் அவள் சிரித்தாள். வெறும் சிரிப்பல்ல. வெற்றிச் சிரிப்பு.

நான் தலையைக் கவிழ்த்துக் கொண்டேன்.


''காலணு, ரேணு பாபு.... கைகால் இல்லாத முடம், பாபு.... தர்மம் போடுங்கோ பாபு..... குச் குச்......!''

அவளுடன் வந்தவனைப் பார்த்தேன். கை, கால் இல்லை.

ஹாங்.... ராதாவுக்குக் கல்யாணம் ஆகிவிட்டது! என்ன பயங்கரம்!.... ஆனால் என்ன ஆச்சரியம்!

மனம் போல...

'எல்லார்வி'



கூடத்தில் கிடந்த சாய்வு நாற்காலியில் சாய்ந்தபடி மனத்தின் பூரிப்பிலே லயித்திருந்தான் நடராஜன். விஜயமும் கௌரியும் பட்டாம்பூச்சிகளைப் போல் சுறுசுறுப்பாக இயங்கிக் கொண்டிருந்தார்கள். அவர்கள் மாறி மாறியும், சேர்ந்தாற்போல் ஒரே நேரத்திலும் அவன் பார்வையில் பட்ட வண்ணம் இருந்தார்கள்.

இருவருக்கும் இடையே பிராயத்தில் மூன்று ஆண்டுகள் வித்தியாசம். என்றாலும் கௌரியின் வாளிப்பான உடல் வளர்ச்சி விஜயத்தின் தோற்றத்துக்கு ஈடு கொடுப்பதாக இருந்தது. அலங்காரம் முதலிய ஏனைய எல்லா அம்சங்களிலும் அவர்கள் இரட்டைப் பிறவிகள் போன்று இருந்தனர். இருவரும் சிரித்த முகத்துடனும் கலகலப்பான பேச்சுடனும் வளைய வந்து கொண்டிருந்த காட்சி நடராஜனை மகிழ்ச்சியில் ஆழ்த்தியது.

கௌரியைப் 'பெண்பார்க்க' வருகிறார்கள். காலை வேளைதான் தங்களுக்குச் சௌகரியம் என்றார்கள். அதனால் விஜயம் முதல் நாளிலிருந்தே திட்டம் போட்டு, அதிகாலையில் துயில் எழுந்து வீட்டின் தோற்றத்தைச் சீர் செய்து, கௌரியைக் கவர்ச்சிகரமாகச் சிங்காரித்து, தானும் ஏற்ற வண்ணம் உடுத்திக்கொண்டு, உரிய நேரம் அணுகியதும், சிற்றுண்டி வகைகளைத் தயாரித்து, பார்த்துப் பார்த்துச் செய்யலானாள். அவளது அக்கறையும், செயலின் விதரணையும் நடராஜனின் உள்ளத்தை நெகிழ வைத்தன.

....சென்ற ஆண்டு இதே நாளில் இந்த விஜயத்தை நான் 'பெண் பார்க்க'ப் போனேன். அதே விஜயம் இன்று கௌரியின் தாயாக இந்தச் செயலை நிறைவேற்றுகிறாள். இன்றென்ன! கடந்த நாலைந்து மாதங்களாக நன்கு பழகிப்போன ஒரு செயலாக இது ஆகிவிட்டது. 'ஒப்புக்கு', 'பிறர் திருப்திக்கு' என்றால் அது எப்படியும் தெரிந்துவிடுமே! கடந்த ஓராண்டில் இவள் கௌரியிடம் செலுத்திய அன்பு!.... சில சமயங்களில் கௌரி சிடுசிடுத்துச் சீறுமாறென்ற போதுகூட இவள் சிரித்த முகமும் இனித்த மொழிகளுமாய்ச் சமாளித்த அழகு! வயது வந்த பெண் உடன் இருப்பதை எண்ணி என்னிடம் எவ்வளவு எட்டி இருந்து, எத்தனை கௌரவமாக உறவாடி வருகிறாள்!... எத்தகைய உயர்ந்த பண்பு!... நான் மிகுந்த பாக்கியம் செய்தவன்! உலகில் மூத்தாள் கூறு, இளையாள் கூறு என்று என்ன என்னவோ விரும்பத் தகாத நிகழ்ச்சிகள் உண்டு. இளையதாரமாக வாய்ப்பவர் எல்லாருமே என் விஜயத்தின் தரத்தில் இருந்தால்....!'

விஜயம் ஏதோ காரியமாகத் தாழ்வாரத்தின் பக்கம் சென்றாள். நடராஜன் அவளை அழைத்தான். அவள் அருகே வந்ததும் எதுவுமே பேசாமல் அவள் முகத்தையே உற்றுப் பார்த்தான். ஓட்டமும் நடையுமாக அலுவலில் ஈடுபட்டிருந்த விஜயம் எடுத்துச் செருகிய புடவையும், கையில் பிடித்த கரண்டியுமாய் முகத்தில் வேர்வை மணிகள் மின்னத் தங்கச் சிலை போல் நின்று அவனை ஏறிட்டுப் பார்த்தாள். பார்வையில், 'என்ன?' என்ற கேள்வி பளிச்சிட்டது.

''விடிந்ததிலிருந்து பார்க்கிறேன். தேவியின் கடாட்சம் என் பக்கம் திரும்பவே மாட்டேன் என்கிறதே!... இந்தச் சின்னக் காரியத்துக்கே இப்படியென்றால் நாளை திருமணம் நடைபெறுகிறபோது...''

அவன் பதில் ஒன்றும் சொல்லவில்லை; முறுவலித்தான். பேசிக் கொண்டே அவன் மெல்ல அவள் கரத்தைத் தீண்டினான். 'ஸ்...ஸ்...ஸ்...' என்று அவள் பின்வாங்கி நடந்தாள்.

கடிகாரம் ஒலித்தது. நடராஜன் நிமிர்ந்து உட்கார்ந்தான். வாசலில் டாக்ஸி வந்து நிற்கும் சத்தம் கேட்டது. அவன் எழுந்து விரைந்து நடந்தான்.

அழகும் கம்பீரமுமே உருவான வாலிபனும், அவன் தங்கையும், அவர்கள் பெற்றோரும் உள்ளே வந்தார்கள். நடராஜன் அவர்களை வரவேற்று அமரச் செய்தான். பிறகு உட்புறம் சென்றான். அங்கே விஜயம் கௌரியை அழகுபடுத்தித் தயார் செய்து கொண்டிருந்தாள்.

''...முதலில் அம்பாளுக்கு நமஸ்காரம் செய். பதவிசாக நடந்து போ. முதலில் பெரியவர்களுக்கும் பிறகு அவருக்கும் அடக்கமாக நமஸ்காரம் செய். அவர்கள் தாம்பூலத் தட்டைத் தந்தால் கை நடுங்காமல் வாங்கி, கீழே விழுந்து விடாமல் எடுத்து வா. பாடச் சொன்னால் கூடத்தில் அமர்ந்து அமரிக்கையாகப் பாடு.''

கௌரி சிரித்தாள். ''அநேகமாக எல்லாம் நெட்டுருவாகிவிட்டது சித்தி!'' என்றாள்.

விஜயமும் சிரித்தாள். ''இருந்தாலும் ஒவ்வொரு தடவையும் வெவ்வேறு மனிதர்கள் அல்லவா?'' என்றாள்.

நிலையருகில் நின்று செவியேற்ற நடராஜனின் உள்ளம் பெருமிதத்தால் விம்மிற்று.

''இதோ பார், ஒரே பார்வை — அதிலேயே வரனாக வந்திருப்பவரை நீ எடை போட்டுக்கொண்டு விட வேண்டும்! அப்புறம் விழிக்கக் கூடாது!... தெரிந்ததா?''

'அடி கள்ளி!...' என்று மனத்துக்குள் சொல்லிக் கொண்டான் நடராஜன். 'ஆம். அன்று அப்படித்தானே நீ என்னைப் பார்த்தாய்!... படுபோக்கிரி!...'

கௌரி மெல்ல நடந்து அவர்கள் இருந்த இடத்தை அடைந்தாள்; பெரியோர்களைப் பணிந்தாள். தாம்பூலத் தட்டுடன் திரும்பி வந்தாள். பின்னர் கூடத்தில் அமர்ந்து பாடத் தொடங்கினாள். நடராஜனும் விஜயமும் சிற்றுண்டி வழங்கலானார்கள்.

நடராஜன் அவர்கள் நடுவே நின்று பேசிக் கொண்டிருந்தான். விஜயம் இனிப்பு வழங்க வந்தாள். நிலையைக் கடந்து அவள் அடி எடுத்து வைத்த அதே நேரத்தில் மூர்த்தி தலை நிமிர்ந்



தான். விஜயத்தின் கண்களும் அவன் கண்களும் கலந்தன.

அவளால் நிலைமையைச் சமாளிக்க முடியவில்லை. தடுமாற்றம் குறுக்கிடவே, முன் வைத்த காலைப் பின்வாங்கினாள்.

நடராஜன் இந்தக் காட்சியைக் கண்டான். ஆனால் ஒன்றும் புரியாமல் திகைத்தான். "ஏன்? என்ன? பரிமாறலாமே!" என்றான்.

விஜயம் சுதாரித்துக் கொண்டு அங்கே சென்றாள். குனிந்த தலை நிமிராமல் மளமளவென்று பரிமாறினாள்.

சிற்றுண்டி, காப்பிக்குப் பின் அவர்கள் உரையாடிக் கொண்டிருக்கையில் விஜயம் ஜாடை காட்டி நடராஜனை அழைத்தாள். அவன் வந்ததும் அவள் சொன்னாள்:

"அவர்கள் சம்மதம் தெரிவித்து உங்கள் சம்மதத்தைக் கேட்டால் அவசரப்பட்டு விடவேண்டாம். 'மனைவியையும் பெண்ணையும் கலந்து கொண்டு சொல்கிறேன்' என்று மையமாகச் சொல்லி அனுப்புங்கள்."

நடராஜன் திடுக்கிட்டு, அவளை நிமிர்ந்து பார்த்தான். "ஏன் விஜயம்?" என்று அவன் கேட்டு முடிப்பதற்குள், "காரணத்தை அப்புறம் சொல்கிறேன். விடைபெறக் காத்திருக்கும் அவர்களை வழியனுப்பிவிட்டு வாருங்கள்" என்றாள் அவள்.

அவன் குழம்பிய மனத்துடன் விருந்தினர் இருந்த இடத்துக்குச் சென்றான். அவர்கள் புறப்படத் தயாராக எழுந்து நின்றார்கள். எல்லாரும் பேசிக் கொண்டே டாக்ஸி ஸ்டாண்டை நோக்கி நடந்தார்கள்.

நல்லவேளையாக அவர்கள் விஜயம் கூறியது போல் தங்கள் கருத்தை உடனடியாக வெளியிட்டு, நடராஜனின் அபிப்பிராயத்தைக் கேட்டு அவனை இக்கட்டான நிலைக்கு உள்ளாக்கவில்லை. என்றாலும் அவன் உள்ளத்தில் அமைதி இல்லை.

விஜயம் சமையலில் ஈடுபட்டிருந்தாள். கௌரி அங்கே இல்லை. நடராஜன் ஒரே குறிக்கோளுடன் விஜயத்தை அணுகி, அவள் அருகே நின்றான். அவள் நிமிர்ந்து அவனைப் பார்த்து முறுவலித்துவிட்டு அலுவல்களைத் தொடர்ந்து கவனித்துக் கொண்டிருந்தாள்.

அவள் போக்கைக் கண்டு அவன் வியந்தான். "என்ன விஜயம்! நான் வந்து நின்று கொண்டிருக்கிறேன். நீ உன் பாட்டுக்கு அமைதியாக உன் அலுவல்களைச் செய்து கொண்டிருக்கிறாயே!" என்றான்.

"ஏன்? என்ன செய்ய வேண்டும்?" என்று கேட்டு அவள் சிரித்தாள்.

"என்ன செய்ய வேண்டுமா? ஒன்றுமே நிகழாதது போல அமைதியாகப் பேசுகிறாயே! ஏதோ சொல்கிறேன் என்றாய்; இப்போது என்னடா என்றால்..."

"கூடத்தில் போய் இருங்கள். இதோ கைக் காரியத்தை முடித்து அடுப்பைத் தணித்து விட்டு வருகிறேன்."

"கௌரி எங்கே?"

"கோடி வீட்டுப் பாட்டி கூப்பிட்டுவிட்டார்கள், 'பெண் பார்க்க' என்று செய்த அலங்காரத்துடன் காண ஆசையாக இருக்கிறது என்று; போயிருக்கிறாள்."

நடராஜன் கூடத்தை அடைந்த சிறிது நேரத்தில் விஜயம் அங்கே சென்றாள்.

"விளையாட்டு இருக்கட்டும் விஜி, இது ஆறாவது முயற்சி. ஒவ்வொரு வரனையும் நீ ஏதாவது நொண்டு சொல்லித் தட்டிக் கழித்துக் கொண்டே வருகிறாய். உன்னுடைய நோக்கம்தான் என்ன?" என்று சற்றுத் தீவிரமாகப் பேசினான் நடராஜன்.

"குழந்தை பொருத்தமான கணவனை அடைந்து, நல்ல இடத்தில் போய் நன்றாக வாழ வேண்டும் என்பதுதான். இது தவிர வேறு என்னவாக இருக்க முடியும் ஒரு தாயின் நோக்கம்?" என்று விஜயம் நிதானமாகச் சொன்னாள்.

"அற்ப குணமுடையவர்கள், பையன் அழகில்லை; படிப்புப் போதாது, அபார சம்சாரி, வருவாய் பற்றாது — இப்படி நான்கு வரன்களை ஒதுக்கினாய். எல்லா நல்லம்சங்களும் கூடிய இந்த வரனையும்—"

"நாலிலிருந்து ஆறுக்கு வந்துவிட்டீர்களே! நடுவில் ஐந்தாவது வரன் ஒன்று இருக்கிறதே! நான் அதைப் பற்றி ஒரு குறையும் சொல்லவில்லையே!..."

"ஆனால் அது நம் பொருளாதார நிலைமைக்கு ஒத்து வரவில்லையே! எவ்வளவு கெஞ்சியும் அந்தத் தஞ்சாவூர்க் கஞ்சப் பிரபுவின் மனம் இரங்கவே இல்லையே!"

"குழந்தையின் நல்வாழ்வைக் கருதினால் செலவு சற்று ஏறத் தாழத்தான் ஆகும். கடன் பட்டாவது...."

"எங்கே கிடைக்கிறது? யார் தருகிறார்கள்?"

"அப்பாவைக் கொண்டு ஏற்பாடு பண்ணச் சொல்கிறேன்."

"உன் அப்பாவே அந்தக் கடனை அடைப்பாரா?"

"முடிந்தால் செய்யக் கூடியவர்தான்."

"ஒத்த வயதில் மூத்தாள் பெண் இருக்க, நாற்பதை எட்டிக் கொண்டிருக்கிறவனுக்கு இளையாளாய்க் கொடுத்ததிலிருந்தே தெரியவில்லையா என்கிறாயா?"

"இதெல்லாம் இப்போது தேவையில்லாத வீண் பேச்சு!"

"அடேயப்பா! முகம் சிவந்து விட்டதே! இந்த மாம்பழக் கன்னத்துக்கு.... இந்தச் செம்மை...." அவன் அவள் கன்னத்தை மெல்லத் தடவினான். விஜயம் சட்டென்று அவனிடமிருந்து விலகிக் கொண்டு வாயிற்புறம் பார்வையை ஓட்டினாள். 'அடேயப்பா! எவ்வளவு ஜாக்கிரதை!' என்று எண்ணிக் கொண்டான் நடராஜன்.

"பண விஷயத்தில் இத்தனை கறாராக இருப்பவர்களிடம் போய்க் கௌரி என்ன சுகத்தைக் கண்டுவிடப் போகிறாள் என்கிறாய் நீ?"

"அப்படிச் சொல்லாதீர்கள். கறார் உள்ள இடத்தில்தான் மற்றச் சிறப்புகளும் நிறைந்திருக்கும்."

"மூர்த்தி விஷயம் அப்படி இல்லை. நீ அந்த வரனை ஏன் மறுக்கிறாய்? முன்பு கேட்டதற்குக் காரணம் பின்பு சொல்கிறேன் என்றாயே, என்ன அது?"

"பிரமாதமாக ஒன்றும் இல்லை."

"இனிப்பு வழங்க வந்தபோது நீ தடுமாறினாயே, ஏன்? மூர்த்தி நிமிர்ந்து பார்த்ததும் பின்வாங்கினாயே, ஏன்?"


ARYAN
ஆரியன்
டீ-லக்ஸ் மற்றும்
ஸ்டாண்டார்ட்
இவையிரண்டும்
தம்ப் க்ரிப்புடன்
கிடைக்கின்றன.
மிகவும் சிறப்பாகக் கழுவலாம்
நீண்ட காலம் உழைக்கும்
இந்தியாவில்
தலைசிறந்த
பிரஷ்கள்
ஆரியன்
ஷேவிங் பிரஷ்
Aryan
ARYAN TOOTH BRUSH

''அதனால்தான் அந்த வரன் வேண்டாம் என்கிறேன்.''

''அவனை முன்பே உனக்குத் தெரியுமா?''

விஜயம் 'ஆம்' என்று தலை அசைத்தாள்.

''நன்னடத்தை இல்லாதவனோ?''

''சேச்சே. அப்படி யெல்லாம் ஒன்றும் இல்லை!''

''பின் உன் இசைப்புக்கும், மறுப்புக்கும் காரணம்?''

''உங்களுக்கு முன் அவரை எனக்குப் பார்த்தார்கள்.''

''அதனால் என்ன? பல இடங்கள் முயலு வதும் ஓர் இடம் குதிர்வதும் சகஜம்தானே?''

''பணத் தகராறிலேதான் செயல் நின்று போனது.''

''அதனால் என்ன?''

''இவர் என்னைத் தனிமையில் சந்தித்து உறுதியோடு இருக்கும்படி கேட்டுக் கொண்டார்.''

''அதனால் என்ன?''

''அப்போது நான் ஆசிரியைப் பயிற்சியில் ஈடுபட்டிருந்தேன். பயிற்சிக் கூடத்துக்குப் போகிற வருகிற வழியில் நாலைந்து முறை தனிமையில் சந்தித்து 'எப்படியாவது என் பெற்றோர் மனத்தை மாற்றி விடுகிறேன், கொஞ்சம் அவகாசம் ஆகும். அதுவரை நீ பொறுத்திருக்க வேண்டும். நீ இல்லையேல் எனக்கு வாழ்வில்லை!' என்றார்.''

''அதனால் என்ன?''

விஜயம் அவனை ஊடுருவி நோக்கினாள். ''என்ன சொன்னாலும், 'அதனால் என்ன, அதனால் என்ன?' என்கிறீர்களே!...விழித்துக் கொண்டுதானே இருக்கிறீர்கள்?''

''இதற்கும் கௌரிக்கு அவனை நிச்சயிப்ப தற்கும் என்ன சம்பந்தம் விஜயம்?''

''அழகு வழிகிறது! என்னிடம் காதல் உறவாடியவரே இந்த வீட்டில் எனக்கு மாப் பிள்ளை முறையாக...''

''காதல் உறவா?... அப்படி... என்ன?..'' என்று நடராஜன் கண் சிமிட்டினான். ''இதை யெல்லாம் என்னிடம் சொல்ல உனக்கு எவ்வளவு நெஞ்சுத் துணிவு?''

''ஒரு வருஷமாக உங்களோடு பழகி வரு கிறேனே!... 'மானே, தேனே' என்று உளறி னால்தான் காதல் உறவா? தனிமையில் சந் தித்து ஆணும் பெண்ணும் பேசிக்கொள்வதே களங்கமான செயல்தானே? அவர் போக்கை என்னால் தடுக்கவும் முடியவில்லை; பெற்றோ ரிடம் சொல்லவும் முடியவில்லை. உடல்நிலை சரியில்லை என்று பயிற்சியை நிறுத்தி இல்லச் சிறை புகுந்தேன். நீங்கள் வந்து எனக்கு விடுதலை அளித்தீர்கள்.

''தவறு எதுவும் நிகழாவிட்டாலும் மூர்த் திக்கும் எனக்கும் இடையே இனி சந் திப்போ, பேச்சு வார்த்தையோ நிகழ்வது சரியல்ல. கள்ளனை வைத்துக் கதவைச் சாத்தினாற்போல் இருக்கும் இந்தப் புது உறவு. எனவேதான் வேண்டாம் என்றேன்.''

''இது கிடக்கட்டும் விஜயம்! நீயாகச் சொல்லாத வரையில் உன்னைப் பற்றின பழைய செய்திகள் எனக்குத் தெரிய வகை இல்லை. திறந்த மனத்தோடு அனைத்தையும் கூறிய உன் களங்கமற்ற...''



''அதுக்கு என்ன செய்ய கமலா? ஒவ்வொரு பெண்ணும் ரொம்ப ஒசத்தியான வரனுக்கா கத்தான் காத்திருக்கிறாள். என்ன பண்றது? அதுக்குள்ளே அவளுக்குக் கல்யாணம் ஆகி விடுகிறது!''

◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆

''ஒன்றும் இல்லாததை ஓகோ என்று முழக்கும் ஆண் இனத்தில் தோன்றிய நீங்கள் இவ்வளவையும் கேட்டுச் சிறிதும் சலனமற்று இருப்பதைவிடவா?''

''பலே பலே! ஒருவரை ஒருவர் மாறி மாறிப் புகழ்ந்து கொண்டிருப்போமா? ......அ...... நான் என்ன சொல்கிறேன் என்றால், நெருப்பைக் கறையான் அரிக்காது. மூர்த்தி மாப்பிள்ளையாக வந்தால் உன்—''

''விடுங்களேன் அந்தப் பேச்சை! மறுபடி யும் தஞ்சாவூர் போய் அவர்களிடம் பேசிப் பாருங்கள். ஏனென்றால் கௌரிக்கு அந்த வரனில் நல்ல பிடித்தம்!''

''அப்படியா?....''

''சித்தி!....'' என்று அழைத்துக் கொண்டே கௌரி உள்ளே வந்தாள். அவள் கையில் கடிதம் ஒன்று இருந்தது. ''தஞ்சாவூரிலிருந்து'' என்றபடி கௌரி கடி தத்தை நீட்டுகிறபோது அவள் முகத்தில் தோன்றிய பிரகாசத்தையும், இதழ்கள் சிந்திய இளமுறுவலையும் நடராஜன் கண்டு கொண்டான்.

''...மூர்த்தியும் அவன் தாயாரும் உங்கள் பெண் கௌரிதான் வேண்டும் என்று பிடி வாதம் செய்கிறார்கள். அதனால் என் பிடி வாதத்தை நான் தளர்த்திக் கொள்கிறேன். உடனடியாக முகூர்த்தநாளைப் பார்த்து எழுதவும். — ஜம்புநாதன்.''

நடராஜனின் சந்தோஷ மிகுதியில் விஜயத் தின் தோளிலே கைவைத்தான்.

கௌரி சட்டென்று அங்கிருந்து ஓடி மறைந்தாள்.

''என்ன இது!'' என்று கடிந்தபடி அவன் கையை ஒதுக்கிய விஜயம், ''அடுத்த வருஷம் தாத்தா; விளையாட்டைப் பார்!'' என்று முணுமுணுத்தாள்.

''அப்போது நீயும் பாட்டிதானே!''

எங்கிருந்தோ கௌரியின் கலுக்கென்ற சிரிப்பொலி கேட்டது. விஜயமும் நடராஜ னும் ஒருவரை யொருவர் பார்த்துக்கொண் டார்கள். அந்தப் பார்வையில் கவர்ச்சியும் மகிழ்ச்சியும் போட்டியிட்டன.

* பொருள் பொதிந்த கட்டுரை
* தமிழாக்கம் தேவை
* உயரமான சிகரம்
* சீரியாறு திட்டம்

செயற்கை உர உற்பத்தி, விநியோகம் முதலியவற்றில் கடந்த 35 வருடங்களாக ஈடுபட்டிருக்கும் விவசாயப் பட்டதாரி நான். தற்போது விவசாய ஆசிரியராக இருக்கிறேன். ''உணவுப் பயிரின் உணவு'' என்ற பொருள் பொதிந்த கட்டுரையைப் படித்து மிகவும் சந்தோஷமடைந்தேன். தற்போது உள்ள செயற்கை உரங்களின் உற்பத்தியையும், அனுகூலங்களையும் மிகச் சாதாரண அறிவுள்ள விவசாயியும் அறிந்து கொள்ளுமாறு புரியும்படியான மொழியில் வெளியிட்டிருக்கிறார் கட்டுரை ஆசிரியர்.

வாலாஜாபாத்.
28–4–67 டி. கிருஷ்ணன்

✿

கல்கி இதழில் ''கோடைக்கு நீலகிரி'' என்ற கட்டுரை படித்தேன். முக்கரட்டி என்பது 'மூக்கறுத்தி' என்ற தமிழ்ச் சொல்லின் ஆங்கில வடிவம். கூனூர் என்பதும் இவ்வாறே 'குன்றூர்' என்பதன் மரூஉ. குன்று சூழ்ந்த ஊர் குன்றூர். 'ற'கரம் 'ன'கரமாகி, குன்னூர் என வழங்குகிறது.

கல்லார், மோயார் என்பன இம்மாவட்டத்து ஆறுகள். கல்லாறு, மோயாறு என்று எழுத வேண்டும். அடையாறு என்பதை அடையார் என்று எழுதினால் அடையாதவர் என்று பொருள்படும். கல்லார் - கல்லாதவர்.

கிளிப் பள்ளி, உதகை
2–5–67 சோமசுந்தரம்

✿

'கோடைக்கு நீலகிரி' காலத்துக்கேற்ற பயனுள்ள கட்டுரைதான். ஆனால் சென்னை மாநிலத்தின் மிகவும் உயரமான சிகரம் தொட்ட பெட்டாவன்று. மேற்குத் தொடர்ச்சி மலைகளில் ஆனைமலைக் குன்றுகளில் உள்ள ''ஆனை முடி'' என்ற சிகரமே மிகவும் உயரமானது: 8861 அடி. அதற்கடுத்ததுதான் தொட்டபெட்டா: 8640 அடி.

கோட்டயம்,
28–4–67 இரா. மீ. சுந்திரன்

✿

கேரளத்தில் மேற்குத் தொடர்ச்சி மலையில் உற்பத்தியாகி யாதொரு பயனுமில்லாமல் கடலில் போய் விழுந்து கொண்டிருக்கும் சில நதிகளின் தண்ணீரைத் திருப்பி நமது மாநிலத்துக்குப் பயன்படும்படி ஆவன செய்ய வேண்டும். முக்கியமாக வருடம் முழுவதும் வறண்டு கிடக்கும் ஸ்ரீவில்லிபுத்தூர், சிவகாசி, சங்கரன் கோயில் தாலுகாக்களுக்குப் பயன்படும்படியான 'சீரியாறு' திட்டத்தை விரைவில் நிறைவேற்ற வேண்டும்.

அப்போதைய நம் மாநில காங்கிரஸ் அரசாங்கம், இத்திட்டத்தைப் பற்றிப் பல கோரிக்கைகள் வெகு நாட்களாக அரசாங்கத்துக்குக் கொண்டுவரப் பட்டிருந்தும்கூட கேரள சர்க்காருடன் பேச்சு வார்த்தை நடத்துவதற்கு ஒரு முயற்சியும் எடுக்கவில்லை. எங்கள் பகுதியின் முந்தைய சட்ட சபை அங்கத்தினர்களான காங்கிரஸ் கட்சியினர் எங்கள் பிரதேச விவசாயத்தைப் பற்றிச் சிறிதும் அக்கறை காட்டவில்லை.

அதற்கு நல்ல படிப்பினையாக இத் தேர்தலில் இம் மாவட்டத்திலிருந்து சட்டசபைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கும் அங்கத்தினர்களில் பெரும்பான்மையினர் சுதந்திரக் கட்சியினர் என்பது பெருமைப்படத் தக்க விஷயம். விவசாயத்துக்கு முதலிடம் கொடுப்பதிலும், விவசாயிகளின் நலன்கள் நன்கு பாதுகாக்கப்பட வேண்டும் என்பதிலும் மிகவும் ஆவல் கொண்டுள்ள நம் சுதந்திரக் கட்சி அங்கத்தினர்களாவது, வெகு தீவிரமாக, தற்போதைய தி. மு. க அரசாங்கத்திடம் சீரியாறு திட்டத்தை வற்புறுத்திக் கூறி அதனை நிறைவேற்றுவதில் முன்னேற்றம் காண முயல வேண்டும். இத் திட்டம் நிறைவேறினால் வருடம் முழுவதும் பருவ மழையையே நம்பி ஏமாந்து போகும் விவசாயக் குடிமக்களின் நெடுநாளைய ஆவல் பூர்த்தியாவதுடன், உணவு உற்பத்தியும் கணிசமாகப் பெருகும்.

கேரள அரசாங்கமும் கேரளத்துக்கு நம் அரிசியை அனுப்புவதில் ஒத்துழைப்பைக் கோருகின்றது. ஆகையால், இவ்வரிய வாய்ப்பைப் பயன்படுத்திக் கொண்டு சீரியாறு திட்டத்தை நிறைவேற்றக் கேரள அரசாங்கத்தை இணங்கச் செய்ய வேண்டும்.

ஸ்ரீவில்லிபுத்தூர்,
27–4–67 எஸ். ராகவன்

✿

அட்டைப்படக் கதையான 'இதயமலர்'ரைப் படித்தேன். எத்தனையோ மகிழ்வு தரும் சூழ்நிலையில் அமர்ந்து படிக்கும் வாசகரையும் கதைப் பாத்திரங்களின் உயிர்த் தன்மையால் கண் கலங்கச் செய்வதென்பது கதாசிரியரின் திறமையைத்தான் காட்டும். பண்பும் பாசமும் நிறைந்த பாத்திரங்களாக அமைத்துக் கதை எழுதியுள்ளார் கோமகள்.

பம்பாய்-34
6-5-67 மு. நா. முத்துராமன்

Printed & published by R. Ananthanarayanan on behalf of Messrs. Bharathan Publications Private Limited at Kalki Press, Kilpauk, Madras-10.
Managing Editor: T. Sadasivam.



புது அழகுடன் விளங்க

பாண்ட்ஸ் வானிஷிங் க்ரீம் உபயோகியுங்கள்

சருமத்தைப் பட்டுப்போல்
மிருதுவாக வைத்துக்கொள்ளுங்கள்



வெண்பனி போன்ற பாண்ட்ஸ் வானிஷிங் க்ரீமை உபயோகித்து உங்கள் சருமத்துக்கு புதுப் பொலிவை அளியுங்கள். பாண்ட்ஸ் வானிஷிங் க்ரீம் முகத்தில் கரும்புள்ளிகள் தோன்றுவதைத் தடுத்து, எண்ணெய் வழியும் தோற்றத்தை மாற்றி சருமத்தில் வெயிலினாலும் காற்றினாலும் வறட்சியேற்படாமல் பாதுகாப்பளிக்கும். பாண்ட்ஸ் வானிஷிங் க்ரீமை மட்டுமே உபயோகித்தால்கூட முகம் பட்டுப்போல் விளங்கும். அதன் மீது பவுடரும் போட்டுக்கொண்டால் பவுடர் ஒரே சீராகப் படிந்து மணிக்கணக்கில் அப்படியே கலையாமல் இருக்கும்.

சீஸ்ப்ரோ-பாண்ட்ஸ் இன்கார்ப்பொரேடட்
(வரையறுக்கப்பட்ட பொறுப்புடன் யு.எஸ்.ஏ.யில் இணைக்கப்பட்டது)

Registered No. M. 4392
Registered as a Newspaper in Ceylon

இலங்கையில் 40 சதம்
தபால் செலவு தனி